அகஸ்தியர் அருளிய

# மணிகண்ட

# கேரள சோதிடம்

(மூலமும்-உரையும்)



**K.A. மதுரை முதலியார்**

ஷண்முகானந்த புத்தகசாலை

பார்க்டவுன், மதராஸ்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

உ

அகஸ்தியர்-அருளிய

# மணிகண்ட
# கேரள சோதிடம்

(மூலமும்-உரையும்)

---

இஃது

கந்தர ஜெயவீர சூரபராக்கிரம கவிராஜ

சுந்தசாமி பிள்ளை அவர்களும்: நித்யானந்த சுவாமி

அவர்களும் உரை எழுதப்பட்டு,

மரவிரிபாக்கம்

பாலசோதிட கணித நூல் புலவரும், சோதிட ஆசான்

இன்னும் பல சோதிட நூல் கர்த்தருமான

மா. தெய்வசிகாமணி சோதிடர் அவர்கள்

பார்வையிடப்பட்டது

---


பதிப்பாளர் :

**சண்முகானந்தா புக் டிப்போ**

67, T, K. முதலி தெருவு,

சூளை, சென்னை-600 112.

ரிஜிஸ்டர் காப்பிரைட்)  (விலை ரூ: 30



கஸ்தூரி

கல்லூரி நூல்கள் ...ங்கள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நெ. 33

## பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 1 |
| 2 | பூர்வ வரலாறு | 1 |
| 3 | நூலின் சிறப்பு | 2 |
| 4 | முக்கிய கையால வேண்டிய முறைகள் | 3 |
| 5 | லக்னஸ்புடம் | 6 |
| 6 | நக்ஷத்ரம் | 6 |
| 7 | நவக்கிரக பார்வை | 7 |
| 8 | நோக்கினளவு | 7 |
| 9 | பாயிரம் | 9 |
| 10 | நூற்பயன் | 10 |
| 11 | அரிஷ்டகாண்டம் | 11 |
| 12 | நலந்தீங்கு காண்டம் | 23 |
| 13 | நஷ்டி | 24 |
| 14 | சதா முகூர்த்தம் | 24 |
| 15 | அற்பாயுட்காண்டம் | 26 |
| 16 | யோககாண்டம் | 29 |
| 17 | இராஜயோகம் | 29 |
| 18 | பேரியோகம் | 34 |
| 19 | ஏகசக்ராதிபன் | 34 |
| 20 | கெஜயோகம் | 37 |
| 21 | சாம்பிராஜ்யயோகம் | 38 |
| 22 | பலபலகாண்டம் | 38 |
| 23 | உறவு பகை சமன் | 28 |
| 24 | பலன் சொல்லும் விபரம் | 39 |
| 25 | தீர்க்காயுட் காண்டம் | 40 |
| 26 | தீர்க்க வயது | 40 |
| 27 | பிரதியோக காண்டம் | 45 |
| 28 | ஏக சக்ராதிபன் | 53 |
| 29 | நரயோகம் | 53 |
| 30 | சதபாரியனும் உலகாலும் அரசு | 54 |
| 31 | குமுதயோகம் | 55 |
| 32 | முரச்யோகம் | 55 |


CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 33 | சகடயோகம் | 55 |
| 34 | செல்வன் | 56 |
| 35 | தரித்திரன் | 57 |
| 36 | குருபகவான் சொன்னயோகம் | 66 |
| 37 | சுக்கிரன் சொன்ன யோகம் | 72 |
| 38 | அவயோகம் | 89 |
| 39 | சிவிகையோகம் | 93 |
| 40 | ஆயுள்யோகம் | 94 |
| 41 | கெண்டயோகம் | 95 |
| 42 | ஆயுள் காண்டம் | 103 |
| 43 | ராசி சக்கரம் | 106 |
| 44 | தீர்க்காயுள் | 103 |
| 45 | அற்பாயுசு | 110 |
| 46 | அற்பாயுள் | 114 |
| 47 | பிரதி அரிஷ்ட காண்டம் | 118 |
| 48 | தோஷ நிவர்த்தி | 128 |
| 49 | தனக்காண்டம் | 134 |
| 50 | தனலாபம் | 134 |
| 51 | ரோககாண்டம் | 188 |
| 52 | ரோகமின்மை | 138 |
| 53 | தன நஷ்டம் | 140 |
| 54 | ரோகம் | 143 |
| 55 | தனக்காண்டம் | 146 |
| 56 | வெகுபுத்திரர் | 15 |
| 57 | மலடரிய | 156 |
| 58 | சகோதரகாண்டம் | 157 |
| 59 | மாதுருகாண்டம் | 162 |
| 60 | பிதுருகாண்டம் | 167 |
| 61 | களத்திர காண்டம் | 173 |
| 62 | தாஞுதி பலக்காண்டம் | 178 |
| 63 | திசைசக்கிரகாண்டம் | 184 |
| 64 | குரு சொல்லுவது | 184 |
| 65 | சுக்கிரகாண்டம் | 191 |
| 66 | சுக்கிரன் சொல்லுவது | 191 |
| 67 | திரை போசிப்பு மாரக காண்டம் | 195 |


மணிகண்ட கேரள சோதிடம் பொருளடக்கம் முற்றிற்று

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குரு-சிஷ்ய சம்பாஷணை என்னும்

# ஹஸ்த ரேகை
## சாஸ்திரம்




தற்காலம் எத்தனையோ ரேகை சாஸ்திரங்கள் வெளி வந்திருக்கலாம் ஆனால் அது போல இல்லாமல் இதனில் சிஷ்யன் முக்கியமான கேள்வி கேட்பதையும் குரு சொல்வது வெகு விமரிசையாக யிருக்கிறது தானே புத்தகத்தை வைத்து பார்த்துக் கொள்ளலாம் பிறருக்கும் சொல்லலாம் வெகு எளிய நடையிலும்

ஏராளமான படங்களுடன் தெளிவாகவும் சுலபமாகவும் மேனாட்டு அறிஞர்கள் பிரபல மேதாவிகள் படங்களுடன் வெளிவந்து விட்டது சுமார் 400 படங்களுடன் அடங்கியது. பெரிய மேதாவியும் கைரேகை அனுபவம் வாய்ந்த நிபுணருமான K. S. சிவசுப்பிரமணியம் அவர்களால் இயற்றப்பட்டது;

இதன் விலை ரூ. 30

---

கிடைக்குமிடம் :

**சண்முகானந்தா புக் டிப்போ**

67, T. K. முதலி தெருவு

சூளை, சென்னை-600 112

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

# மணிகண்ட கேரள சோதிடம்

## முகவுரை

**பூஜவ வரலாறு:**

ஆழி சூழ் இவ்வுலகை ஆக்கியவன் இறைவன், முத்தொழில் தலைவனும். முக்கண்ணனும் முழுமுதற் சக்தியுமாகியபரமேஸ்வரன் உலகை ஆக்சினார் உலகம் சுற்றிக் கொண்டேயிருந்தது. ஆனந்தமூர்த்தியாகிய பெருமான் நர்த்தனமிட்டவாறு ஆத்மாக்களை-சகல ஜீவராசிகளை ஆடஅசைய வாழவைக்கிறார் மக்கள் வனங்கள் விலங்குகள் யாவும் வாழ்கின்றன. வாழ்வின் தாத்பர்யங்களையோ அல்லது வாழ்க்கை தத்துவங்களையோ வாழ்க்கையில் ஏற்படும் மாறுபாடுகள் உயர்வு தாழ்வு நன்மை திமைகள் அக அசுபம், அசுபம்இத்யாதிகளை அறிந்து மக்களினம்என்பதற்கு ஏற்றபடி நடக்கிறதா? என அறியவேண்டி மோனநிலையில்அமர்ந்தார்நிஷ்டையிலிருக்கும் பரமஸ்வரனை அனுகினான் பார்வதி காரணம் புரியாமல் கணவர் ஏன் அமைதி நாடி நிஷ்டை ஏற்றார் என புரியவில்லை உடனே உமைக்கு ஒரு யோசனை கிளம்பியது. வில்பவத்திரத்தையெடுத்து சுவாமியை அர்ச்சிப்பதுபோல் பொன்மேனியில்வர்ஷீத்தால்.மெய்யில் மெல்லியவில்வஇலைகள் மென்கரங்கலால் வாஷிக்கப்படுவதைபார்த்தார் பரமன், அகமகிழ்ச்சியோடு கண் திறந்தார், உமையவளான பார்வதிதேவியைப் பார்த்தார்? பரமேஸ்வரன் அவள் புன்னகைப்பூத்தாள் பரமேஸ்வரன் பார்வதியின் புன்னகையின் பெருளை புரிந்து கொண்டார் மெல்ல சிரித்தார் சிவபெருமான் காரணத்தை விளக்குவதைப்போல் பார்வதிக்கு சொல்ல ஆரம்பிக்க அதே நேரத்தில் அங்கே அஸ்தியமுனிவர்வர அவர் வணங்கி எழுந்து பரமேஸ்வரர்கூறுவதைகேட்கலுற்றார் அதாவது உலக படைப்பின்தத்துவத்தையோ வாழ்க்கையின் சென்ற கால-எதிர்கால பலன்களையோ மக்களறியாமல் உழல்கிறார்



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கள் என அறிகிறேன் அதற்குரிய வழிக்கே இந்த நிஷ்டை, ஆகையால் அவர்களுக்கு உணர்த்தவேண்டியிருக்கும் அவ்வுண்மைகளுக்கு தகுதியானவர்? அவர்களுக்கு வேண்டிய சக்திகள் எப்படி அனுகிரகிப்பது என்பதே இப்போதைய நினைவு என பரமேஸ்வரன் கூறினார் உடனே பார்வதிதேவியார் ஸ்வாமி, நம் திருக்குமாரர்களில்வினாயகன், சுப்பிரமணியன் ஆகியோர் இருக்கிறார்களே அவர்களைஇத்தொழிலுக்கு அனுப்பி அனுகிரகிக்கக்கூடாதா? அதற்கு பரமேஸ்வரன் அவர்கள் பூ உலகில் போய் மானிட உருவில்உணர்த்துவது எளிதன்று' இதோ இருக்கும் அஸ்தியனும்நம் குமாரர்களுக்கு சமமானவன், அவனே பூ உலகில் பழகியவன் அவன் முலம் அதை உலகம் அறியட்டும் என்றார் சந்தோஷித்த உமை உடனே அகஸ்தியனுக்கு ஆசீர்வதித்தாள் பரமேஸ்வரன் ஆசிகூறினார்

பரமேஸ்வரன் மொழிந்ததை தண்டனிட்டு கேட்டு அதன் பின் ஆசியும் பெற்று பூலோகம்வந்தார் மக்கள்வாழ்கின்றார்கள் இவையெல்லாம் பார்த்த அகஸ்தியர் மக்கள் தங்கள் வாழ்வதை அனுபவிக்கும் பயன்களின் நோக்கம் இவைகளை அறியக்கூடிய ஒரு சக்தி இல்லை என்பதை வெகுவாக புரிந்துகொண்டவராய் தான் வணங்கும் தன்பெரும் தலைவரான முருகக் கடவுளை நினைத்தார் அந்நினைவினோடே தெற்கேயுள்ள திருச்செந்தூர் விறைந்தார் இறைவனைப் போற்றி இறைவனே? எந்தையே? அடியேன் சந்தேகத்தை நிவர்த்திக்க இறைஞ்சுகின்றேன். அதாவது பூமண்டலத்தில் ஜனனமாகிய ஆண், பெண் ஆகியவற்றின் நலம் அசுபம இவைகளை தெரிந்துகொள்ளுவதெப்படி என்பதறிய உம்மை வேண்டுகிறேன் என்றஉடன் முருகக் கடவுள் அகஸ்திரியிடம் தன் பக்தியைக்காட்ட உடன் அகஸ்தியர் முருகக்கடவுளின்பத்தியாராகியநாயகியானாகிய வணங்கவேட்கலுற்றும் அவர் உபதேசித்து அறிவிப்பது தான் இந்த ஜோதிட நூல்

## நூலின் சிறப்பு

தவயோகிகள் முனிபுங்கவர்கள் சித்தவரோன் மணிகள் ஆகியோரெல்லாம் சோதிட நூலைப்பற்றிதுர்க்கித்து அதனைநிலை நிறுத்தினர் ஆனால்தற்போது இந்நூல்மிகவும்சிதறண்டுபோல் விட்டதெனலாம். கால வெள்ளத்தில் இது இயற்கை ஜோதிடம் கூறுவோர் காலைகடன்களை முடித்துபூஜை நைவேந்தி பங்கள்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நடந்த பின் சத்தியம் தவறாமல் பிறருக்கு சொல்ல வேண்டும். மனிதன் தன் கால நிலையை அறிவதற்கே சோதிடம் கேட்கிறான் ஜோதிடர்களிடம் அவன் எதிர்பார்ப்பதுமுக்கியமாக அவனுடைய எதிர்காலத்தையே, ஆகையால் ஜோதிடர்கள் ஜாதகனுடைய குறிப்புகளை வைத்துக்கொண்டு ஒழுக்கமுடனும்உயர்ந்த நோக்குடனும் கூறவேண்டும். கிரக நிலை-கிரகபலன்கள்- ஆகியவைகளை சோதிட சாஸ்திரத்தில் இழிக்கும் பாடல்களை கொண்டு அக்கால நிலையை உத்தேசித்து சூழ்நிலைக்கேற்ப பலன்களை கூறி ஜாதகனை மகிழ்விக்கலாம். தெய்வ வழியில் வந்த சிறப்புடையதாகையால் இந்த நூல் தகுந்த முறையிலும். போதிய சான்றுகளும் கொண்டவை நடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகிய முக்காலங்களுக்கும் மூல கருவியாக உடைய தே ஜோதிட நூல் பல சிறப்புகள் கொண்ட இந்த சாஸ்திரம் ஆதி பரம்பரை சொத்து எனலாம் மக்களை உலகில்நம்பிக்கையுடன் வாழ வைக்கவும் அவர்கள் ஆறுதல் தேறுதல் ஆகியவறோடு உலகில் நடமாடுவதற்கு முக்கிய வழிகாட்டி மக்கள் தங்கள் அபிலாஷங்கள். நம்பிக்கைகள் நற்பண்புகளையும் கொண்டு துலங்கவும் இத்தகைய நூல்களே உலகில் வழிகாட்டியாக இருந்துள்ளது இந்த ஜோதிட நூலின் பலன் அவரவர்கள் தங்கள் நிலைகளை உணர்ந்தவர்களாகி வாழ்ந்துவருவதற்கும். அவர்களின் நிலைமையில் எப்படி மாற்றங்கள் வருகிறதுஎன்று அறிவதற்கும் மாற்றங்களுக்கு ஏற்றபடி தங்களைதயார் செய்து கொள்வதற்கு போதிய படிப்பினை இதிலுண்டு.

## முக்கிய கையாள வேண்டிய முறைகள்

இதனை பிறருக்கு (ஜோதிடம் கூறும்போது) தெரிவிக்கையில் லக்ன ஸ்புடம்-நட்சத்திரஸ்புடம்:கிரகஸ்புடம் கிரக அடைவுபார்வை, சேர்க்கை, சத்ருமித்ருநட்பு உச்சம் பகைநீச்சம், மண்டலம், சராம் சமயம் பருவம், கலச்சக்கரம் அட்டவர்க்கம் முதலியவைகளால் ஆராய்ந்து நல்லபடி கூறவேண்டும் அவரவர்கன் சக்திக்கேற்ப கொடுக்கும் காணிக்கையே பெற்றுக் கொள்ளவேண்டும் அதைவிட்டு ஜோதிடம்சொல்பவர்பசியுள்ள போதும் நித்திரை நேரத்திலும், அகாலங்களிலும், பிணியுற்ற போதும் காலை கடனை முடிக்காத போதும் ஸ்நானம் செய்யாதும், கூறுவார்களேயாயின் பயன் சிறிதும் ஏற்படாதென்று அறியவும், மேலும்,இச்சோதிடத்தைசாஸ்திர நம்பிக்கையற்றவனும் தெய்வ பக்தியற்றவனும் சோதிடம் கூறுகையில் கேலி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பேசுபவனும் கபட வேடதாரியும் கேட்டால் பலன் கிடையாது. துர்க்காரியம் செய்வதற்கு கேட்போர், பத்னிதுரோகம் ராஜ துரோகம் குரு துரோகம்மாதாபிதா துரோகம்சினேகதுரோகம் போன்ற துரோகங்கள் செய்பவர்கள் முடியுமா முடியாதா என கேட்போர் புதையில் கிடைக்குமோ கிடைக்காதோ பெண்ணை கன்னிவைக்கலாமா என்று வினவுவோர், ஆகியவர்களுக்கு இந்நூலை உரைக்க கூடாது பாபம் செய்வோர் யாவரும்தங்கள் பாபநிவர்த்திக்குஏதுதேடிக்கொள்ள துடித்து காலத்தை எதிர்ப் பார்த்திருக்கலாம் அவ்வகையினருக்கு தகுந்தவற்றை உட னுக் குடன் இந்நூலின் உதவியால்

உலகின் கண் உற்பத்தியாகும் ஆண்மைகோடிகள் பல் வேறுயோனிபேதங்களைக்கொண்டுஜனிப்பதுபார்வதிகுமாரன் ஸ்ரீ சுப்பிரமனியக் கடவுளருளாலேயேதான். அகஸ்தியர் சகல லோக சம்பிரதாயங்களை அறிய ஆவல் மேலிட்டால் திருச் செந்தூர் குமரனை வேண் - அவர்கூறியதாவது சோதிடத்தால் அறியக் கடவர் மாந்தர் அதாவது ஜோதிடம் கூறும் இரகசியம் யாதெனில் சூரியமார்க்கத்தில் சென்று முக்தியடைபவர் புண்ணி யர் எனவும் பாபாத்மாக்கள் சந்திரமார்க்கத்தில் சென்று தமது வினைகளுக்கு ஏற்ப ஜனன, மரணங்களையடைவர் அவ்வாறு தோன்றலாம் தரித்திரம் தீமை நன்மை யோகம் துற்கு ணம் அற்பாயுள் தீர்க்காயுள், போன்றவற்றையடைவார்கள் இதனையறிதல் பொருட்டே ஆகாயத்தில் நட்சத்திரங்கள்கிருட் டிக்கப்பட்டன என்றும் உறைந்தார் என பண்டைய சாஸ்திரங் கள் ஏட்டுச்சுவடி மூலமாக தெளிவாக்குகிறதுபனோத்துவ சாஸ் திரங்களிலும் இரேகைசாஸ்திரங்களினும்நிகழ்காலங்களைதான் அறியலாம் முக்கியமாக மேலும் அறியமுடிந்தாலும்எதிர்காலத் தைப்பற்றி சிறிது அறியலாம் ஆனால் இந்த ஜோதிட நுல் ஒன் றிலே மட்டும் நான்கடந்தகாலமர்மங்களைஸ்பஷ்டமாக அறிய முடியும் இப்பூமண்டலத்தில் பிறக்கும் மனிதராசிகள் யாவும் செயல் குணம் நிறம் பால் உருவபேதம் அறிய ஆகியவைகளால் மாறுபட்டுள்ளதல்லவா? அதன் மூலகாரணம் யாதெனில் மக் களாக்கப்பட்டவர்களின் கர்மவினை தான் என சுருக்கமாக கூறப்பட்டுள்ள ஒரு கருத்தை பொதுவாக யாவரும் அறியும்படி தெளிவாக்கி உரைக்கப்பட்ட பொக்கிஷம்தான் ஜோதிட சாஸ் திரம் இந்த ஒப்புயவர் வற்றறூல்ஆதியில்பல தேவரிஷிகள் மக்க ளிடம் பரவவேண்டிய பிரசாரம் நடத்தியதாகக்கூட உண்மை

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

யான உரைகள் பல ஏட்டு சுவடிகள்எழுதப்பட்டுள்ளது, ஜோதிடர்களின் மனநிலை என்றும் ஒருபண்பையிழக்காமல் இருந்து இந்நூலின்உட்பொருள் கருத்துகளை நிதானமாகவும்தெளிவாகவும் கேட்பவர்களுக்கு எடுத்துக்கூறி நல்ல பயனடைய செய்யலாம் அவர்களின் தாழ்வுகால நிலைகளைக்கூட சூட்சமமாக உபதேசித்து அதன்படி அவர்கள் புரிந்துக் கொள்ளவும் செய்ய முடியும். நம் சரீரமானது எலும்புகளாலும் நரம்புகளாலும் தசைகளாலும்கட்டிட ஓர் வீடாகும.எலும்பாகியகழிகளை நரம்பாகிய கயிற்றால் கட்டி, தசையாகிய கூரையால் முடிகாற்றென்றும் ஓர் ஜீவனை அதனுள் குடிவைத்திருக்கிறது இக்கட்டிடமானது நாம் பூமியிலுதித்தலன்றே கட்டம் முடிவடைந்ததாக எண்ணுதல் கூடா! அக்கட்டடத்தில் அநேக குறைகள் இருக்கிறது சிலருக்கும் சுமார் ஒரு வருஷம் பொருத்த பிறகே ஓர் பல் முளைக்கும் சிலருக்கு இரண்டு வருடம் கழித்த பிறகே' தவழும் சக்தியுண்டாகிறதுஇவ்விதம் நாம் ஆராய்ச்சிசெய்வோமானால் சிலநாள் கழித்த பிறகே அந்த கட்டிடம் முடிவடைகிறது எனத் தென்படுகிறது இதுபோலவே நம் தேகத்திலுண்டாகும் வியாதி செய்கை குணம் இவைகளை, கவனிக்குமித்தது இவைகளுக்கு காரணம் உஷ்ணத்தைப் பெற்று சூரியனாலும் குளிர்ச்சியைப் பெற்ற சந்திரனாலுமேயாம்எந்நேரமும் உஷ்ணமாகிய சூரிய வெளிச்சத்திலேயே இருப்போமானால், நம் திரேகத்தில்ஓர் வித வியாதியுண்டாகிறது. சந்திரனுடைய குளிர்ச்சியிலேயே இருப்போமானால் ஓர் விதமான குளிர்ச்சியுண்டாகிறது.இப்படிசூட்டினாலும்குளிர்ச்சியினாலும், ஓர்விதப் பக்குவமடைந்து வருங்காலம் நாளுக்கு நாள் அதிகமடைந்தால் பருவகாலம்ஒன்றோம் சிலர் திரேக உஷ்ணம் மதிகமாகியும், சிலர் . திரேகம் குளிர்ச்சி யுடையதாயும் இருப்பதையும் நாம் காண்கிறோம் இவ்வாறே பெண்களுடைய திரேகத்தை கவனிக்குமிடத்து, அவர்கள் திரேக மாகியகட்டிடம் முடிவ்டைந்து வரும் போது, அவர்களுடைய திரேகமும் சூட்டினால்,குளிர்ச்சியாலு பொருந்தியுள்ளது - அப்படிப்பட்ட குளிர்ந்த திரேகத்தின் மீது சூரியன் தன் முழுகிரணத்தோடு, தன் சுவாயை அப்பருவ பக்குவமுடைய பெண ணின் மீதுவீசுவானாகில், அவள் திரேகத்தின் மீது சூரியன் தன் முழுகிரணத்தோடுதன்சுவாலையை அப்பருவ பக்குவமுடைய பெண்ணின் மீது வீசுவானாகில், அவள் திரேகத்திலுள்ள பித்தத் தினால் அதிகமாகி ரத்தம் வெளியாக வரும் மார்க்கம் தேடுகிறது. உஷ்ண தேகத்தின் மீது, சந்திரனுடைய குளிர்ச்சி தன் முன் கிரணந்தோடுரை

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

த்தாலும், இவ்வித மேற்படுகிறது, ஆனால் அவ்வுதிரமானது பல வழிகளில் வெளியாக வழியுண்டெனினும் அவ்விதம் வேறு வழியில் மேல் நோக்கிச் செல்லுமாகில் ஓர்விதஆபத்துண்டாகி மரணத்திற்கேதுவாகும் அதனாலேயே கடவுள் தன் மர்மஸ்தான வழியாய்வெளியாக்குகிறார். அதையே ருது எனப்படும் அது முவல் மாதற்திற்கொரு முறை மாதவிடாயாகி வருகிறது ஏனெனில் அனுதினமும் சூரியன் உஷ்ணமும் சந்திரன் குளிர்ச்சியும்உண்டெனினும் அவரவர்கள் உடலில்மறுபடியும்அவ்வுதிரம் சேர சுமார் மாதங்களாகிறது. இப்படியே தன் திரேகமாகிய கட்டிடம் தளர்ச்சியடைந்து இரத்த விருத்தி குறைந்து போகிற படியால்அந்த ஸ்ரீகளுக்கு மாதந்தோருமுண்டாகும் மாதவிடாயும் நின்றுவிடுகிறது சிலருக்குத்தன் திரேகத்திலேர்படும்வியாதியால் மத்திய காலங்களிலும் நின்றுவிடுகிறது. சிலருக்கு தன தாய் கெர்பத்திலுண்டாகும்பிணியால்தான் பருவ பக்குவமடைந்த பின்னங்கூட, அவள் திரேகத்தை இந்த உஷ்ணமும்குளிர்ச்சியும் ஒன்றும் செய்யக் கூடாமையா எந்த நாளும் அவ்வாறில்லாமலேயே நின்றுவிடுகிறது. முன் சொல்லியபடி தாராளமாய் அவ்வுதிரம் வெளிவரவே அக்காலத்தில் அத்துவாரமானது அதிகமாகிறது. அதை ருது என்கிறோம் ஜோதிடர்களும் யான் சொல்வது யாதனில். ஒவ்வோர் நாளையும் முன் சொன்ன சூரியனும் சந்திரனும்பூரண கலையுடன் தன்முழு கிரகண முண்டாக்கும் தரத்தை கண்டுபிடித்துக் கொண்டால் ருதுநேரம் என்று திர்மாணிக்கலாமாகையால் நீங்கள் சூரியன் சந்திரன் இவர்கள் தன் உச்சகிரகண காலத்தைத் தெரிந்து அக்கால்படி லக்ணமெடுத்து ருது பலன் சொல்ல வேணுமாய் கோருகிறேன் இவை என் கற்றறிவுக்கேற்றவாறு, எழுதியன வாதலால் கற்றுத் தெரிந்தோர் குற்றமிருக்கின் மன்னிக்கக் கோருகிறான்.

## லக்ணஸ்புடல்

உதையாதி நாழிகையை 4ஆல் பெருக்கி அதனோடு ஜெனனராசி சரமாகில் சரம்5 ஸ்திரம்10 உபயம் 15 எனக்கூட்டியும் ஸ்திர ராசியாகில் ஸ்திரம் 10 உயரம் 15 எனக் கூட்டியும் மொத்தமாக்கி 27 ஆல் வகுத்த மீதியை ஜெனன கால்ப்போது சுக்ல பக்ஷமாகில் அஸ்வனி முதாகவும் கிருஷ்ணபக்ஷமாகில் அவிட்ட முதலாகவும் எண்ணி வரும் நக்ஷேத்ரமும்.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஜெனன நக்ஷத்ரமாகவே அல்லது அதற்கொன்பதாம் நக்ஷேத்திரமும் அதற்கொன்பதாம் நக்ஷேத்திரமாகவரின் அவை உத்தையாதிகை சரி எனவும், மாறாகவரில் முன்னாகவும் பின்னாகவும் கழித்தும்காட்டியும் மேற்சொன்னபடி பார்ப்பதேயாகும்.

நட்க்ஷத்ரம்

| | | |
|---|---|---|
| அஸ்வணி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூரம் |
| கார்த்திகை | உத்ரம் | உத்ராடம் |
| ரோகிணி | அஸ்தம் | திருவோணம் |
| மிருகசிரம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திராட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

மேற்சொன்னபடி 9க்கு 9ஆம் நக்ஷத்ரங்கள் வரின் அந்த நாழிகை சரி என்பதாகும் இப்பால் ராசிகள் 12க்கும் சரம் ஸ்திரம் உபயமென்பவைப் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 12<br>உபயம்<br>15 | 1<br>சரம்<br>5 | 2<br>ஸ்திரம்<br>10 | 3<br>உபயம்<br>15 |
| 11<br>ஸ்திரம்<br>10 | | | 4<br>சரம்<br>10 |
| 10<br>சரம்<br>5 | | | 5<br>ஸ்திரம்<br>10 |
| 9<br>உபயம்<br>15 | 8<br>ஸ்திரம்<br>10 | 7<br>சரம்<br>5 | 6<br>உபயம்<br>15 |

இவ்வாரறிந்த பிறகு அவன் ஜெனன நட்சத்திரம் அறிந்து அந்த நட்சத்திரத்தில் சென்றவை போக இருப்பு நாழிகையைக்

CC-0T Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

காண வேண்டுவது அவசியம் நக்ஷத்திரத்தையும் ஸ்புடம் செய்வது உத்தமமாகும்.

## நவக்கிரக பார்வை

இரவிக்கும் சசிக்கும் புதர் புதர்க்கும் ராகு கேதுக்கும் ஏழேயாம் கருணைதியர், நாலேழெட்டு, சுவிக்கும்பொன்னன் ஐந்தேழென்பது,குவிக்கும் சனிக்கும் முன்றேழுபது என்ற வாக்கியபடி சூரியனுக்கும் புதனுக்கும் சந்திரனுக்கும் சுக்கிரன் ராகு கேது இவர்களுக்கு, 7 ஆம் வீடு பார்வை குஜனுக்கு நான்கு 7, 8 இவ்விடம் பார்வையாகும் குருவுக்கு ஐந்து ஏழு ஒன்பது பார்வையாகும் சனிக்கு 3 7 10 பார்வை எனப்படும்.

## நோக்கினளவு

தோற்றுமதி பொன்னவனு மெதிர்ராக நோக்கும்
சூரியனும் செவ்வாயுங் கடைக்கண்ணால் நோக்கும்
சாற்றியமால், வெள்ளி தலைக் கவிழ்ந்து நோக்கும்
நனி பாம்புமொரு கண்ணாற்றான் பார்க்குமென்பர்
போற்றிரவிபுகர் செவ்வாயிராகு சனி திங்கள் என்பதாம்.

இவ்விதமாக ஆதார மேற்கோள்களைக்கண்டு ஜாதகம் பார்க்க தகுதியடைந்தவர்களானவர் இந்த அகஸ்தியர் மணிகண்டகேரளம் எனும் திவ்ய ஜோதிட பூர்வீக நூலை படித்து அதனை ஜோதிட முறையில் விள்க்க வேண்டும்.

இதில் உள்ளவையாவும் செய்யுட்களே, அந்த செய்யுட்களின் கீழ் பொழிப்புரையை கருத்தோடு கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆதலின் அதனை பாவத்துடன் கிரகித்து பலன் சொல்லுதல் வேண்டும் அவ்விதம் சிறப்பு முறையில் நூலை படிப்பதனாலும் அதன் பலனை பிறருக்கு தெரிவிப்பதனாலும் இப்புனித நூலின் பலாபலனை திறமையும் கேட்டு அறிந்து கொள்ளுவதனாலும் ஏற்படும் சுபங்களை சொல்ல இயலாது. இந்த ஜாதக நூலை சொல்வர் பலனை கேட்பவர் இருவகையாகும் முருகனுடைய திவ்ய அருளை பூரணமாகப் பெற்று ஒழுகுவர்.

இங்ஙனம்,

தங்கள் அன்பன்

**மா. தெய்வசிகாமணி சோதிடர் அவர்கள்**

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அகஸ்தியர்—அருளிய

# மணிகண்ட கேரள ஜோதிடம்

(மூலமும்—உரையும்)

(பாயிரம்)

பார்வதி வாணிலக்ஷிமி பரமேசன் பிரமன் விஷ்ணு
கார்முகன் கந்தனேழு கனத்ததோரிஷிகடங்கள்
சீர்பதந்தெண்டனிட்டுத் தெரிசித்தல் வேண்டல்
செய்தே
ஓர்மதியுதையங்கொண்டிங் கிற்றதுகூறலுற்றாம்.

(இ-ள்) உலகெலாம் படைத்தருளிய பரமனையும் அவரின் பத்தினியாகிய பார்வதிதேவியும் கல்வியை ஆபரமாக அணிந்திரா நின்ற, வீணையந்தும். சரஸ்வதியும், ஆதியில், இவ்வுலகத்தை தந்தருளிய ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பத்தினியாகிய லஷ்மி தேவியும் சிருஷ்டி யென்னும் தொழிலையுடையபிரம்மவேதனையும், ஆதிசேட சயனனென்னும் ஸ்ரீமகாவிஷ்ணுவையும், மேகத்தைப் போன்ற இருணட முகத்துடைய விக்னேஸ்வரனையும் சூரசம்மாரம் செய்வதற்கே ஒருவாயவரித்த கந்தவேலையும் தெண்டனிட்டும் மன உண்மைக் கருத்தோடும் தெரிவித்து பணிந்தும், இவ்வுலகோர்க்கு பூர்ண சந்திரன் பிரகாசிக்கும் காலம் எவ்வண்ணம் சந்தோஷிக்குமோ அதுபோல் சந்தோஷமடையும் வண்ணம், உண்லமயான மொழிகளைக் கூறுவோம் எ-று.

வி-ரை. இந்நூலானது அகஸ்தியரானவர், இப்பரத கண்டத்தின் ஓர் பகுதியானசெந்தமிழ்நிறைந்த. திருசெந்தூரென்னும் நகருக்கு அடிக்கடி வருவார் போவாயினும் உலகத்தில்ஜெனித்த சிலர் தரித்திரராகவும் சிலர் செல்வந்தராகவும் சிலர் அழகிய சரீர உறுப்பினராகவும் சிலர் கூன், குருடு,செவிடு,பேடிமுதலிய பின்னமுடைவராகவும் சிலர் வைராக்கியமுடையவராகவும் சிலர் கோபமில்லாத காந்தமுடையவராகவும் இன்னும் பற்பல வாறு ஒருவர்க்கொருவர் பேதப்பட்டிருப்பதை கண்ணுற்று

மணி-2

CC-0 Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இச்சம்பிரதாயங்களை எவ்விதத்தாலறியலாமென யோசித்து முடிவில் கணித ஆராய்ச்சியாகிய சோதிடத்தினாலேயே அறியலாமென தீர்மானித்தும் இவையாவும்.

நல்லதோர் வேதமூர்த்தி நாதனார் சொன்ன நூலாம்
வல்லதோர்கிரந்தவாக்கிய மதையிந்த மாநிலத்திற்
சொல்லதுதெரியாதார்க்குந் தமிழ்சொன்ன சீருர்வேத
வல்லவன் சோழிநூலில் வகுத்தலங்காரந்தானே

(இ-ள்) இக்கலியுகத்தில் கணகண்ட தெய்வமாக விளங்கும் சிவசுப்ரமணிய கடவுளாலேயே அறியாலாமென தீர்மானித்தார். ஏதெனில் உயிராகிய இரவி என்னும் பரமசிவன் புத்திரனான சிவசுப்ரமண்ய கடவுளன்றும் சகல தேவர்களாலும் வெல்லுதற்கரிய அறிய சத்ருசங்காரனும் நமச்சிவாயாவென்னும் பஞ்சாக்ஷரத்திற்கு மூலாதரமான ஐம்பத்தோரக்ஷத்திற்கு ஆதாரமான புரு திவு என்னும் நகரமாகிய குருவென்றும் பிரகஸ்யதியையும் அப்புவென்னும் மாகரமாகிய சுக்கிரனையும் தெய்வென்னும் ஆகாயமாகிய யகாரமாகிய சனியையும் இப்படித் தவத்துவார்த்தங்களையமைத்து அகார, உகார, இகார, மகார, விந்துநாதமே ஆதாரமாய் இடையின் கலை, சுழி முனை என்னும் அறிய கயிற்றால் மேற்சொன்ன நவகோட்டைகளையும், சரியாய் நிறுத்தி, நல்வினையிடமாய் வரும் மக்களுக்கு துன்பம் வறுமை மனஸ்தாபம் முதலியவைகளையும் தந்தருளிய சிவசண்முகக்கடவுளே கண்கண்ட தெய்வமெனத் தீர்மாணித்து அவரை யனுகிகேட்க, அவர் தமது பத்தியைக் காட்ட அவ்வம்மையார் உபதேசித்த படியால் இந்நூலை நம் போன்றோர் காணும் பொருட்டு இந்த நூலை உறைத்தருளினாராகையால் முதன் முதலாக பார்வதி என்னும் தமது அன்னையின் பெயரை கூறலாயினார் என்றறிக.

## நூற் பயன்

செகத்தினிலுதித்தபேர்க்குச் செல்வமும்பகையுங் காண
மிகுந்ததோர் துயரந்தன்னின் மிகயோகமதிப்புங் கண்டு
யுகத்தினிடக்குங்கர்மம்வேதனுண்டாக்கிச்சொன்ன
விதத்திலுள்போர்க்கு விவரமேதெரியச்சொல்வோம்.

விதக்தி ளாலென்பது இனிவெதுகை இவ்வெதுகை இந்நூலில் பெரும்பாலும் வருவன காண்க.

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) இப்பூவலகிலுத்தித்தோர்களில் செல்வம் பகை வறுமை கொடிய துயரம் யோகம் யோயெமுண்டாகும் காலம் அவன் ஆயுளிலுண்டாகும் கருமம் இவைகள் ஏற்கவெனவே ஒவ்வொருவருக்கும் கால விபரங்களை வேதமூர்த்தியின் திருவருளால் இங்கு விபரமாக கூறுவோம் எ.று.

## நூல்

### அரிஷ்டகாண்டம்

### பாலாரிஷ்டம்

**உதித்தது விரையமெட்டி லொளிர்மதியரசன் கூடித்**
**திதித்தனினின் றாரா கிற்றிறபலனுறுதியாகும்**
**விதித்ததியாண்டில் விளையுமேதீமபாய்மாதே**

| | | | |
|---|---|---|---|
| 12 | ல 1 | 2 | 3 |
| 11 | இராசி 12 | | 4 |
| 10 | | | 5 |
| 9 | 8 | 7 | 6 |

(இ-ள்) ஜெனன லக்கிணத்திற்கு 12-8 ஆம் ராசிகளில் பிரகாசத்தையுடையசந்திரனும் குருவும் கூடியிருக்க அல்லது மேற்சொன்ன ஸ்தலங்களில் ஒருவருக்கொருவர் சகிதமின்றி தனிந்திருந்தாலும் அவன் ஆயுளுமுண்டுசுபகோட்கள் ஜெனனலக்கினபதி இவர்கள் 6-8 ஆம் ராசிகளிலிருப்பாரோயாமானால் கட்டாயம் கொண்டமுண்டு அவை அவன் ஜெனித்த 12 ஆம் வருஷம் தீமபும் கொண்டதுமுண்டாகுமென்றுங் கூறுக எ-று.

**மந்தன் சேயிருவர் கூடியிருந்திடத்தவுந்தீது**
**அந்தெதிரிடமுமாகா தறுதியாய்த் தீம்புண்டாகும்**
**உந்தவர்நான்கு மூன்று மோரெட்டும் பந்துநோக்க**
**அந்தமாய் நினைப்பர்கண்டா யாறிருமாதந்தன்னில்.**

(இ-ள்) சனியோடு குஜன் கூடி எந்த ராசியிருந்தாலும், துன்பமேயுண்டாகும் மேற்சொன்ன இரண்டு கிரகங்களும் ஒருவருக்கொருவர் நோக்கினாலும் திதே விளையும் சுபகோட்கள் சுகஸ்தானம் சகோதரஸ்தானம் ஆயுள் ஸ்தானம் காரியஸ்தானம் இவ்விராசிகளை நோக்குவரேழ் அந்த ஜாதகன் ஜெனித்த ஒரு வருடத்திற்குள் துன்பம் கிடைக்கும் எ-று

விதை குஜனும் சனியும் கூடில் துன்பம் என்பது சனிக்கும் குஜனுக்குமுள்ள சத்ருத்துவத்தினா லென்பதாம் நோக்கமுற்றிருந்தாலும்கூட அவர்களுக்குள்ள விரோதத்தால் பகையே செய்வார்கள் அவர்கள் 4 3 8 10 இவ்விடங்களைப் பார்த்தால் ஒரு வருஷத்திற்குள் துன்பங்காட்டும் என்றது அவர்கள் 6 8 1 2ஆம் இராசிகளிருக்கக்கூடாதென்பது சாஸ்த்திர சித்தம் சுபர்கள் திரிகோணங்களிலேயே நிற்கின்ற சுய பலனுண்டு.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

**வலமதிலரவங்காரி வந்திடத்ததுவுந்தீது**
**குலமதிலீன்றசுற்றங் குடியதமாகச்செய்யும்**
**பலனது செய்யுந்தீது பன்னிரண்டாண்டிற்காணும்**
**சலமதுவாகத்துன்பஞ் சலிப்பிடனருப்பன்மாதே.**

(இ-ள்) ஜெனனராசிக்கு வலப்புறத்தில் அவையாவன 6 ராசிக்குள் சந்திரனும் இராகுவும் சேர்ந்து இருப்பார்களானால் கொடியதேயாம். அதன் பலனென்னவெனின் அந்த ஜாதகன் ஜெனித்த 12 வருஷங்களுக்குள் தன்னை ஈன்ற தாய் வம்சத்தாரையும் சுற்றத்தாரையும் இல்லற முதலியவைகளையும் அதம் செய்யும் ஷை 12 வருஷம் வரையிலுமே துன்பம் சலிப்பு இவை யாவும் உண்டாகும் எ-று

வி-ரை சந்திரனோடு இராகு சேர்வது கிரகணதோஷ மென்பர். சந்திரன் மாதுரு காரகனாகையால் தாய்வம்சத்தாருக்கும் தாய்க்குலமே கொடிய தோஷம் உண்டு இத்தோஷம் நீங்கும் நீங்காதென வறிய வேண்டில் 4 ஆம் வீட்டோனாலும் நான்காம்வீட்டிலிருக்கும் கோட்களாலும் நிலை கூறவேண்டும்.

**கரும்பார்புஞ்சனியுங்கூடிக் கலந்துடனிரவிநிற்க**
**வரும்பாடுபிதுர்க்குதோஷம் வகைவங்கிசத்தை கொல்லும்**
**திரும்பாது தீதாய் நிற்குத்தீன் கொன்தாண்டிற் கொல்லும்**
**கரும்பூதமறைந்திட்டாற்போற் கலங்குவன் புவியின் மாதே**

(இ-ள்) கேதுவோடு சனி சேர்ந்திருக்க அவ்விருவரோடுசூரியன் சகிதம் பெற பிறந்த ஜாதகன் பிதாவுக்கு அவன் ஜெனித்த 9 ஆண்டில் பிதுர் வங்கித்தாரையும் பிதாவையும் சொல்லும் மேலும் கொடிய துன்பங்களும், உண்டாகும். பிதுர்குடும்பமானது பூதம் கண்டது போல அலைந்து திரியும் எ-று.

வி-ரை சூரியன் பிதுருகாரகனாகையால் சூரியனோடு கேது சகிதமாவது கொடியதென்பது இந்நூலுடையார் கொள்கை ஆயினும் திரிகோணமான 9 ஆம் இராசியை சூரியனாவது அல்லது அந்த ஸ்தானாதிபதிபலம் பெற்றும் 8ஆம் இராசியை உச்சம ஆகூி, நட்புபெற்ற சுபகோட்களால் பார்க்கப்படு மிருந்து, மேற்சொன்ன சூரியனோடு கேது சகிதம் பெற்றிருந்தாலும் தோஷம் செய்யாது.

**பூமனுமதியுங்கூடிப் புகுத்திடப்புந்த்தானும்**
**கோமனுக்கோழிற்காரி கோபித்து நின்றானாகில்**
**மாமனுமாதுருவம்ச மடியுமேயிருமூன்றாண்டிற்**
**காமனுக்கினியமாதேகருத்திலார்க்குரைக்குங்காலே.**

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) குஜனோடு சந்திரன் சகிதம் பெற்றிருக்க அவர்களோடு புதனும் சகிதம் பெற்றிருக்க சந்திரன் நின்ற ராசிக்கு 7ஆம் இராசியில் சனி பலம் பெற்று நின்றிருப்பானாகில் அவன் தாயுடன் பிறந்த மாமனும் அந்த வம்சத்தார்களும் அவன் ஜெனித்த 6 வருடங்களுக்குள் மறிப்பரென்று மன்மதனுக்கு அன்பும் ஆசையுமுடைய பெண்ணே கொடிய கிரகங்களைப் பற்றி இவ்வாறு சொல்வாயாக எ-று.

வி-ரை புதன் அம்மாள் காரகனும் சந்திரன் மாதுருகாரகனாகையால் சந்திரனுக்கு 2ல் சனி நின்றதாலும் புதன் குஜனுடன் சகிதம் பெற்றதாலும் அம்மன் வகையார் தோஷம் சொல்லப்பட்டன.

சுங்கனுஞ்சனியுங்கூடச் சூரியன் வந்து நிற்கும்
பொங்கமாயவர்க்கோயழிற் புகுந்திடப்பூ மனாரும்
அங்கனேவிவாகங்கூடி யோராண்டிற்றீப் புண்டாகும்
இங்குள்ள மாதர்கட்கு மிவன் சோரபுருஷனாமே

(இ-ள்) சுக்கிரனோடு சனியும் சூரியனும் கூடி இருக்க அவர்களிலிருந்த ராசிக்கு 7ஆம் ராசியில் குஜன் நிற்க. அந்த ஜாதகனுக்கு விவாகமாகிய 1 வருஷத்திற்குள் தோஷத்தைக் காட்டும். மேலும் அவ்வீட்டிலுள்ள ஸ்திரீகளை சோரத்தனம் செய்யும் கொடியவனாக மிருப்பான் எ-று.

வி-ரை சுக்கிரன் களத்ரகாரகனாவான் சுக்கிரன் எந்த ராசியிலிருந்தாலும் சனி சம்பந்தப்படுவது கொடியதாரும் அவர்கள் நின்ற ராசிக்கு 7ல் குஜனிருக்கில் மேற்சொன்ன சுக்கிரனையும் சனியையும் குஜன் முழுநோக்குடன் பார்ப்பான் ஆனால் விவாகமான 1 வருஷத்திற்குள், அவன் மனைக்கு தோஷம் காட்டும் என்பதே இச்செய்யுளின் கருத்து.

மன்னவனிரவிகூடி மனைக்கேழிற்காரி செவ்வாய்
நின்றிடிற்றீப்பேதென்னி னில்லாது புத்திரவம்சம்
அன்னதிற்சோமன்கூடி லவன்பிது தாய்க்குமாகா
தென்றவர் சொன்னதீப தேழிரண்டாண்டிற்றானே

(இ-ள்) குருவும் சூரியனுங்கூடி ஓர் ராசியிலிருக்க அவர்கள் நின்ற ராசிக்கு 7ம் ராசியிலிருக்க அவர்களால் விளையும் துற்பல என்னவெனில் அந்த ஜாதகனுக்குப் புத்திரவம்சமானது நாசமாய்ப்போம் மேற்சொன்ன குரு சூரியனோடு சந்திரனும் கூடி இருப்பாரேல் அவன் தாய் தந்தையருக்காகாது அத்தோஷமானது அந்த ஜாதகன் ஜெனித்த 1 வருஷங்களுக்குள் காட்டும் எ-று.

துலக்கமாய்வெள்ளிமூன்றுற்றேன்றியேயொருவர் பாரா
நலக்கமில்லாம நின்றால் னாசமாங்குல முத்தீதாய்க்
கலக்கமில்லாமநின்றா கருவற்றுமவையும் பாழாம்.
விலக்கவுமொருமரா லே விண்ணிலுமில்லைமாதே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) பிரகாசத்னதயுடைய சுக்கிரனும் புதனும் சேர்ந்து ஜெனனராசிக்கு 3ஆம் ராசியிலிருக்க அவர்கள் சுபவர்க்கமடையாமலும் வேறு கிரகங்கள் பாராமலிருந்தால் வம்சமானது நாசமாய்ப் போய்விடும் அன்றியும் அவன் வர்க்கமானது புத்திர விருத்தியின்றியும் அவன் ஜெனித்த மனை முதலியவைகளும் பாழாய்ப் போகும். அதை விலக்க நவகோட்களாலும் விண்ணுலகத்தாராலும் முடியாது எ-று

இணக்கமாய்க்காரிசெவ்வா யிருவருகூடி நின்ற
அணைக்குந்தமனையுமேழு மம்பலமாக நிற்கும்
வணக்கமூ நன்மைசெய்யார்வருமதிற்றீப் பேயுண்டாம்
இணைக்கரிசெய்வர் கண்டா யீராறுமாதந்தன்னில்

(இ-ள்) குஜனும் சனியுங்கூடி இருப்பார்களேயானால் கொஞ்சமேனும் நன்மை என்பதே கிடையாது அக்குடும்பத்தில் கொடிய துன்பமே விளைந்துக்கொண்டிருக்கும் அவன்ஜெனித்த 1வருஷம் வரையில் கொடிய துன்பம் சூதகப்பீடையும் காட்டும் மேடி கோட்கள் நின்ற 7ஆம் இராசி எந்த வர்க்கத்தாருடையதோ அந்த வர்க்கத்தாரும் நாசமாய்ப் போவார் எ-று

வி-ரை அணைக்கள் தமனைக்குமேழு மம்பலமாக நிற்கும் வன்றதனால் அவர்கள் நின்ற ராசிக்கு ஏழாம் ராசிக்குடையவரும் நாசமாய் போவார் என்றனவாம்.

மூணினிற்செவ்வாய்நிற்க மும்மூன் றிற்காரிசேரக்
காணுமேயுடன் பிறப்புக்கடினமாய்க்கொண்டமுண்டு
நாணியேபிதுர்க்குக்கண்ட நாலுதிங்களிலேகாணும்
வேணுமென்பகையோர்பார்க்கின் விளைவதுதீய-
பைந்தாண்டில்

(இ-ள்) சகோதர ஸ்தானமாகிய 3ஆம் இராசியில் குஜன் நிற்க 9ஆம் இடமென்றும் பிதுருஸ்தானத்தில் சனி இருக்க அந்த ஜாதகனுக்கு உடன் பிறக்கும் சகோதரனுக்கு கண்டம் சம்பவிக்கும் அவன் பிதாவுக்கும் 4 மாதத்திற்குள் கொண்டாதி பிடை காட்டும், 9ஆம் ராசிக்காவது பகை கோட்கள் நோக்குவரேல் ஜெனித்த 5 ஆண்டுகளில் கட்டாயமாய் கொடிய துன்பம் உண்டாகும் எ-று

வி-ரை சகோதரஸ்தானத்தில் குஜன் நின்றால் அந்த ஜாதகனுக்குப் பிறகு ஜெனிக்கும் சகோதரனுக்கு கண்டம் என்பது கணிதவல்லோர் பலரும் சம்மதிப்பர் ஆயினும் அந்த ஜாதகனுக்கு இரண்டாவதாம ஜெனிக்கும் குழவிக்கும் மாத்திரம் மேல்சொன்ன தோஷம் உண்டேயன்றி அதன் பிறகு ஜெனிக்கும் சகோதரர்களுக்கும் அதற்கு மூன்றாம் ராசியைக் கொண்டே சொல்லவேண்டியது முறையாகும்.

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பத்தினிற்சனியும் நிற்கப் பணிமனியீனமாக
ஒத்துநாலிரவிநிற்கவோரேழிற்பூ மன்சேர
மற்றுளோராறெட்டாக மரணமாங்குழவிமாதா
அற்றவன நிரவுதன்னி லாகாதுமனைக்குத்தோஷம்

(இ-ள்) ஜெனன ராசிக்கு 10 ஆம் இராசியில் சனி நிற்க இறவிற்கரசனாகிய சந்திரன் நீக்கம் பகை அஸ்தமயம் முதலியவைகளால் ஈனமடைந்திருக்க நான்க(மராசியில் சூரியனுக்கு சப்ததம ஸ்தானமென்கிற 7 ஆம் இராசியில் புதனிருக்க மற்றுமுள்ள கோட்கள் 68 இவ்விடங்களிலமர்ந்திருப்பார்களேயானால் அவனைப் பெற்ற தாய் இறந்து போவாள் அந்த ஜாதகனுதித்தது நிசியாகில் அவன்ஜெனித்த மனைக்கேதோஷம்எ-று

உதித்தவரா நிற்காரி யுடையவனினமாக
எதிர்த்த தோரேழி நின்ற இரவிரிமபெலத்து நிற்கப்
பதிக்குருவுடனே பூமன் பற்றியே நின்றானாகில்
பிதுர்க்கொருதீம்பாய்பெற்றபிள்ளையுமரணமாண்டில்

(இ-ள்) உதயராசிக்காறாமிடமென்னும்ரோகஸ்தானத்தில் சனிநின்ற ராசிக்குடையவன் தன்பலமிழந்துமிருக்கஏழாமிராசியில் சூரியன் எவ்விதத்திலாயினும் பலம் பெற்றிக்க ஆக்ஷி பெற்ற குருவுடன் புதன் சகிதம் பெற்றுமிருந்தால் அவன் ஜெனித்த ஒரு வருஷத்தில் அந்த குழவியும் அவன் தந்தையும் மரணமடைவார்கள் எ-று 12

அஞ்சுடனுயர்த்த வீட்டிலம்புலிசனிபுங்கூட
மிஞ்சியேவிடத்திற்பூமன் வெங்கதிரிரவிநின்றால்
கொஞ்சமாய்ப்பாட்டன் பாட்டி குலமூளொர் குழவி
மாதா
வஞ்சியே மூன்றுமாத மடிவது நிசமேமாமே

(இ-ள்) ஜெனனராசி முதலைந்து வீட்டிற்க்கப்பால் சனியும் சந்திரனுமிருக்க 7 ஆம் ராசியில் புதனும் சூரியனுமிருக்க அந்த சாதகனும் பாட்டான் பாட்டி அவன் தாய் முதலியோர் அவன் ஜெனித்த 3 மாதத்தில் கட்டாயமாய் மடிவார் என்று அழகு பொருந்திய பெண்ணே கூறுவாயாக எ-று

ஏழுடனிரண்டுவீட்டா னிருவமஸ்தமிக்கத்
தாழ்வுடமதியுமாறிற் றலைவனுமூதையங்காரி
சூழிடம்பாம்புபின்சேய் சுங்கனுங்குடி நின்றால்
வாழ்வுடன் குலைந்து வந்த குழவியுமரணமாண்டில்

(இ-ள்) ஜெனனராசிக்கு 7 ஆம் வீட்டோனும் இரண்டாம் வீட்டோனும் அஸ்தமடைந்திருக்க ராகு கேதுக்கள் அங்காரகன் சுக்ரன் ஜெனன ராசிக்குடையோன் சனி இவர்கள் ஒரே ராசியிலிருப்பார்களேனால் அவர்கள் வாழ்க்கைக் குலைவதோடு ஜெனித்த குழவியும் 1 வருஷத்தில் மறிக்கும் எ-று. 14

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மட்டிணிலரசன் சேரவிதற்கேருற்சுங்கனிற்க
எட்டியிற் சோமன் மூன்றின் மனையவனீனமாக
எட்குனிலுதையங்சாரி தொனிப்பவன் பூமன்கூட
விட்டிடுங்குழவிசீவன் விரையமாய்க்கொஞ்ச நாளில்,

(இ-ள்)ஜெனன ராசிக்குபேம்ராசியில் சுக்கிரனிருக்க 7ஆமிடமென்னும் சகோதர ஸ்தானத்தில் சந்திரனிருக்க சந்திரனின் றநிட்டிற்குடையவன் ஈனமடைந்திருக்க ஜெனன ராசியிலேனும் எட்டாமிராசியிலேனும் சனி இருக்க அவனோடு புதனும் சகிதம் பெற அந்த குழவி ஜெனித்த சில நாளையில் மரணமடையும் எ-று

இன்பமாய் லாபலாபத் சுனியவரஸ் தமிக்கில்
ஒன்பதிற்சனியேநிற்கவொருநான்கிற் செவ்வாய் சேர
அன்பதாய் விரையலாப மரசனுஞ்சுங்கனீனம்
துன்பமாய்மதியுமானாற் சொற்றனங்குழவிபோமே

(இ-ள்) ஜெனன ராசிக்கு 1ஆம் விட்டோனென்னும் லாபாதிபதியும் அதற்கு 11ஆம் விட்டோனென்னும் ஜெனன ராசிக்கு 9ஆம் விட்டோனும் அஸ்தமயமடைந்திருக்கவும் ஷ 9ஆம் ராசியில் சனி நிற்க ஜெனன ராசிக்கு நான்காமிராசியில் குஜன் சம்பந்தப்பட்ட குருவும் லாபாதிபதி விரயாதிபதி சுக்கிரனும் ஜெனன காலப்போது சந்திரனும் ஆக ஐவரும் ஈனமடைந்திருந்தால் அந்த குழவியானது உடனே இறந்துப் போகும் ௲6

சிறந்தவன் மதியுமீனஞ் க்ஷீணமாயரசன் சுங்கன்
மறந்துடனிருந்தாரகின் மற்ற தீக்கோளார் மேலாய்
இறந்துடன் போகச்செய்வரிதுகுறிதப்பாமாதே
அறிந்து கோணிலனவதாதுயவனியிலுதித்தபேர்க்கே

[இ-ள்] சிறப்பு பொருந்திய வெண்மை பிரகாசத்தையுடைய சந்திரன் மீன ராசியிலிருக்க குருவும் சுக்கிரனும் க்ஷீணம் பெற்றிருக்கவும் மற்றுமுள்ள கொடிய கோட்கள் எந்த ஸ்தானத்திலிருந்தாலும் அந்த குழவியானது தவறாமல் இறந்துபோம். மேற்சொன்னபடி கிரகங்கள் அமர்ந்து யுருக்க ஜெனித்தோர் மறிப்பதில் சப்தேமில்லை எ-அ

உலகினினிலுதித்தபேர்கட்கொளிர்மதியரசன் சுங்கன்
கலக்கமில்லாமனின்றாற்கண்டவனம்மதி வீட்டானும்
நிலமதிலுறவேயாகினிச்சய நன்மையுண்டு
சலமதாமத்தீயர்தீம்பாய்ச்சாகவுபொட்டார்மாதே.

(இ-ள்) உலகில் ஜெனித்தோர்களுக்கு பிரகாசத்தையுடைய சந்திரனுக்கும் குரு சுக்கிரன் இவர்கள் கொடிய சேத்திரங்களிலும் பார்வை முதலியவைகளால் வலி விழக்காதிருக்கவும் சந்திரனின்ற வீட்டோனும் உறவுசேத்திரங்களிலிருக்கவுமாவால் அந்த குழவிக்கு நன்மையே உண்டாகும்தீய கோட்கள் கொடியஷேத்ரங்களிலிருந்தாலும் கொல்லமாட்டார் எ-று 18

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஒருசுபன் மிகுத்திருந்தா லொட்டார் கடியர் சூழ்ந்து
இரு சுபர்மிகுத்திருந்தா லிரெட்டாப்பகையேசெய்வார்
திழி நலமாங்னார் நன்மை தீயருங்கிட்டார் தூரம்
பெருசுபர் நாலேயாகிற் பேர்செலாக்காணாதீயர்

(இ-ள்) சுபகோட்களில் யாரேனு மொருகிரகம் வலுபெற்றிருக்குமேயாயின் தீயகோட்கள் எவ்வித தீமையும் செய்ய இடமில்லை இரண்டு சுப கிரகங்கள் வலுபெற்றிருக்குமாகில் 6.8 ஆம் ராசிக்குடையோர் தியக்ஷேத்ரங்களிலுமிருந்தால் கொடிய பலன் செய்ய இடமுண்டு 3 சுப கிரகங்கள் வலுப்பெற்றிருப்பார்களேயானால் எவ்வித தியகோட்களும் அருகில் வரமாட்டர் நான்கு சுபகிரகங்கள் வலுபெற்றிருப்பாரேயானால் கொடியோர் என்று பேர் சொல்லவும் கிவைக்கார் எ-று.

உதையாதிசுங்கன்ராஜ னொளிர்மதி பதிபு நல்லோர்
இதமில்லாப்பாபியந்த னிரவிசேயெட்டேன் பாம்பும்
இதுவைந்துபேருமாகு மெழிற்புதன் சமனேயாகும்
இதிலாகு நன்மையெண்ணி யினிப்பலன்
சொல்லாய்மாதே

(இ-ள்) ஜெனனராசி யதிபதியும் சுக்கிரன் குரு வளர்பிறைச் சந்திரன் இவர்கள் நல்லோரெனவும் சூரியன் அங்காரகன் 8 ஆம் ராசிக்குடையோன் இராகு கேது இவர்களை வரும் பாபி எனவும் பெருமை பெற்ற புதன் சமன் என்றும் அழகு பொருந்தியபெண்ணே இவர்களால் கவனித்து பலன் சொல்வதயாகு எ-று 20.

உநித்தற்கெட்டோன் காரிமதிக்கெட்டோன்
பகையாய் மகிழ்த்தந்தவிடத்திரின்ற மன்னரும்பகை
யேயாவர் [திற்க கதித் வர்பேலால் நின்றாற் கண்ட
மந்தோஷமுண்டு பதித்துடன்மாறி நின்றாற்
பாவமுமில்லைமாதே

(இ-ள்) ஜெனன ராசிக்கு எட்டாம் வீட்டோனும் சனியும் சந்திரனின்ற ராசிக்கு 8ஆம் வீட்படானும் பகைப்பெற்று நிற்பார்களேயானால் மேற்சொன்ன கிரகங்களின் ஆட்சி வீடுகளிலிருக்குங் கோட்களும் பகைவரேயாவார் கொடியோர்கள் வட்பெற்றிருப்பரேல் அக்குழவிக்கு கெண்டங்களும்தோஷமும் காட்டும் கொடியோர்கள் மேற்ச் சொன்ன கோட்களின் ஆட்சி வீடுகளிலின்றிமாறி நிற்பார்களேயானால் தோஷமில்லை எ-று 21



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

**இப்படியுறினட்பாட்சி யுச்சமுமிந்துபோகும்
பொய்படவிருந்தபேர்கள் கோய்பகை நிசமானால்
நற்படியாகி நின்று நலந்தரும்வகையேசெல்வார்
சொற்படித்தப்பாதாபந்தொபுவியோர்க்குமாதே**

(இ ள்) மேலே சொன்ன சனி 8 ஆம் வீட்டிற்குடையோன் சந்திரனுக்கு 8 ஆம் வீட்டோன் முதவியவர்கள் மேற்சொன்ன படியே அமர்ந்திருப்பார்களேயானால் அவர்கள் நடப்பு ஆட்சி உச்சமாயிருக்கனும் அவர்கள் தன் வலுவை இழந்தே போவார்கள் கொடிய கோட்களாயினும் (அ) மேலே சொன்ன கிரகங்களே ஒருவருக்கொருவர் சேர்க்கையின்றி தனிய நின்று நீச்சம் பெற்றிருந்தாலும் அவர்கள் நற்பலனும், சந்தோஷத்தையுமே விளைப்பார் இவை இப்பூமியிலுதித்தோர்க்குதப்பாது உண்மையாகும். எ-று

**புந்தியோநிவர்க்குநாலி லிருந்திடகுற்றமுண்டு
அந்தெதிர்சோமநின்றா லவனுக்கேயீன முண்டு
வந்தித்தவடைவேயாசில் வருமதி தீமையாகும்
இந்திரும்பகைபற்சீவனிறங்குமெட்டாண்டினமாதே**

(இ-ள்) மேலே குறிப்பிட்ட கோட்களுக்கு நான்காமிராசியிலிருப்பாரேல் கொடியதேயுண்டு புதனுக்கு எதிராக அதாவது 7 ஆம் இராசியில் சந்திரனிருந்தாலும் ஜெனித்த குழவிக்கே ஈனமுண்டு மேற்சொன்னபடியே இருந்தால் ஒரு மாதத்தில் தீமையுண்டு இவ்வாறு பகைப்பெற்றிருப்பரேல் அக்குழவியானது 8 வருடத்தில் இறந்துபோம் எ-று

**மதிநின்றவிட்டுக்காறின் மந்தனாரவங்கூட
விதியெட்டி லிரவிபூமன் வீறியேநின்றாராகில்
பதியெட்டு மாதந்தன்னிற் பறந்திடும்பிறந்தபிள்ளை
தாதிரிட்டுநிறுத்தவல்லாரெவர்களுமில்லைமாதே**

(இ-ள்) சந்திரனின்ற ராசிக்கு ஆராமிராசியில் சனியும் இராகுவும் சேர்ந்திருக்க ஆயுள் ஸ்தானத்திற்கு எட்டாமிராசியில் சூரியனும் புதனும் நிற்பாரயானால் அந்தக் குழவியானது பிறந்த 8 மாதத்திலிறந்துபோம் ஷி கோட்களை எதிரிட்டு தோஷத்தை மறுக்கவல்ல கோட்கள் எவரும் கிடையாது எ.று

**சோமற்குமுன்னேகாரி பின்னுமோற்பூமனிற்க
ஆமவர்க்கெட்டிற்பாம்பு மலரியுநின்றாராகில்
சாமதுகுழவிதானுஞ் சரியீருமாதந்தன்னில்
போமதைநிருத்தவல்லார் பூமியிலில்லைமாதே,**

(இ-ள்) சந்திரனிருந்த ராசிக்குள் முன்னால் சனி நிற்கவும் முன்னால் அதாவது 6 முதல் 12 ராசிகளுக்குள் குஜனும் நிற்க மேற்சொன்ன சந்திரனுக்கு 8 ஆம் ராசியில் பாம்பாகிய

CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இராகு கேது சூரியன் இவர்கள் நிற்பாரோமானால் அக்குழவி யானது ஜெனித்த இரண்டு மாதத்தில் இறந்துபோம் அதை மறுக்க வல்லவர்கள் இப்பூமியில்லை எ-று

மதியுதைய‌த்துக்கெட்டி மன்னவனொருவனிற்க
அதிர்விரையத்திற்காரி யாவமுவர்க்கேயெழிய
கதிருஞ்சேய்நின்றாரகிற் கண்டாறுமாதந்தன்னில்
விதிமுடியுந்தோடிப்போமே மேதினியுதித்தகாலை

(இ-ள்) இரவிர்க்கு அரசனாக விளங்கும் சந்திரனுக்கு 8ஆம் ராசியில் குரு தனித்திருக்க அவர்களுக்குப் பன்னிரண்டா மிடமென்னும் விரய ஸ்தானத்தில் சனியும் பாம்பும் நிற்க அவர்கள் நின்ற ராசிக்கு 7ஆம் ராசியில் சூரியனும் குஜனும் நின்றாரேயானால் அக்குழவியானது ஜெனித்த 6 மாதத்தில் ஆயுள் முடிந்து பறிக்கும்.

சந்திரனிருப்பிடத்திற் சூரியன் முன்னே நிற்கக்
சந்திரக்கெட்டிற்காரி சத்தபஞ்செல்வாய்சேர
இந்திரலபஞ்சுங்க னிருந்திடவொருவனாக
மந்திரியஞ்சி நின்றான் மரணமாகுழவிநாவில்

(இ-ள்) சந்திரன் எந்த ராசியிலிருந்தானோ அந்த ராசிக்கு முன்னால் சூரியனும்மேற்படி சந்திரன் எந்தஸ்தானத்தி லிருந்தானோ அந்த ஸ்தானத்திற்கு 8ஆம் ராசியில் சனியும் 4 ஆம் இராசியில் குஜனுமிருக்கப் பிறந்தால் அந்த ஜாதகனுக்கு தேவேந்திர யோகமென்றும் பேசுவர் 3ஆம் ராசியில் குருவும் சுக்கிரன் தனித்து மிருப்பாரேல் அக்குழவி ஜெனித்த நான் காமாதமிறந்துபோம் எ-று.

ஒருபிறையாகிநிற்க வொருநான் கிற்காரிசேர
இருமூன்றிலொன்றிற் செவ்வாயிருந்திரவங்கூட
மருமணராசன் சங்கண் மதிக்கெட்டினின்றாகில்
வருவதோர்குழவியன்றே மன்றினிற்சாடிமாதே

(இ-ள்) ஜெனன காலம்போது பூர்ண சந்திரனாக இருந்து அவனிருந்த ராசிக்கு நான்காமிராசியில் சனி சேர்ந்திருக்க 7 ஆம் ராசியில் குஜன் நிற்க அவனோடு பாம்பு சகிதம்பெற சுக்கிரன் குரு இவர்கள் சந்திரனின்ற ராசிக்கு 8ஆம் ராசியி லிருப்பாரோயாமானால் அக்குழவி பிறந்த இறவே இறந்து போமென்றுங்கூருவாயாக எ-று

பிறைநிறைவித்திற்காரி பூமனுமஞ்சிநிற்க
அரையுமீரைந்து வீட்டி லரவமுமிரவிநிற்கக்
குறைவிலாச்சுங்கன் ராஜன் கூடாமலாறெட்டாகில்
முறையிட்டிங்கெட்டுநாளின் முன்னிட்டுபோமோ

பிள்ளை

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சந்திரனிருந்த ராசியிலேயே சனி இருக்க அவர்களுக்குவிட ஸ்தானத்தில் குஜனிருக்க ஷ சந்திரனிருந்த ராசிக்கு 10ம் ராசியில் சூரியனும் பாம்புங்கூடி இருக்க துன்பத்தைதரப்படமாடாத சுக்கிரனும் குருவும் ஒருவருக்கொருவர் சகிதமின்றி 6 8 என்னுமிடங்களிலிருப்பாரே ஆனால் அக்குழவியவள் மெத்த வருத்தப்பட்டு, 8 நாளையில் உயிர்விடும்

பூரணமதியேயாகிப் புந்தியுமேழினிற்கக்
காரணமானமந்தன் கடும்பத்துநாலின் செவ்வாய்
ஏரணியிரவியாதியாதி யிருந்திடவெட்டிற்பொன்னும்
வாரணிவனத்தினாளே வருமந்தக்குழிவிசரமே.

(இ-ள்) ஜெனன காலப்போது பூரண சந்திரனக இருக்க சந்திரனிருந்த ராசிக்கு 7 ஆம் ராசியில் புதன் நிற்க 10ஆமடமென்னும் காரியஸ்தானத்தில் சனி நிற்கநான்காமிராசியுமான சுகஸ்தானத்தில் குஜனும் சூரியனுமிருக்க 8 ஆம் ராசியில் சந்திரனுமிருந்தால் முல்லையரும்பு போன்ற ஸ்தானத்தினையுடையவளே அக்குழஸ்யானது உடனே இறந்துபோகும்

குறைமதிநின்றவீட்டுக் கொருபக்கங்குரு வநிற்க
அறியவர்க்கேழிற்காரி யரவமுங்கூடி நிற்க
நறியதோர் தனத்திற்செவ்வாய்நற்சுங்கணவர்க்
கேயேழில்
நிறைமதிபதற்கேழ்புந்தி யூழ்நிற்கிற்குயுவிசாமே.

(இ-ள்) தேய்பிறை சந்திரனுக்கு ஏதேனுமொரு பக்கம் அல்லது ராசிக்கு குருவிக்க அவன் நின்ற ராசிக்கு 7 ஆம் ராசியில் சனி நிற்க (பின்னும்) இராகுவும் நின்ற ரேண்மை பெற்ற தனஸ்தானமென்னு மிரண்டாமிடத்தில் குஜனிருக்க குஜனிருந்த ராசிக்கு 7 ஆம் ராசியில் நன்மையிருக்கும் சுக்கிரனுக்கு அல்லது பூரணசந்திரனுக்கு 7ஆம் ராசியில் புதனும் சூரியனுமிருந்தால் அக்குழவியானது இறந்துபோம்

அரவுடன் மதியுங்கூடல ர்க்கு நால்சனிசேய்நிற்கத்
திரமுடன் சேய்க்கேழ்சுங்கன் றிருந்புந்திகூடி நிற்கக்
குருவுடனிரவியெட்டிற் கூடியே நின்றராகில்
வருவது தீம்பாடெட்டின் மரிப்பவரில்லைமாதே

(இ-ள்) இராகுவோடு சந்திரன் சகிதம் பெற அவர்களுக்கு நான்காம் ராசியில் சனியும் குஜனுமிருக்க ராசிக்கு 7 ஆம் ராசியில் சுக்கிரனோடு புதனும் கூடி இருக்க அதிஷ்டம் ஸ்தானமென்னும் 8 ஆம் ராசியின் குருவும் சூரியனும் கூடியிருக்க அக்குழவியானது ஜெனித்த 8 ஆம் ஆண்டில் இறந்துபோம் அதை குறுக்க ஒருவராலும் முடியாது ஏ-று

சனிமதியரவங்கூடச் சத்தமஞ் செவ்வாய் நிற்க
மணியதாமிர விபுந்திமன்னவர்க்கெட்டய் நிற்கிற

CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பணிசுங்கன் சனிக்கெட்டாகிற்படிதனிற்பிறந்தபிள்ளை
இனியொருநாளு திறந்திடுமென்பர்மாதே

(இ-ள்) சனியோடு சந்திரனும் பாம்பு சகிதம் பெற அவர்கள் நின்ற ராசிக்கு 7ஆம் ராசியில் குஜன் நிற்க சூரியனும் புதனும் குரு நின்ற ராசியில் 6ஆம் ராசியிலிருக்க யாவரும் போற்றும் சுக்கிரன் சனி ராசிக்கு எட்டாம் ராசியிலிருக்கவும் ஜெனித்த குழவியானது ஒரு நாளேது மில்லாது உடனே இறந்துபோமென்னும் கூறுவர்.

மதியிருபிறையுமாக மன்னவர் பகையாய் நிற்க
விதியொரு நீசமாக வெள்ளியுமஸ்தமிக்கப்
பதிமதியிடத்தான் காரி பக்கலிற்சேர்ந்தானாகில்
கதியறைக்கிள்ளேமாண்டு கவிழ்த்துடல் வீழுமாதே

(இ-ள்) சந்திரனிருந்த ராசிக்கு முன் ராசியிலேனும் பின் ராசியிலேனும் குரு பகை பெற்று நிற்க ஆயுள் ஸ்தானாதிபதி நீச்சம் பெற்றிருக்க சுக்கிரன் அஸ்தமடைந்திருக்க சந்திரனின்ற ராசிக்கு இடது பக்கத்தில் சனி சேர்ந்திருப்பார்களேயானால் அக்குழவியானது தன் தாய் கர்ப்பத்துக்குள்ளேயே இறந்து போய் ஜெனனமாகுவனென்று கூறுவாயாக.

நிறைகொண்டமதிக்கேழுன் றினின்றதனிரவி
மைந்தன் அறைவின்றலைந்திற செவ்வாயதற்கேழி
விறவிநிற்க முறைகொண்டு வெள்ளியாறின் மூன்
குருவிரைய நின்றாற் சிறைகொண்ட மதியும்புந்தி
சேர்ந்திடக்குழவிசாமே

(இ-ள்) பூரண சந்திரனின்ற ராசிக்கு 3ஆம் ராசியில் சூரியனும் சனியும் நிற்க, 5ஆம் இடமென்னும் பஞ்சம ஸ்தானத்தில் குஜனிருக்க, அவர்களுக்கு 7ஆம் ராசி என்னும் சதஸ்தானத்தில் சூரியனிருக்க, 6ஆம் இடமென்னும் ரோகஸ்தானத்தில் சுக்கிரனிருக்க விறைய ஸ்தானமென்னும் 12ஆம் ராசியில் குரு நிற்க, அக்குவியானது ஜெனித்த ஒரு மாதத்திற்கு முன்னாள் இறந்து போகும் எ-று

அரவுடன் மதியுவீற்க வைத்தினிலலரிமைந்தன்
உரமுடனலத்திற் செவ்வாஒளித்வெள்ளியாறினிற்ரத
திரமுடன் குருமெட்டிற் றிரும்பிமே நின்றானாகில்
முறையிட்டுப்பிறந்த பிள்ளை மூன்றிருமாதஞ்சாமே

(இ-ள்) இலக்கணத்தில் இராகும் சந்திரனுமிருக்க ஐந்தாயிடத்தில் செவ்வாயும் சுக்கிரன் ஆறாமிடத்திலும் குரு ஸ்தானத்திலுருந்தால் அந்த சமயத்தில் பிறந்த பிள்ளை ஆறாவது மாதத்தில் மரணமாகுமென்வறிவீர்கள் எ-று

விதியற்றுப்போனபேர்க்கு மதியத்தைப் பார்த்துச்
சொல்லும்
மதியற்றுப்போனபேறகுச்சனியத்தைபார்த்துசொல்லு

CC-0 Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சனியற்றுப்போனகாலையுதத்தைப்பார்த்துச்சொல்லு
சனிமதியுதயந்தப்பா தகப்படுமரணகா ம்

(இ-ள்) மீனலக்கினத்தில் சந்திரனிடமே சனி அஸ்தமயமா யிருந்தால் அந்த சமயத்தில் பிறந்த பிள்ளை சிசு எவ்விதமாயி னும் மரணமாகும் அதேயென்றால் குற்ற கிரகங்கள் பகை க்ஷேமத்திலிருந்தால் சொற்பமுதாகாமல் அந்த குழந்தை மரண மாகுமென்றுணர்வீர் எ-று,

சாவதுமேே ாவென்னிற் சனிமதியுதையமீனம்
ஆவதுபகைமரிப்பு மஸதமமாகி நின்றாற்
போவதுமெய்தான்சீவன்பொல்லாதுபகையேயானால்
நாவதுதப்பாமாதே நாட்டுளோர்க்குரைக்குங்காமல்

(இ-ள்) இலக்கணம் சரியாயில்லாவிட்டால் ராசியைப் பார்த் துச் சொல்லவேண்டும் இராசி சரியாயில்லாவிட்டால் சனி யிருந்த ஸ்தானத்தை பார்த்துச் சொல்ல வேண்டும் சனிருந்த ஸ்தானம் சரியாயில்லாவிட்டால் ஜனனோதயத்தைப் பார்த்துச் சொல்லவேண்டும் இவ்விதமாய் சனி சந்திரன் உதயமும் தப்பா மல் மரண காலம் இன்னதென்று அகப்படும் எ-று

மதிக்கேலோலுதையத்திற்குஞ் சனிக்குமேபாய்ந்து
இதற்குமிவவண்ணமாய்ந்தா லேறியவீதியுந்தீது
விதிக்குறிப்பாதாகு மேதினிதனிலுற்றோர்குப்
பதிக்குறிமாதேகேளாம் பாரிணிறர்ப்பாரே

(இ-ள்) சந்திரனின்ற இராசிக்கு ஜனனோதபத்திற்கும் சனி நின்ற ஸ்தானத்திற்கும் கனிதாராய்ச்சியுடன் சோதித்துப் பார்த்தால் ஆகும் பஜனுடன் விளங்குவதுடன் உலகில் பிறந்த வர்களுக்கு பலாபலனுபவிக்கும் படியான விதிமுறையின் குறிப்பு தப்பாது இதனை கவனித்துச் சொல்லுவாய் எ-று 39

இதைவிடவேறேயில்லை யேதேதுபார்த்திட்டாலும்
அறைபவர்நின்றநீப்பு மனைந்துதுமதியாலாய்ந்து
உதயமுஞ்சனின்றோருக் கொருவறையூடுதாக்கிச்
சிதைபதஞ்செல்லலாகுஞ்செகத்தினுலுதித்தபேர்க்கே

(இ-ள்) இதைவிட வேறேதுமில்லை எந்தெந்த சாஸ் திரத்தை ஆராய்ந்துப் பார்த்து சொல்லப்பட்டவர் கனித ஆராய்ச்சி செய்து உண்டாகும் படியான துன்பமெல்லாம் தம் அறிவினாலுணர்ந்து ஜனன லக்கிய காலமும் சனியிருந்த ஸ்தா னத்திற்கும் சரியாய் பார்த்து உலகத்தினர்க்கு சரியாய் சொல்ல வேண்டும் எ-று.

அரிஷ்டககாண்டம் முற்றிற்று
ஆகமொத்தம் 43

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

| | | | |
|---|---|---|---|
| மீனம் 4¼ 11 | மேஷம 4¼ 1 லக்கணம் | ரிஷபம் 4¾ 2 | மிதுனம் 3¼ 9 |
| கும்பம் ¼ 11 | ஒருநாள் இரவும் பகலும் 24மணி நாழிகை 50 லக்கிணம் 12} இவ்விதமாய் கணிக்க வேண்டியது. | | கடகம் 5¾ 4 |
| மகரம் 5¼ 10 | | | சிங்கம் 5¼ 5 |
| தனுசு 6¼ 9 | | | |
| | விருச்சிகம் 6¼ 8 | | கன்னி 3 6 |

கருதியகருமங்கட்குக் காரிழைமாதேகேளாய்
வருநலமதிதனக்கும வகுத்தலைந்த நான்குபேரை
பொருமதியுதையங்கண்டு பொல்லாத பேரைத்தள்ளி
குருமதிசுங்கநின்ற குறிநடுவாகச்சொல்லே

(இ-ள்) பெண்ணே மனிதர்கள் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தால் சந்திரனின்ற இராசியை ஐந்தால் வகுத்து நான்கு கிரகங்கள் நின்ற ஸ்தானத்திற்கும் சந்திரன் நின்ற ஸ்தானத்திற்கு அசுபரை விலக்கி குரு சந்திரன் சுக்கிரன் நின்ற ஸ்தானத்தின் பலன் ஆராய்நதுணர்ந்து துற்பலன் சொன்னால் சரியாயிருக்குமென்றுணர்வாய் எ-று

நல்லவர்நாலுபேர்க்கு நடுவதிர் சொல்லமேலாம்
பொல்லவர்வர்க்காதுவேரானதற் போய்விடுங்கருமங் கிட்டாய்
பின்னலங்கலந்துநின்று பிறிவிணையில்லாதாகில்
சொல்லுவர்வதியைப்பற்றித் தொனியுரை நடுவாய் மாதே

இ-ள்) சுபகிரகங்களாகிய குரு சுக்கிரன், புதன், வளர்ப்பிறைச் சந்திரனாகிய இந்நான்கு கிரகங்களுக்கும் மத்தியில்சனி, சூரியன், செவ்வாய், கேதுகளாகிய கிரகங்களிருந்தால் ஜாதகர் செய்யும்படியான காரியமெல்லாம் கிட்டாமல் தடைபட்டுப் போய்விடும் அவர்கள் ஒருவருக்கொருவர் சேர்ந்திருக்கும்போது தமது காரியத்தை நடத்துவதற்கு உத்தேசங்கொண்டால் சந்திரலிருந்த இராசியைப் பார்த்து நடுநிலையாக பலன் சொல்லுவாய் எ-று

CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

நல்லதோர் பொருளை போக்கி நாடியேவருவோர்க் கொல்லாம்
வல்லதோரவங்காரி யிரவி சேய்க் கேட்பானாகிற்
சொல்லதுவன்றேசேருந்தொனிப்பவர் கோணமனால்
அல்லாது மூம்மூன்றைந்தி யிலறியேவருமோதே

(இ-ள்) நல்லக் கைப்பொருளை போக்கிவிட்டு, அதுமறுபடியும்வருமோ? வராதோ என்று கேட்பவர்கள் நிற்கும் ஸ்தானத்தைக் கவனித்து அந்த சமயத்தில் உதய லக்கணத்திற்கும் கணிக் ஆராய்ச்சி செய்து சனி இராகு சூரியன் மூன்றாரெட்டு பனிரெண்டிலிருக்க குரு உதய லக்கினத்தைப் பார்த்தால் உடனே கிடைக்கும் அவ்விதமின்றி இலக்கணம் ஐந்து ஒன்பதாகிய கோண திரிகோண ஸ்தானத்தில் குருவிருந்தால் ஒன்பது நாளைக்குள் எவ்விதமாயினும் கிடைக்கும் எ-று

இப்படி நல்லோர் நின்ற விடத்தினிற் கேட்பானாகிற்
பொய்பட்டப் போன நஷ்டம் போயவன் பெறுவேளன்று
மெய்பட சொல்லலாகு மேலன்றிகோட்கணின்றாற்
சொற்படி வேதமூர்த்தி சொன்னசொற்ற வராமதே

(இ-ள்) இவ்விதமாய் குரு சுக்கிரன் புதன் வளர்பிறை சந்திரன் உதயஸ்தானத்திலிருக்கும்போது போனபொருள் கிடைக்குமாவென்று கேட்பாராகில் கைவிட்டுப்போன பொருள் மெதுவாய் தருமென்று சொல்லவேண்டும் அன்றியும் மற்ற கிரகங்களெல்லாம் நல்லஸ்தானத்திலிருந்தால் சந்தேகமின்றி சொன்ன வாக்கியம் தவறாதென்றுணர்வீர்கள் எ-று.

சதா முகூர்த்தம்

நினைத்திடுகருமங்கட்கு நிட்சயநாளே சோமன்
அனைத்த ரோகணியரநாட்கொண்டைம்மூன்று நாழிதள்ளி
இணைத்தொருநன்மை செய்தர்லிடை கூறுவருவ
பனைத்தடிபருவதம்போற் பாரினிலிருக்குமாதே

(இ-ள்) மனிதர்கள் நினைத்துச் செய்யும் காரியங்களுக்கு விஷயஞ் சொல்லும்போது சந்திரன் உச்சமாயிருக்கும்ரோகணி நஷத்திரம் அறுபது நாழிகையில் பதினைந்து நாழிகை தள்ளி அதன் பிறகு எந்த காரியத்தைச் செய்தாலும் இடையூறில்லா காரியச்சித்தியாகும் மென்றுணர்வாய் பெண்ணே எ-று.

ஐந்தொரு நாட்கு நாளாயமர்ந்தநாளதுவுஞ்சுத்தம்
மூதொருசொன்ன நன்மை மூன்றிலொண்பலனே யாகும்
இந்த நாளன்றிவேறு சுபமேற்கவேறேயில்லை
தொந்தமாங்கனகமாதே சொல்லுநீயவனியோர்க்கே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) வளர்பிறை பஞ்சமியும் அந்த நாளிலமைந்த திதியுஞ் சுத்தமாயிருந்தால் முன்பு சொன்ன சுப, பலனில் மூன்று பாகத்தில் ஒருபாக பலன் கிடைக்கும் இந்த நாட்க ளெல்லாம் சுபகாரமான நாள் வேறுகிடையாது என்று பொன் போன்ற அழலோய்ந்த பெண்ணே உலகத்தார்களுக்கு சொல்லு வாய் எ-று

**இந்தனாள தற்குக் குற்றங் குருவிற்குச் சகடந்தள்ளி**
**எந்தனாளேனு நன்மை யிருக்குமேன் மேருவாகி**
**அந்தனாள் தனி நன்மையாயிழை மாதேகேளாய்**
**இந்தொருகுறிப்பாதே யிந்திரபதிபோல் வாழ்வான்**

(இ ள்) இவ்விதமாயமைந்த நாளிற்துங்குற்ற முண்டாவ தெவ்விதமென்றால் குருநின்ற இராசிக்கு சகடந்தள்ளி மற்ற எந்த தினத்திலாகிலும் நன்மையான சுபதின மேற்படுமாகில் அந்த நாளின் சுபலக்ஷணத்தை ஆராய்ந்து சொன்னால் இந்த குறி தப்பாமல் இந்திரனைப்போல சுகஜீவியால்ஜீவித்திருப்பதற் காகும், அன்றியும் கொடை வள்ளல்போல செழித்து வாழ் வான் திர்க்கதரிசியர்கவும், தெய்வதன்மையும் ஞானிகளையும் தேவராயும் சித்தராயும் ராஜயோகியும் மாவார் எ-று.

நலந்தீங்கு காண்டம் முற்றிற்று
(ஆக மொத்தம் 5)

| | | | |
|---|---|---|---|
| பூரட்டாதி ¼<br>உத்திரட்டா 1<br>ரேவதி 1<br>மீனம் 4¼ | அஸ்வினி 1<br>பர்ணி 1<br>கிர்த்திகை<br>மேஷம 4¼<br>மேஷம 4 | கிர்த்திகை<br>ரோகணி<br>மிருக சீரிட ½<br>ரிஷபம் 4½<br>ரிஷபம் ½ | மிருகசிரிட ½<br>திருவாதி 1<br>புனர்பூசம்<br>மிதுனம் 5¼ |
| அவிட்டம் ½<br>சதயம் 1<br>பூரட்டாதி ¾<br>கும்பம் 4½ | இவ்விதமாய் ஒவ்வொரு மாதத்திலும் நடந்து கொண்டிருக்கின்ற 27 நக்ஷத்திரங்களில் சந்திரன் சஞ்சரிக்கும்போது அதன் இராசியென்றும் ஜனன காலத்தின் நாழிகையைக் கணிதா ராய்ச்சி செய்த ஜனனலக்கினம் இன்னின்னதென்றுபனிரெண்டு லக்கினத்தில் ஒன்றைமாத்திரம் குறிப்பிடவும். | | புனர்பூசம ¼<br>பூசம் 1<br>ஆயில்யம் 1<br>கடகம் 5 அரை |
| உத்திராடம்<br>திருவோண 1<br>அவிட்டம்<br>மகரம் 5½ | | | மகரம் 1<br>பூரம் 1<br>உத்திரம் கால்<br>சிங்கம் 5கால் |
| மூலம் 1<br>பூராடம் 1<br>உத்திராடம் ¼<br>தனுசு 5½ | வசாகம் ¼<br>அனுஷம் 1<br>கேட்டை 1<br>விருச்சிகம் 5 | சித்திரை அரை<br>சுவாதி 1<br>விசாகம்<br>துலாம் | உத்திரம் ¾<br>அஸ்தம்<br>சித்திரை அரை<br>கன்னி 5 |


CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

## அற்பாயுட் காண்டம்

உதையா திசுருபங்கூடி யோரிட நிற்கத்தானு
மதியாகிப்பாபர்கூடி மற்றொருவிடத்தினிற்கச்
சிதையாமற் சுபரும்பாபர் சேர்ந்துடனிற்றாகில்
இதையாதித்தீம்புண்டாக்கி யிருப்பதாண்டிருப்பத்தைந்தே

(இ-ள்) இலக்கினாதிபதியும் ஒன்பதாமித்தானாகிய கருமஸ்தானாதிபதியும் சேர்ந்திருக்க, சந்திரனுடனே, சனி இராகு சேர்ந்திருக்க, சுபக்கிரகங்களும், அசுபக்கிரகங்களும் சேர்ந்தாலும் ஜாதகன் பிறந்து வளர்ந்து இருபத்தைந்து வயது வரையில் ஜீவித்திருப்பதற்காகும், அக்கினியால் மரணமாவான் எ-று 3

செனித்ததோருதையந்தன்னிற் சேர்ந்து நற்சுபருநிற்க
இளிக்குருவுடனே பாபரிருந்திடவரவஞ்சுங்கன்
தனுத்தொரு சென்மத்தானுஞ் சனிக்கேழினின்றாகில்
மதிக்கொருவீணமானான் மரணமாண்டிருப்பத் தைந்தே

(இ-ள்) சாதகன் சனனமான லக்கினத்தில் சுபக்கிரகங்களிருக்க குருபகவானுடனே சனி இராகு சேர்ந்திருக்க இராகும் சுக்கிரனும் இராசி நாதனும். சனிக்கு ஏழாமிடத்திலிருந்தால் சந்திரன் நீச்சமாயிருந்தால் அந்த சாதகன் பூமியில் பிறந்து வளர்ந்து வெகு பிரக்யாதியாயிருந்து இருபத்தைந்து வயதில் மரணமாவான் கடைமுடிவில் துர்மரணமாவான் எ-று 2

சென்மாதிசனியுங்கூடிச் சேர்ந்துடனேழில் நிற்க
கன்மாதிக்கெதிரோன் கூடிக்கலந்துடனிரவிநான்கில்
தன்மாதிதனத்தோன் சேர்த்து தரைமகனுடனேகூடப்
பொன்மாதினறசேகேளாய்ப் போய்விடுமீரெட்டாண்டில்

(இ-ள்) ஜென்மராசி நாதனும் சனியும் சேர்ந்து ஜனன இலக்கினத்திற்கு சப்தம் ஸ்தானத்திலிருக்க, ஒன்பதாமிடத்தகிபதியாகிய கருமஸ்தானாதிபதியாகிய கரும ஸ்தானாதிபதியும் சூரியனுடனே சேர்த்திருக்கும் போது, சூரியன் சுக ஸ்தானமாகிய நான்காமிடத்திருக்க, தருமஸ்தாதிபதியாகிய பத்தாமிடத்தாலும் இரண்டாமடத்தோனாகிய தனாதிபதியுடனே, சேர்ந்து செவ்வாயுடன் கூடியிருந்தால் பொன்போன்ற ரூபமுடைய பெண்ணே அந்த சாதகன் பூமியில் பிறந்து வளர்ந்து மகா உத்தமனாயிருந்து பதினாறாவது வயதில் மரணமாவானென்றுணர்வீர் ஆயுதத்தால் மரணம் எ-று

மன்னவனுதைடந்தன்னின் மதியுடன் காரிநிற்க
அன்னரித்தானபூமனனுகியேயிரவிக்கேழில்
நின்றலர் சுங்கற் காறி ணிலையதிற்பாம்பேயாகில்
சொன்ன தோரீராண்டிற் சோதனையாகப்போவன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) ஜனன லக்கினத்தில் சந்திரனும் சனியுமிருக்க அவர்களுடனே செவ்வாயுஞ்சேர்ந்து சூரியனுக்கு ஏழாமிடத்திலிருக்க சுக்கிரனுக்கு ஆறாமிடத்தில் இராகுவாகிலும், கேதுவாகிலும் மிருந்தால் அந்த சாதகன் பனிரெண்டு வயதில் மரணமாவான் வயற்று மார்பு கழுத்து நோயில் மரணம் எ-று

குறித்தலக்கினத்திற் காரி கூடியே மதியு நிற்க
வெறித்தங்கேயுதயத்தானும் வெள்ளியுமிரவியேழில்
பறித்தலக்கினாதிக்காறிற பாம்புடன் குருவு நிற்க
நெறித்தவனொருபத்தாண்டு நிலையதிற்சாவுண்டாமே

(இ-ள்) ஜனன லக்கினத்தில் சனியும் சந்திரனுமிருக்க, லக்கினாதிபதியும் சுக்கிரனும், சூரியனும் சப்தம் ஸ்தானமாகிய ஏழாமிடத்திலிருக்க லக்கினாதிபதிக்கு ஆறாமிடத்தில்இராகும் குருவுமிருக்கும் போது சனனமான சாதகன் பத்து வயதில் மரண மாவானென்றிவீர்கள் எ-று

ஆறுமிராறுக்காறிலம்புலிசனியுநிற்க
வேறுபட்டுதையத்தானும்விடையும்பெண்ணிடஞ்சேர
மாறுமுக்கோணரீன மாயினான்மாதே கேளாய்
ஈறுபட்டு யிரேழாண்டி லிறப்பனென்றியம்பலாமே

(இ-ள்) ஜனன லக்கினத்திற்கு ஆறாமிடத்திற்கு ஆறாமிடத்தில் சந்திரனும் சனியுமிருக்க, லக்கினாதிபதி கன்னியா ராசியிலிருக்க கோண திரிகோனாதிபதிகள் பகை நிச்சயமாயிருந்தால் அந்த சாதகன் ஏழு வருஷத்தில் மரணமாவானென்றிவாய் பெண்ணே எ-று.

உதையத்திற்கேழிற்வேந்த னுத்தமர்கெட்டிக்காரி
மதிபத்திலவர்க்கேழ்புத்திமண்ணிசுங்கனெட்டா நிற்கத்
சிறைவுற்றமதிக்கேமாற்ற நியருளின் றாராகில்
அதையொத்தநட்பானாலுமாரைத்தாமாண்டிற்சாவே

[இ-ள்] ஜனன லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் குருவும் சுபக்கிரகங்களுக்கு அஷ்டமஸ்தானத்தில் சனியும், சந்திரனுக்கு பத்திலும் அவருக்கு ஏழாமிடத்தில் புதனும் சுக்கிரனும் அஷ்டமஸ்தானத்திலிருக்க சந்திரனுக்கு ஆறாமிடத்தில் சூரியன் அங்காரகன் சனி. இராகு நின்றால் அவர்கள் நட்பு ஸ்தானத்திலிருந்தாலும் சாதகன் ஐந்தாவது வயதில் சன்னி சயித்தியம் என்ற ரோகத்தால் மரணமாவானென்றறிவீர் சன்னிசயித்தியம் என்ற ரோகத்தால் எ-று

ஒன்பதுபேருனின்ற நிலையதற் கொருவகரட்டாய்
இன்பமற்றிருந்தாராகி லிவனுமோராண்டிற்சாவன்
அன்பதாய்மதிக்கெட்டாற்சனியையந் தாண்டனிதற்சாவன்
தன்பதிசுங்கற்கெட்டிற் றரைமகனிருந்தார்சாவே

CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) நவகிரகங்களுக்கும் ஸ்தானத்திற்கு ஒருவர் அஷ்டம ஸ்தானத்திலிருந்தால் சாதகன் ஒரு வருசத்திற் மரணமாவான். சந்திரனுக்கு அஷ்டம ஸ்தானமாகிய இராசியில் சனியிருக்க ஐந்து வயதில் மரணமாவானென்றறிவீர், சனி துர் மரணமும் உண்டு செய்யும்.

மதிக்கெட்டின் பந்தனிற்கமன்னவன் பூமற்கெட்டாய்
விதிக்கெட்டில் வெள்ளி நிற்கவிடையுமோயிரவிக்
கெட்டில்
உதிக்கெட்டிற்புந்திக்கோழிலொருவனாய்ச்சாம நிற்க
கதித்தெட்டு வருடந்தன்னிற் கண்டிடுமாதேசாவே

(இ-ள்) சந்திரனுக்கு அஷ்டம ஸ்தானத்தில் சனியிருக்க குரு செவ்வாய்க்கு அஷ்டமத்திலிருக்க லக்கினத்திற்கு எட்டில் சுக்கிரனிருக்க சூரியன் எட்டாமிடத்திலும் புதனுக்கேழாமிடத்திலும் சந்திரனிருக்க சனனமான சாதகன் எட்டு வருசத்தில் மரணம் எ-று.

சூருயர்க்கெட்டிற்சோமன் சுன்னுதையத்துக்கெட்டில்
வீரியர்க்கெட்டில் வேந்தன் விடைக்கேழிலுதை
யனிற்கக்
காரியர்க்கெட்டாய்சுங்கன் கடுமதிக் கேழிறமன்
பார்வை நின்சாராகிற் பத்தரை வருடஞ்சாவன்

(இ-ள்) சூரியனுக்கெட்டில் சந்திரனும் சுக்கிரன் ஜனன லக்கினத்திற்கு அஷ்டமஸ்தனத்தில் குருவும் ரிஷபராசிக்கு ஜனன லக்கினமிருக்க சனிக்கு அஷ்டம சானத்தில் சுக்கிரனிருக்க, தேய்பிறை சத்திரனுக்கு சப்தமஸ்தானத்தில் செவ்வாயிருக்கவும் பார்வை செலுத்தினாலும் சாதகன் பத்தரை வருடத்தில் மரணமாவான் எ-று

பூமனாற் மந்தன் விட்டான் புந்திடவுதையந்தன்னிற்
காமனாரிருந்தவிட்டான் காரியுங்கலந்தேனிற்கச்
சோமனாரிரவிகூடிச் சொன்னதிலுதையனிற்க
ஆம்திமர்கெட்டிற்பொன்சேயண்டிரண்டதனிர்சாவே

(இ-ள்) செவ்வாயும் சனியிருந்த சானத்திற்குடையவனும் புதனிருந்த சானத்தில் சுக்கிரனிருந்த விட்டோனும் சனியுங்கூடி இருந்தால் சூரியனும் சந்திரனும் சேர்ந்து இலக்கினத்திலிருக்க அந்தசானத்திற்கு அஷ்டமத்தில் குருவுமிருந்தால் இரண்டு வருஷத்தில் மரணமுண்டாகும் ஆனால் மீண்டும் 5ம் வருடத்தில் மரண்மாவான்.

அற்பாயுட்காண்டம் முற்றிற்று
ஆகமொத்தம் 61

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

| | | | |
|---|---|---|---|
| பனிரெண்டாம் 1<br>விரயஸ்தானம்<br>மீனம 4கால் | லக்கினம் 1<br>உபஸ்தானப்<br>மேசம் 4அரை | இரண்டாவது 2<br>தனஸ்தானம்<br>ரிசபம 4¾ | மூன்றாவது 3<br>தீரஸ்தானம்<br>மிதுனம் 5½ |
| பதினோராவது 11<br>இலாபஸ்தானம்<br>குடுமபம் ¾ | ஜாதகன் ஜனன மரணநாழிகை யில் வந்த லக்கனம் உதயமாகித் தோ அதையே முதலாக வைத்து | | மிதுனம 5½<br>நான்காவது 4<br>சுகஸ்தானம்<br>கடகம் 5½ |
| பத்தாவது 10<br>ஜீவனஸ்தானம்<br>மகரம் 5கால் | கொண்டு அங்கிருந்து வரிசைக் கிரகமாய் 1 2 3 4 5 6 8 8 9 0 11 12 யென்று ஸ்தானங்களை குறிப்பிடவும். | | ஐநதாவது 5<br>புத்திரஸம்<br>சங்கம் 5½ |
| ஒன்பதாவது 9<br>பாக்கிய ஸ்தானம்<br>தனுசு அரை | எட்டாவது 8<br>ஆயுள்ஸ்தானம்<br>விருச்சிகம் 5½ | ஏழாவது 7<br>கனஸ்திரதான<br>துலாம் 5 | ஆறாவது 6<br>சத்துருதா<br>கன்னி 5 |

## யோக கண்டம்
## குரு சொன்னது
## இராஜயோகம்

இசைத்தொருவுதயத்தன்னி லிருப்பவரிளையோர் சோமன்
உசந்தொரு குருவுமேழி லொருவனாய் நிற்கத்தானும்
அசைந்தொரு பாம்புஞ்சுங்க னவருமே புத்தினிற்கத்
கசந்தவர்நவத்தினின்றார் கரிகிரிராஜயோகம்

(இ-ள்) இலக்கினத்திலிருப்பவருடனே செவ்வாய் சேர்ந் திருந்தால் குருபகவான் சப்தம ஸ்தானத்தில் தனியாயிருக்க, சுக் கிரனும் இராகும் பத்திலிருந்தாலும் லக்கினாபதிக்கு பகை கிரகங்கள் ஒன்பதாமிடத்திலிருந்தால் யானை குதிரை கருடன் மிகவும் கீர்த்தி பிரகாசமாயமைந்த இராஜ யோகத்தையனு பவித்த ஆனை குதிரைகளுடன் மிகவும் மென்மையாய் வாழ்ந் திருப்பதற்காகும் வெண்மை நிறம் உள்ள வாகனம் ரதமூலமும் உண்டு செய்யும்.

தஞ்சமாயுதையோன் கூடச் சந்திரனிடத்தான் சேரக்
கொஞ்சியேசுங்கனேழிற் கோலமாய்னின்றானாகில்
மிஞ்சியே குருவும் பாம்பு மிகைத்துடன் பத்தினிற்க
வஞ்சனை யோரும் பாக்கியம் வந்திடிலிராஜயோகம்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்)இலக்கினாதிபதியுடனேசந்திரனிருந்த இராசிநாதன் சேர்ந்திருக்க சந்திரன் சப்தம ஸ்தானத்திலிருக்க குருவுடனே இராகு சேர்ந்து பனிரெண்டாமிடத்திலிருந்தால் வஞ்சகஞ்செய் தாகிலும் வெகு திரவியஞ் சேகரஞ்செய்து இராஜ யோகத்தை அனுபவிக்கச் செய்யும்

நேசமாயரசனின் றனிலைதேதுவுதுதயமாகிப்
பாசமாய் மதியமேழிர் பதி பவன் சுங்கன் கூட
ஆசையாய் பத்தினின்றால் லாபனுமதிலேசேரத்
தேசமாய்ப்பாவர் கோணஞ் சேர்ந்திடிவிராஜ யோகம்

(இ-ள்) குரு நின்ற சானத்திலிருக்க அவருடன் சுக்கிரனும் சேர்ந்திருக்க அன்றியும்இலாபசானாதிபதியும் அவர்களுடனே சேர்ந்துபத்தாமிடத்திலிருந்தாலும் அவர்களகோண திரிகோண சானத்திலிருந்தாலும் இராசயோகத்தை அந்த சாதகன் அனு பவித்து சுக சவுக்கிய மாயிருப்பதற்காகும் எ:று

ஒத்தவனுதையன் சுங்க னொருமையாயுதையந் தன்னின்
மத்தவன் மதிதன் விட்டான் மழ்ந்துடனேமினிற்க
எத்துடன் குருவும் பா பு மிருவரும்பத்திணிற்க
கத்தவன் பாபரீரா றாயினுமிராஜயோகம்

[இ:ள்] இலக்கினாதிபதியும் சுக்கிரனும் லக்கினத்திலேயே இருக்க சந்திரனிருந்த இராசிக்குடையோன் சப்தம சானத்தி லிருக்க குருவும்இராகுவும், ஜீவன சாதானமாகியபத்தாமிடத்தி லிருக்க பனிரெண்டு வயதிற்கு மேல் சாதகன் இராசயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று

உதையாதிசுங்கன்பந்திலொருமையாயிருக்கத் தானும்
சிதைய யன்மதியினாலிற்சேர்ந்துடன்குருவும் பாம்
பதியாகவேழிற் சேரப் பாபருமிலாபணிற்க பும்
விதையாகணீன் றாராகி லிவனுக்கே இராசயோகம்

(இ-ள்) இலக்கினாதிபதியும் சுக்கிரனும்பத்தாமிடத்திலிருக்க சுக சானமாகிய நாலாமிடத்தில் குரூர குருவும் சந்திரனிருந்தாலும் எழாமிடத்திலிருந்தாலும் சனி இராகு செவ்வாய் சூரியனிவர்கள் இலாபசானத்திலிருந்தால் இந்த சாதகனுக்கு இராசயோகத்தையனுபவிக்கும்படியான தனதான்யசம்பந்துண் டாகும் எறு 5

அந்தமாயுதைத்தோனு மரசனுநாலினிற்கத்
நொந்மாய் மதியினாலே சுகமதில்லாமறபத்திற்
சொந்தபாய்ச் சுங்கனேழிர் சுகமுடன் பாம்புங்கூட
அந்தபாய்ப்பாபரீரா றிருக்கினுமிராஜயோகம்

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ.ள்) இலக்கினாதிபதியுடனே குருசேர்ந்து சுகஸ்தான மாகிய நான்காமிடத்திலிருக்க சுக்கிரன் ஏழாமிடத்திலிருக்கும் போது, சனி இதற்கு செவ்வாய் பனிரெண்டாமிடத்திலிருந்த லும் இராசயோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று

நன்றுள்ளவுதையத்தானு நன்மதிசுங்கனாலில்
அன்றுள்ள மதியும் விட்டான ரசனுவிடையுமேழில்
என்றுள்ள விரவிமூன்றி விருந்திடச் சநிசேய்லாபம்
ஒறான்றுலகாளும் ராஜயோகமேயுண்டுமாதே

(இ-ள்) இலக்கினாதிபதியும் வளர்பிறைச்சந்திரனும் சுக்கிர னும் நாளிருக்க சந்திரன் அஷ்டம ஸ்தானத்தில் குரு ஏழா மிடத்திலும் சூரியன் மூன்றிலும், சனியும் செவ்வாயும் இலாப ஸ்தானத்திருந்தால் இந்த சாதகன் தனதான்ய சம்பத்துடனே இராசயோகத்தையனுபவிப்பதற்காகும் எ:று

சந்திரலக்கினாதி தணிவிடையரசநாளிற்
சந்திரவுதையத்தானுஞ் சோகமில்லாமற்பத்தில்
வந்தரசானோனேழல் வருமதியுதையணிற்க
இந்தவர்பாபர் லாபமிருந்திடில் ராஜயோகம்

(இ-ள்) சந்திர லக்கினஸ்தானத்தில் இராசிநாதனும் சுக்கி ரன் நான்கிலும். சனன லக்கினாதிபதி பத்தாமிடத்திலுமிருக்க சந்திரன் இலக்கினத்திலுமிருக்க சூரியன் செவ்வாய் இராகு சனி இவர்கள் இலாப ஸ்தானத்திலுமிருந்தால் மிகவும் கௌரவ மும் பொருந்திய இராசயோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று

சொன்னதிலுதையத் தானுஞ் லிங்கனுமரவம்பத்தில்
நின்றதில் வேந்த சோமணிலையேழுணிற்கந்தானும்
நன்னதிர் காரிசெவ்வாயிலாபத்திற்புந்திவேந்தன்
பன்னதாயிருந்தாராகில் பாராளுமிராஜயோகம்

(இ-ள்) இலக்கினாதிபதியும் சுக்கிரனும் இராகும் பத்தா மிடத்திலிருக்க குருவும் சந்திரனும் ஏழாமிடத்திலிருக்க சனி செவ்வாயும் புதனும் குருவும் இலாபஸ்தானத்திலிருந்தால் சகல மும் மெச்சுந்தன்மையான பிரபுத் தன்மை பொருந்திய இராச யோகத்தையனுபவிப்பதற்காகவும் எ.று.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குருமதி புதையத்தானுங் கூடியே பத்தினிற்க
மதிபதிசுங்கன் றானு மகிழ்ந்துட னுதயனிற்கத்
தருமதிற் பாம்பு நான்கிற் றரும்புத்தியிரவிரசர
இருமூன்றிற் செவ்வாய்காரி யிருந்திடிலிராஜயோகம்

(இ-ள்) குருவும், சந்திரனும், இலக்கினாதிபதியும் சேர்ந்து பத்தாமிடத்திலிருக்க சந்திரனிருக்க இராசிநாதனும், சுக்கிரனும், இராகும் இலக்கினத்திலிருக்க புதனும், சூரியனும், நாலாமிடத்திலிருக்க, ஆறாமிடத்தில் செவ்வாயும், சனியுமிருக்கும்போது பிறந்த ஜாதகன் இராஜ யோகத்தை யனுபவித்தற்காகும் எ-று. 10

அரவுமேயிருந்த வீட்டா னம்புலிகேழி நிற்கத்
திரமுடன் சென்மவாதி சேர்ந்துடன் குருவும் பாம்பும்
மரபுள்சுங்கன் பத்தில் மகிழ்ந்துடனிருந்தாராகில்
குறைவிலாராஜயோகங் கொடுங்கணை விழியினாளே

(இ-ள்) இராகு கேதுக்களிருக் இராசி நாதன்சந்திரனுக்கு ஏழாமிடத்திலிருக்க ஜனன லக்கினாதிபதியும், குருவும், கேதும் சந்திரனும் பத்தாமிடத்திலிருந்தால் சதாகாலமும் குறையாத இராஜயோக முண்டாகும் எ-று.

சென்மாதிபனும் பெருமதியுஞ் சேர்ந்தேயொருவர் கொரு நான்கிற்
கன்மாதிபனும் பின்னிடத்தார் கலந்தேயரவத்துடன்
பொன்மாநகருக்கதிபதியும் பொன்னேயிரண்டாகியு நின்றால்
பெண்மானரசேநரயோகல் பெரியோருரைத்தபடி சொல்லே

(இ-ள்) ஜனன லக்கினாதிபதியும். வளர்பிறைச்சந்திரனும் நான்காமிடத்திலிருக்க பாக்கியஸ்தானாதிபதியும், அவருக்குப் பின்புரமாகியஅஷ்டமஸ்தானாதிபதியும், இராகுடனே சேர்ந்து குருவும் இரண்டாமிடத்திலிருந்தால் பிரபுத்தன்மையானஇராஜ யோகத்தையனுபவிப்பதற்காகு மென்று பெரியோர்கள் சொல் வார்கள் எ-று 12

சொல்லிலே சுங்கன்றனித்திருக்கச் சோதிமதியுமரவ முடன்
நல்லோரைந்தினயந்தினயந்திருக்க நலமாய்ப்பதினொன் திற் (குருவும் கம்
பொல்லார் கூடியிருந்தாலும் போகாதிவர்வாகனயோ
கல்லார் மதியின் கனங்குழலே காணதவர்க்கிங்குரை (செய்வாய்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) வாக்குஸ்தானத்தில் சுக்கிரன் தனியேயிருக்க சந்திரனுடனே கேது சேர்ந்தாலும் சுபகிரகங்கள் ஐந்தாமிடத்திலிருக்க, பதினோராமிடத்தில் குருவுமிருக்க அவருடனே சனி செவ்வாய், இராகு சூரியன் முதலான கிரகங்களிருக்கும் அவர்கள் நால்வருக்கும் வாகனயோகம் பெரிதென்று சொல்வாய் எ-று

அரவுடன்கூட சோமன் டுருபதினொான் றினிற்க
விரகுடன்சங்கன் வாக்யல் வெய்யவன்பஞ்சங்காக்க
மரபுடை லக்கினாதி மனமகிழ்ந்திருக்கக்கூட
விரைசெறிகுழலாய்கேளாய்வேண்டியசிவிகையேறும்

(இ-ள்) இராகு, சந்திரன் குரு இவர்கள் மூவரும் இலாபஸ்தானமாகிய சுக்கிரத்திலிருக்க ஜனன லக்கினமாகிய துலாமில் சுக்கிரனும் ஐந்தாமிடத்தில் சூரியனும் இலக்கினாதிபதியுடனே சேர்ந்திருந்தால் அந்த சாதகன் வித்யாச மிர்த்தனாய் வெகு பொருள் சேகரஞ்செய்து பல்லக்கு வாகனத்தையுடையவனாயிருப்பதற்கான இராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ:று

பாம்பொக்கப்பக்கும்மூன்றிற் பரவியேசுபர்கணிற்க
வேம்பொக்கச்சனி செவ்வாய் தான் வீரியவிலாபஞ்சேரக்
காம்பொக்கப் முலையினாளே கருதியேநிற்பாராகில்
ஆம்பொக்கநரயோகந்தா னறிந்துரையவனியோக்கே

(இ-ள்) இராகுடன் சுபர்கள் சேர்ந்து மூன்றாமிடத்திலிருக்க சனியும் செவ்வாயும் மூன்றாமிடத்திலும் இவர்கள் ஸ்தானத்திலும் சேர்ந்திருந்தால் அந்த சாதகன் பிரபுத்தன்மையானயோகத்தையனுபவிப்பதற்காகுமென்றுணர்வேன் எ-று 15

குருசுங்கனிருந்தவீட்டான் கூடியேயரவஞ்சேர
அரவுச்சங்கதிரோனட்பி லாறினின் மூன்றினிற்கப்
பருமுச்சங்கதனாய்ப்பொன்னும் பாம்புக்கு நாலாய்நிற்க
மருவுச்சங்குழலாய்கோளாய்மருவிலந்தோளியுண்டே

(இ-ள்) குருவுஞ் சுக்கிரனிருந்த இராசிநாதன் இராகுடனே சேர்ந்திருந்தாலும் சூரியனும். இராகும் மூன்றாமிடத்திலும், ஆறாமிடத்திலும் நட்பாயிருக்க குரு உச்சமாயிருந்து இராகு கேதுக்களுக்கு நாலாமிடத்திலிருந்தால் குற்றமில்லாத கப்பல் வியாபாரஞ் செய்து குறையாத இராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று



CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அரவோடரவமதின் வீட்டானமர்ந்தேயொருவர்க்
கொருநான்கில்
உரவாயரசணிரிரன்கு லொளிசேர் வெள்ளி இருந்
பரவாயுயர்நிதசந்திரனும் பாம்புமதற்குச் சதிரத்தே
உரவாயிருந்தாலெந்நாளு மொழியாதவர்க்குநர
யோகம்

(இ-ள்) இராகும் இராசி இருந்த இராசிநாதனும் சேர்ந்து லக்கினத்திற்கு நான்கில் குருவும், பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரனிருந்தாலும் வளர்பிறைச் சந்திரனும் இராகு கேதுகளும் கேந்திரம் பெற்றிருந்தாலும் நட்பு ஸ்தானங்களிலிருந்தாலும் பிரபுயோகமாய் ஜீவித்திருப்பதற்காகும் எ-று

சீவாதிபனுஞ் சென்மமுடன் சேர்த்தேயானார்க்
கேழாகில்
ஈ ரவுடன் சேர்ந்திடப்பார்பு மேழைமதியுமீரிரண்டிற்
பாவாய்பாகமிடமறிந்து பத்தியிருந்தாற்சுங்கனுமே
ஆவாதொருகாலமுமில்லை பிறையாயவர்க்கு
நரயோகம்

(இ-ள்) ஜீவனஸ்தானாதிபதி சன்மாதிபனுடனே சேர்ந்து சூரியனுக்கு ஏழாமிடத்திலிருக்க இலாபஸ்தானத்தில் இராகுமிருக்க தேய்பிறைச் சந்திரன் பன்னிரெண்டிலுமிருந்தாலும், அவர்களிருக்கும் பாகத்தை கவனித்தும் சுக்கிரன் பத்தாமிடமாகி ஜீவனஸ்தானத்திலிருந்தால் அந்த சாதகனால் ஆகாதகாயமொன்றுமில்லை அடிமையாட்களால் சகல நன்மையும் பெருமையும் அமைந்த யோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று

பேரியோகம்

சென்மாதிக்கிருபான்மூன்றிற் சேரவேங்கன்
பொன்னும்
கன்மாதிபின்னோனேழிக் கலந்துடனிருப்பாராகில்
பொன்னான்கிலாவஞ் சேர்ந்து போதேவேயிருக்கத்
தானும்
பின்சாய்ந்தகுழலினாளே பேழயங்கி முண்டாமே

(இ-ள்) உதயாதிபதி நின்ற ராசிக்கு வலமிடங்களிலும் 3 ஆம் ராசியிலும் சுக்கிரனும் குருவுமிருக்க 10ஆம் வீட்டோனுடன் 9ஆம் வீட்டோனும் கூடி சப்தம் கேந்திரத்திலிருக்க குரு நின்ற ராசிக்கு நான்காம் ராசியில் ராகு நின்றிருக்கப் பிறந்தவர்கள் அழகிய இனிய குரலையுடையவனே அவன் பேரியோகத்தையனுபவிப்பான் எ-று

ஏகசக்ராதிபன்

மதிக்காறிற்புந்திநிற்க மற்றபொன்னேழிசேரற்
விதிக்காறிற்சுங்கனிற்க வீரியவிராகுதானும்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

மதிக்காறினாலினல்ல மஞ்சுமன்மின்னோன்சேர
எதிர்த்தாடவெவருமில்லா வேகபூபாலனாமே

(இ:ள்) ஆறாமிடம் என்னும் தைரிய சானத்தில் புதனிருக்க நற்கோடக்களில் முக்கிய பெயருடைய குரு 7ஆம் ராசியி யிலிருக்க ஆயுள் லக்கினமாகிய 8ஆம் ராசிக்கு 6ஆம்மிடத்தில் சுக்கிரனிருக்க பலத்தைப்படைத்த ராகு சந்திரனிருந்த ராசிக்கு 9ஆம ராசியிலிருக்க நான்காம் ராசியில் சுயசானத்திற்குடைய வன் ஆஷ்பெற அவனோடு பஞ்சம சதானாதிபதியும் சேர அந்த சாதகனை எவறும் எதிர்த்தாடுவதற்கு இல்லாமலிருந்தி சாதகனே ஏக சக்ராதிபதியாக இருப்பான் எ:று

அரவஞ்சுங்கன்மதியரசனமர்ந்த விட்டோனோரு
நான்காய்
உரவாயிவர்க்குமேழன்றி யொருபத்தாக விடைகள்
குருவுமதியுங்கூடவதற் கொருபத்தாக விடைகன்
இரவுபகலுமொருகுடைக்கீழேகச்சக்கிரவர்த்தியுமாம்

(இ:ள்) இராகு சுக்கிரன் சந்திரன் குரு இவர்கள் நின்ற ராசிக்குடையோன் நான்காம் ராசியிலாவது அல்லது மேல் சொன்ன கிரகங்களுக்கு உறவாய் 10ஆம் ராசியிலிருந்தாறும் குரு சுக்கிரன் சேர்ந்து ஓர் ராசியிலிருக்க அவர்களுக்கு 10ஆம் ராசியில் சுக்கிரனிருக்க ஜெனித்தவர்கள் அந்த சாதகன் அல்லும் பகலும் ஒரே குளையின்கீழ் அரசு செய்யும் ஏக சக்கரவர்த்தி யாவன் எ:று

குருவுக்கைந்திடத்தேகங்கள் கோலமாநபத்திற்சேர
இரவுக்குப்பகையோன் விண்டானிவருடன்கூடிநிற்க
அரவுக்குச் சோழன் விட்டா னவனுமேயீரிரண்டேல்
மருலொக்குங்குழிதினாளே மணிமுடியிராஜயோகம்

இ:ள்) குரு நின்ற ராசிக்கு 5ஆம் வீட்டிற்குடையோனும் சுக்கிரனும் சேர்ந்து ஒன்பதாமிடமென்றும் பாக்கியஸ்தானத்தி லிருக்க சூரியனுக்குப் பகை ஷேத்திற்குடையவனும் சத்துருவும் கூடியிருக்க சந்திரனிருந்த வீட்டிற்குடையோன் பாம்பு நின்ற ராசிக்கு 4ஆம் ராசியிலிருக்க முல்லையரும்பு போன்ற ஸ்தனற தை யுடையவனே மணிகளிலமைந்த முடியைத் தாங்கும் ராஜ யோக முன்டென்றும் கூறுவாய் எ-று

வருவதுயோகந் ஈஉம் வளர்பிறையுச்சமாகிற்
குருவதுகடகந்தன்னிற் கூடிலக்கினத்தானத்துக்
கரவதுபத்தினிற்க வவ்வெள்ளியுச் சமாகில்
இருவிது கடகத்தானை யேறியேபர சேயாள்வான்

(இ-ள்) வளர்பிறைச் சந்திரன் உச்சம் பெற லக்கினத்ததி பதி 10ஆம்மிடமென்னும் ஜீவன்ஸ்தானத்திலும் சுக்கிரன் மீன ராசி உச்சம் பெற்றிருக்க மதம்பொருந்திய 20 பரிகளிலேரி ஊர் வலம் வரத்தக்கதாய் அரசாண்டிருப்பானென்றும் கூறுவர் எ:று



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சீவாதிபனுபரவமுமே சேர்ந்தேயரசனாலாகிற்
பாவாதிபனுநிறைமதியுப பத்தேசுங்கன்கலந்திருக்க
ஆவாவிடையினவ்வீட்டா னர்புலினின்றவதிபதியும்
ஈவாரொருவர்க்கொருநான்கி லிருந்தாலரசேயாளு
வனே

(இ-ள்) ஜெனனலக்கினத் தோனென்றும் ஜீவஸ்தானாதிபதியும் இராகுவும் சேர்ந்து குரு நின்ற ராசிக்கு நான்காம் ராசியிலிருக்க பாவக் கோட்க்களுடன் பூர்ண சந்திரனும் சேர்ந்து சுக்கிரன் வீடாகிய ரிடபதுலாந்திருக்க ரிடபத்திற்கதிபதியான சுக்கிரனும் சந்திரனிற்கு விட்டிற்குடையோனும்ஒருவருக்கொருவர் நான்கிற்கு நான்காயிருக்க அந்த சாதகன் உலகை யரசாலத்தக்க ராஜயோகமுடையவனாவான்.

சதுரெதிர்விட்டானைந்திற் சரசமாய் முன்பின்
னோரும்
அதிர்தருமிலக்கினத்தே யவருமேனிற்பாராகில்
எதிரவேயிலகக்கினத்தா னிருவருந்தர்மஞ்சேர
மதுரமாய்நிலவும் பாம்புஞ் சதிரமேயாகில்ராஜன்

[இ-ள்] நான்கு ஏழு இவ்விட்டிற்குடையவர்கள் ஐந்தாம் ராசியிலிருக்க முன்விட்டிற்குடையோரும் பின் விட்டிற்குடையோரும் மேன்மை பெற்ற ஜனன லக்கினத்திலேயே நிற்க ஜெனன லக்கினத்தோன் மேற்சொன்ன இருவருக்கும் 1ஆம் ராசியிலிருக்க சந்திரனும் பாம்பும் கூடி 1 4 7 10 ராசியிலிருந்தாலும் ராஜயோகமென்றே கூறுவர் எ-று 25

யோகமுண்டென்றுசொல்ல வொருநான்குமைந்துஞ்
சேர
ஆகமுமூன்றா மன்னோ னவருமேசேர்ந்திருக்க
நாகமுமிருந்தவீட்டா னடுப்பதிநாலாய்நிற்க
ஏகமாய்ச்சுங்கன் சென்மத் தாதியுங்கூடில்ராஜன்

(இ-ள்) நான்காமிடத்தோனும் 5ஆம் மிடத்தோனும் ஒன்று சேரவும் 6ஆம் வீட்டோனும் 10ஆம் வீட்டோனும்சேர்ந்து ஓர் ராசியிலிருக்க பாம்பு நின்ற விட்டிற்குடைய கிரகம் 4,7 ஆம் ராசியிலிருக்க ஜனன லக்கினாதிபதியும் நான்காம் ரரசியிலிருக்க ஜனனலக்கினாதிபதியும்சுக்கிரனும் ஒன்று கூடி இருக்கிறவனுக்கு ராஜயோகமும் அரசனுமாக இருப்பான் எ-று 26

கண்டுசொல்யோகந்தன்னைக் கருத்திலாரறிய
வேண்டி
விண்டுநல்லரசன் சோமன் வீரியசுங்கன்பாம்பும்
அண்டிடிலிருரெண்டாகி லவரவ்ரிடந்தானலாய்
வண்டுநேர்விழியாய்கேளாய் வருவதுயோகந்தானே

(இ-ள்) யோகத்தையறிய வேண்டியதெனில் குரு சந்திரன்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சுக்கிரன் பாம்பு இவர்கள் ஜனன லக்கினத்திற்கு நான்காம் ராசியிலிருக்க அவ்வீட்டிற்குடையோன் அவர்களுக்கு நான்காம் ராசியிலிருக்க வண்டுகளின் குதலையும் விழியையும் பழிக்கத் தகுந்தவளே பிரபல்யயோக முண்டாகுமென்றும் கூறுவா யறாக எ-று

அம்புலியிருந்த வீட்டா னாசற்கோரேழினிற்க
வெம்புகுங்கனூரான் வீரியசோமற்கேழில்
நம்பிலிபாம்பிடத்தா னயத்துடனவர்க்கேபத்திற்
செம்புலியாகின்றார் செகச்சக்குரவர்த்தியாமே

(இ-ள்) சந்திரனிலிருந்த இராசிநாதன் சந்திரனுக்கு ஏழில் நிற்க இராகு கேதுகளிருந்த இராசி நாதன் மேற்குறிப்பித்த கிர கங்களுக்கு பத்தாமிடத்திலிருக்கும் ஜனனமான ஜாதகன் சுக்கி ரேஸ்வரன் போல பிரபுத்தன்மையாள யோகத்தை யனுபவிப்ப தற்காகும் எ-று

ஒன்பதுபேரு நட்பிலொருவருக்கொருவர் நாலாய்
இன்பமாயிருந்தாராகி லிரவொளிபகலால் நின்ற
அன்பதோடாறுதேச மதன்றசாம்பிராச்சியோம்
என்பது நாலாயொன்றி லிருந்தரசாளும்யோகம்

(இ-ள்) நலகோட்களும் நட்புபெற்றும் ஒருவருக்கொருவர் நான்குக்கு நாலாய் அமர்ந்திருக்க அந்த ஜாதகன் இரவும் பக லும் ஓர் நாளெனங்கொள்ளும் 56 தேசத்தநிபதிகளுக்கும் மேம் பட்டவனாய் சாம்ராச்சிய யோகமுண்டென்றும் ஜெனித்த 5 வருஷங்களுக்கு மேல் யோகமுண்டென்றும் கூறுவாயாக எ-று

இடைசிறு முகமுநல்ல வேந்திழையாளே கேளாய்
குடைமுடன் குஞ்சம் வீசுமியோகமே கூறவேண்டில்
படைமன்னரசன் சுங்கன் மதிபுந்தியினையர்கூட
விடையனின்னிடத்தாரீரெண் டாயினுமிராஜயோகம்

(இ-ள்) இடைதொடை அழகு பொருந்திய லனதம் முதலி யவைகளையுடையவளே பிரகாசமும் பிரக்யாதியும் போகம்முத லியவைகளைப்பற்றி சொல்லவேண்டுவதெனில் குரு சுக்கிரன் புதன் சந்திரன் இவர்கள் ஒன்றுகூடி இருக்க சுக்கிரனின்ற விட் டிற்குடையவன் 2ம் ராசியிலிருந்தாலும் ராஜயோகமுண் டென்றே கூறுவர் எ-று

அரசனுமிலக்கினதானவு மேயீரிரண்டாய்ப்
பரிசமாயிருக்க நல்ல பாக்கியவானுங்கூட
விரசமாய்மதிக்கு நாவில் வீரயேசுங்கனிற்க
அரசியங்குழலேகேளா யாயிரம்யானைகட்கும்

(இ-ள்) குருவும் ஜெனனலக்கினத்தபதியும் 9ஆம்விட்டோ னும் சகிதம்பெற்றிருக்க சந்திரனிருந்த ராசிக்கு நான்காம் ராசி யில் சுக்கிரனுமிருக்க பெண்களில் சிறப்பு பொருந்தியவளே ஆயிரம் யானைகளை யுடையோகமுடையவானோனென்று கூறுவர் எ-று



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

### சாப்ராஜ்யயோகம்

அரசனாரிருந்த விடடானம் புலிக்கேழி நிற்க
விரசமாமதிதனூரான் விரியே வெள்ளிக்கேழில்
வரிசையாயுரவுநின்ற வதிமதியவாக்கு நாலிற்
சரசமாயிருந்தாராகிற் சாப்ராஜியயோகமாமே

(இ-ள்) குரு நின்ற ராசிக்குடையவன் சந்திரனின்ற ராசிக்கு 7ஆம் ராசியிலிருக்க சந்திரனிருக்க வீட்டிற்குடையவன் சந்திரனுக்கு ஏழாம் இராசியிலிருக்க இராகு நின்ற வீட்டிற்குடையோன் மேற்சொன்ன கிரகத்திற்கு நான்காம் ராசியிலிருக்க அந்த ஜாதகனுக்கு சாம்ராஜ்ய ராஜயோகம் சித்திக்குமென்றும் கூறுவாயாக எ:று

யோக காண்டம் முற்றிற்று

ஆக மொத்தம் 93

<table>
<tr><td>மீனம்<br>உபயம்</td><td>மேஷம்<br>ஸ்திரம்</td><td>ரிஷபம்<br>ஸ்திரம்</td><td>மிதுனம்<br>உபயம்</td></tr>
<tr><td>கும்பம்<br>ஸ்தானம்</td><td colspan="2" rowspan="2">இவ்விதமாய் இராசிகளின் ஸ்திர் உபயம் பார்ப்பதுடன் கிரக ஹம்சமமும் கவனிப்பீா.</td><td>கடகம்<br>சரம்</td></tr>
<tr><td>மகரம்<br>சரம்</td><td>சிங்கம்<br>ஸ்திரம்</td></tr>
<tr><td>தனுசு<br>உபயம்</td><td>விருச்சிக<br>ஸ்தானம்</td><td>துலாம்<br>சரம்</td><td>கன்னி<br>உபயம்</td></tr>
</table>

## பலாபலக் கண்டம்

### உறவு பகை சமன்

இரவு சனி செவ்வாய்தானு மிவர் மூன்று பேரும்பாவி
அரவு மதிராசன் விட்டா ராயிடிற்சுபரேயாவர்
வரவுத்தனி சேய்விட்டா ராயிடிரசுபரும்பாபர்
உரவரிந்துணரக்கலாகு முகமது கேளாய்மாதே.

(இ-ள்) சூரியன் குஜன் சனி ஆகிய முக்கோட்களும் தினசரிந் பாவக்கோனென்றும் இராகு சந்திரன், குருஇவர்களும்டி

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சந்திரன் குரு இவர்கள் க்ஷேத்திரங்களில் நின்றவர்களும் நற் கோட்க்களாவார் சனி குஜன் இவர்கள் வீட்டிலிருந்தவர்கள் சுபரும் பாபருமாயிருப்பார்கள் இவ்வாறு சுபன் அசுபன் என் பதை உறவறிந்தே சொல்ல வேண்டும் எ-று

உதையமேழ்நான்குபத்து மவர்க்குறவுள்ளோர் கோணா
மதியமுஞ்சதிரத்தாரும் பதியகோணர்க்குநட்பு
விதியதாரீராறெட்டில் விரியேயுவர்க்கு பொல்லார்
பதியதாங்குரிதான்கேளாய் பகைநட்புமறியும்வாரே

(இ-ள்) ஜெனனலக்கினம் நான்காம் ராசி 7 ஆம் ராசி 10 ஆம் ராசி இவ்விராசிக்குயோர்க்கு கோணராசிக்குடையோர் உறவுளவராவர் சந்திரனும்சந்திரனின்ற ராசிக்கு 1,4,7,10 ஆம் வீட்டிற்குடையவரும் கோணராசியதிபதிகளுக்கு நட்பினரா வார் மேற்சொன்ன கிரகங்களுக்கு 6, 8, 12 ஆம் ராசிக்குடைய வர்கள் பகைவரும் கொடிய வருமாவார் இவ்வாறே பகை முதலியவைகளையறிந்து சொல்லுதல் வேண்டும் எ-று.

ஆறுமீராறுமெட்டோர் கோணமேசகனேயாவர்
ஏரியேசெய்வாய்காரி விளங்குமான் கதிரோன்கூட
ஏரியகோணஞ்சேர விவர்க்குமேசமனேயாவர்
கூறியகண்ணாய்கேளாய்குறியதாய்சமனே சொல்லும்

(இ-ள்) ஜெனனராசிக்கு 6 8 12 ஆம் ராசிக்குடையவர்கள் கோணராசியதிபதிகளுக்கு சமத்துவம் உடையவர்களாவர் பறாக்கிறமமுடைய செவ்வாய் சனி சூரியன் இவர்கள் ஒன்று கூடி கோணராசியிலிருந்தால்ஒருவருக்கொருவர்சமத்துவமுடை யவர்களாவார் அம்புகளைப் பழிக்கும் விழிகளையுடையவளே இவ்விதமிருப்பதேசமன் என்று சொல்வார், எ-று.

பலன் சொல்லும் விபரம்

பத்தெழுமுதைய நான்கு பேருக்கும்பகைவர்கேளாய்
ஒவ்வெழுமாறுமெட்டு மொருபன்னிரண்டுமாகக்
கத்தேழிலொன்றுபோகக் கருத்துளோர்சொன்ன நூலை
விந்தேழுகமலமாதேவிளம்பிடாய்விண்ணுலோர்க்கே

(இ-ள்) அழகு வாய்ந்த பெண்ணே கணிதவல்லோர்களா கிய சாஸ்திரிகளுரைத்த வேத வாக்கியத்தை இந்த பூமியிலுதித் தோர்க்கு பலாப்பலன்களையறிந்துசொல்லவேண்டுவது எப்படி யெனில் 1 4 6 10 ஆம் வீட்டோர்க்கு பகைவர் யாரெனறால் 5,8,12 ஆல் ஸ்தானத்திற்குடையவர்களே யாவார்கள் எ-று. 4

அரவிருந்திடும் விட்டார்க்கு மம்புலியிரவிக்காகார்
இரவியிந்திருந்தவிட்டா ரிவருமேரவுக்காகார்
உரவன்றிப்பார்க்கலாகா வுமதுவறியாதார்க்கு
விரைசெரிகுழலினாளே விளம்பிடாய்ளங்கத்தானே.

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) பாம்புகளாகியஇராகுகேது களிலிருந்தராசிக்குடையோர்க்கு சூரியன் சந்திரன் இவர்களுக்குப் பகைவர் சூரியன் சந்திரனிருந்த வீட்டோர்க்கு ஷெபாம்பிருந்த வீட்டோர்க்கு ஆகாது. ஒருவருக்கொருவர் உறவாகியநட்பின்றி நோக்குதலுமாகாது. என்றுஅழகும் இன்பமும்வாய்ந்த குரலையுடையவளே இப்பூமியிலுதித்தோர்க்குஇவ்வாரறிந்துபலன் கூறுவயாக எ-று.

பலாபலக் காண்டம் முற்றிற்று
ஆகமொத்தம் 98.

---

| | | | |
|---|---|---|---|
| விரய ஸ்தானம் | இலக்கினம் | குடும்ப ஸ்தானம் | தரஸ் ஸ்தானம் |
| இலாப ஸ்தானம் | மாரதஸ்தானம் 2 4 7 8 9 10 11 12வது ஸ்தானங்கள் | | சுகஸ் ஸ்தானம் |
| ஜீவனம் ஸ்தானம் | | | புத்திர ஸ்தானம் |
| பாக்கிய ஸ்தானம் | ஆயுள் ஸ்தானம் | களத்திர ஸ்தானம் | சத்ரு ஸ்தானம் |

## தீர்க்காயுள் கண்டம்

---

### தீர்க்கவயது

மந்தனாரிருந்தவீட்டார் மறைப்பிலாச்சுபரேசேரில்
கொந்தமாயெட்டோனட்தற்சுகமுடனிருந்தாராகில்
அந்தமாயாதிக்காறி லவனுக்குமுன்பின்னோரும்
வந்தநாளுறவேயாகில் வயதுமேநூறதாகும்.

(இ-ள்) சனியிருந்த ஸ்தானாதிபதி மறைவுஸ்தானத்தில்லாமல் அவருடனே சேர்நதிருந்தும் அஷ்டமஸ்தானாதிபதி நடபாயிருந்தால் சூரியனுக்காருமிடத்திலும், அவனுக்கு முன்மின்னிருந்த ஸ்தானாதிபதிகள் உறவாயிருந்தால் நூறுவயதுவரையிலும் ஜீவித்திருப்பதற்காகும் எ-று. 1

அட்டமவிடத்திற்பாப ரன்றியேசுபர்கனிற்கத்
தொந்தமாயெட்டோனட்பிற் சுகமுனிருந்தாராகில்
சட்டமாயிரண்டோனின்ற சனிவீட்டான் சமனாய்
நாவில்
அட்டமாயிருந்தானாகி விவனுக்கேதயது நூறு.

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) அஷ்டமஸ்தானத்தில் பாபரில்லாமல், சுபரிருந்தால் சனி நட்பு ஸ்தானத்திலிருக்க, இரண்டாமிடத்தாலின்றவனும், சனி நின்ற ராசிநாதனும் சமமாய் நாலில் இருந்தால், நூறு வயது வரையிலும் ஜீவித்திருப்பதற்காகும் எ-று 2

சனிசதிபக்கமாறி சலிப்பில்லாச்சுபர்கணிற்க
விதித்கொருவாட்சி நட்பாய் வீரியேயிருக்கத்தானும்
பதிக்குருநாளாய் நின்றால் பரமனார்லபியே நூறு
அதிற்குறையா மனிற்கு மாபுலிக்கதிகமாதே

(இ-ள்) சனிக்கு இருபக்கத்திலாயினும், ஆறாமிடத்திலாயினும் சுக்கிரனிருக்க லக்கினாதிபதி ஆக்ஷி நட்பாயிருக்க, லக்கினத்திற்கு நாலில் குருயிருந்தால் சாதகனுக்கு வயது நூறு என்றுரைக்கப்படும் எ-று

விதிக்கோரிராறிலெட்டில் வெள்ளிபொன்றிங்ககணிச
சதிச்சனிகறினட்போர்னிற்கச்சமனாகசனிவீட்டானும்
அதற்காக நாலிற்பொன்னி மமர்திருந்தேட்டான்கூட
மதிக்கிணை மாதேளோய் வயதுமே தூறதாகும்.

(இ-ள்) லக்கினத்திற்கு ஒட்டு பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரனும் குருவும், சந்திரனுமிருக்க, சனிக்கு ஆறில் நட்பு கிரகங்களிருக்க இவர்களுக்கு சமமாக சனி இருந்த ராசிநாதனுமிருக்க, நான்காமிடத்தில் குரு இருக்க அரை அஷ்டமத்தோன் சேர்ந்திருந்தால் சந்திரப் பிரகாசமுடைய மாத, சாகன் நூறு வயதிருயப்பான் எ-று

எட்டாறு பனிரெண்டோனுமிவறுமேயொறுநான்காகத்
தொட்டாறு பனிரெண்டெட்டோர் சுபமுடன் சேர்த்திறுக்க
நட்டாறிற்காரினிற்க நலமுள்ளோர் பார்வையாகிப்
பெட்டாறு மூன்றுமொனறிப் பூமியிலிறுப்பன்மாதே

(இ-ள்) அஷ்டமத்தோனுல், பனிரெண்டாமிடத்தோனும், நான்சாமிடத்திலிருக்க அஷ்டமாதிபதியும், பனிரெண்டாமிடத்ததிபதியும் சுபக்கிரகங்களுடனே சேர்ந்திருந்தால் ஆறாமிடத்தில் சனி இருக்க சுபகிரகங்கள் பார்வைச் செலுத்தி லக்கினம், மூன்று ஆறாமிடத்திலிருந்தால் பூர்ணாயுசாய்இருப்பதற்காகும் எ-று 5

கார்க்கு மீராறெட்டிற் கனக நற்சுங்கன் புந்தி
சேரிக்கையாகி நின்றார் சென்மாதிக்கு நாலாய்க்
கோரிக்கையாக வெட்டோன் கூடவேமதியுஞ்சேயப்
பாரிக்க மொன்றாய் நூறு வயதாக நிற்குமாதே.

(இ-ள்) சனிக்கு எட்டு பனிரெண்டில் குரு, சுக்கிரன, புதன் சேர்ந்திருந்தால் லக்னாதிபதிக்கு நாளில் அஷ்டமஸ்த்தானாதிபதியும் சந்திரனுமிருக்கநூறுவயதுவரைஜீவித்திருப்பதற்காகும். எ-று 6


CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

எட்டுடனாட்சி நட்புமிருந்துடனுச்சமாகில்
நட்டுடன் காரியுச்ச நட்புடனாட்சி சேரக்
கட்டுடனல்லோர் பார்க்கக் காரியிலிரவியன்றித்
யொட்டிடாதிருக் கின்மாதே தோன்றியது நூறு

(இ-ள்) அஷ்டமஸ்தானாதிபதி நட்பு ஆக்ஷிநட்பு, உச்சமாயிருக்க சுபகிரகங்கள் பமர்வை செலுத்த சனியும், சூரியனும் சேராதிருந்தால் சாதகனுக்கு நூறு வயது எ:று 7

எட்டிருபக்கனல்லோரிருத்திடக்காரி நட்பில்
தொட்டு முன்பின்னோர் நட்பாய்ச் சுபருமேயிருந்
தாராகிற்
கட்டுடனெட்டு விட்டான் கனகநற் கங்கன் சேர
மட்டிலாதிருப்பன மாதே வயதுமே நூறதாக

(இ-ள்) அஷ்டமஸ்தானத்திலிருப்பவர்கள்சுபராயிருந்ததிட சனி நட்பாயிருக்கவும் லக்கினத்திற்கு முன்பின்னிருக்கும் ஸ்தானாதியரும் நட்புஸ்தானத்திலிருக்க சுபராகவுமிருந்தால், அஷ்டம ஸ்தானாதிபதி குரு, சுக்கிரனுடன்சேர்ந்திருக்கசாதகனுக்கு வயது நூறு எ:று 8

எட்டுடனெட்டு விட்டார் இனியவராட்சியாகில்
மட்டுடன் பாபர்பாரா ராபினுஞ்சுபரே பாக்கக்
கட்டுடனுதையந்தன்னிற் கனகநற்கங்கணிற்க
விட்டிடாதிருக்கிநூறுவயதாக விருப்பன்மாதே

(இ-ள்) அஷ்டமஸ்தானாதிபதியும், அவர்களுக்கு அஷ்டமத்தானும் ஆசாரியாயிருக்க, அவர்களை பாபர் பாராமலிருக்க சுபக் கிரகங்கள் பார்த்தால் ஜனன லக்கின்த்திற் சுக்கிரனும் குருவிருக்க சாதகனுக்கு வயது நூறு எ:று 9

எட்டவணிரண்டிணிற்கவேழுடனுதையஞ்சேரத்
தொட்டவன் தர்மமூன்றிற் றேன்றியே பாபர்பாரா
விட்டவனாசன் பத்தில் வீரியேணிற்றானாகில்
இட்டவனாகி வாழ்வணிவனுக்கே வயது நூறு

(இ-ள்) அஸ்டமஸ்தானாதி இரண்டிலிருக்க 7 ஆம்மிடத்திலிருக்கபாபர்பாராவிட்டாலும், குருபத்திலிருந்தாலும் சகலரும் மெச்சும்படியான நூறு வயதிருப்பார் எ-று, 10

ஆறெட்டுக் குடையோர் செறிந்திட்டவவிரையத்
திணிற்க
மொறட்டு விரையத்தானு மறுத்துமாறெட்டிணிற்க

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கூரெட்டு முதையந்தன்னிற் குருவாகிச் சுங்கனிற்க
ஏறிட்டு வயது நூறுயிருப்பனே புவியின்மாதே

(இ-ள்) லக்கினத்திற்கு ஆறு எட்டுக்குடையோர் சேர்ந்து விரய ஸ்தானத்திலிருக்க, பனிரெண்டாமிடத்தான் அஷ்டமத்திலிருக்க மூன்றாமிடத்திலாகினும், அஷ்டயஸ்தானத்திலாகிலும் குரு சுக்கிரனிருக்க ஜாதகனுக்கு வயது நூறு எ-று 11

சோமனார்பெருமையாகி தசாதிசேர்வெள்ளிக்கேழிற்
காமனாரரசனாலிற் காரியுனிற்றானாகிற்
பாமனாரிவிசேயும் பாம்புமே பாராராகில்
ஏமனாரழை திட்டாலு மிருப்பவனே வயது நூறாய்

(இ-ள்) வளர்பிறைச் சந்திரன் சுக்கிரனுக்கு ஏழாமிடத்திலிருக்க குரு நான்காமிடத்தில் சனியுடனிருக்க சூரியன், செவ்வாய் இராகு, கேதுக்கள் பராதிருந்தால் எமபயமில்லாமல் நூறு வயதுவரை ஜீவித்திருப்பதற்காகும் எ-று 12

உதயத்திற்சுபரேனிற்க வொருபகையாரும் பாரா
மதியத்தினல்லோரன்றி மற்றயரிருக்கலாகா
அதையத்திற்சுபரே கூடியம லி பெருமையாகில்
விதியற்று போகாதாகி பேதியினிருப்ப நூறாய்

(இ-ள்) ஜனன லக்கினத்திற் சுபரிருக்க அவர்கள் பகைவர் பாராதிருக்க பத்தாமிடத்திற் சந்திரனும் சுபக்கிரகங்களுமிருப்பதல்லாமல் மற்ற பாபக்கிரகங்களில்லாதிருந்தால் அந்த ஜாதகன் உலகத்தில் நூறு வயதுவரை ஜீவித்திருப்பதற்காகும் எ-று 13

உதையாதிபதியு நட்பா யாட்சியு முச்சமாகில்
மதியாகிலாட்சியுச்ச நட்புட பெருளாகியமல்
இசையதிபாபர்பாரா ரென்னினுஞ்சுபரே பார்க்கச்
சிதையாமனூற்றாகிச் சிரியதோர்மாதே நிற்கும்

(இ-ள்) ஜனனலக்கினத்தான் ஆஷி உச்சம் நட்பு ஸ்தானங்களிலிருப்பதாலும், வளர்பிறைச் சந்திரனும் நட்பு ஆஷி, உச்சமாயிருகக பாபர் பாராமல் சுபர்பார்வை பெற்றிருந்தால் ஜாதகன் நூறு வயதுவரை ஜீவித்திருப்பதற்காகும். 14

சிதிரெதிரெழுந்தோர் சமர்த்தாய்க்கோணஞ் சேரக்
சதிரெதிர் வீட்டோனட்பாயச் சரசமாய்நிற்கத்தானும்
எதிரெதிர் குருவே நிற்க விந்து நட்புச்சமாகிற்
கதிரவன் போலவராகிக் கனக்கவே வயது நூறு.

CC-0 Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சூரியனுக்கு ஏழாமிடத்ததிபதி கோணத்திலிருக்க இரண்டாமிடத்தான் நட்பு ஸ்தானத்திலிருக்க அவர்கட்கு எதிரில் குருவிருந்து பார்வை செலுத்த சந்திரன் நட்பு உச்சஸ்தானத்திலிருந்தும் சூரியபிரசாசமாய் நூறு வயது வரையில் ஜீவித்திருப்பதற்காகும் எ-று

தோணியவிலக்கினத்தான்சோமனாரிறுந்தவிட்டான்
பேணிய லெட்டோன்காரி பிறிவினையில்லாதாகிக்
காணியேசுங்கன்புந்தி கனகனல்லரசன் சேரப்
பூணியேவிதியுயர்ந்து பூமியிலிருப்பன்மாதே

(இ-ள்) லக்னாதிபதியும் சந்திர நின்ன ராசிநாதனும்அஷ்டமஸ்தானாதிபதியும் சனியும் பிரியாமலிருந்தால் சுக்கிரனும் புதனும் குருவும் சேர்ந்திருந்தால் உலகத்தில் பூர்ணாயுசாய் வாழ்வதற்காகும் எ-று

சனியுடன் பாபர்கூடித் தானுமேயாறெட்டாகில்
விதியுமேயாட்சி நட்பாய் றீரியசுபரே பார்க்கப்
பதிமதியரசன் சேரப் பாங்குடன் சுங்கனிற்கில்
அதிபதியாகி நிற்ப னவனுக்கே வயது நூறு

(இ-ள்) சனியும் பாபரும் சேர்ந்து ஆறு, எட்டாவது ஸ்தானத்திருந்தால் லக்கினாதிபதி ஆஷி, நட்புஸ்தானத்திலிருந்து சுபர் பார்வை பெற்றிருக்க அவர்களுடன் சந்திரனும் குருவும் சுக்கிரனும் சேர்ந்திருக்க, அந்த சாதகனுக்கு வயது நூறு எ-று.

உற்பதியாதினின்றா யுகையாதி பதிக்கு நட்பா
நற்பதி சேர்ந்து நிற்க ஞாயிறு பாராதாகிச
சர்ப்பதிகாரி செவ்வாய் சரசமாய்க் கோணஞ்சேர
நிற்பது தயது நூறு நினைவதாயுரைப்பர்மாதே

(இ-ள்) லக்னாதிபதிக்கு ராசிநாதன் நட்பாய் உத்தமஸ்தானத்திலிருந்து சூரியன் பாராதிருந்தால் சனியும் செவ்வாயும் கோணமேறியிருந்தால் சாதகனுக்கு நூறு வயதென்று சொல்லுவார் பெண்ணே எ-று.

மதிபதியதர்க்கு நாலின் மன்னவன் புந்திசுங்கன்
அதிபதியதர்க்கும்பத்தி லவரிறுத்திடவேநோக்க
விதிபதியிரவிகாரி விரிய செவ்வாய் தானும்
மதிபதிகோண நின்றால் விதியது நூறதாகும்

CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

[இ-ள்] சந்திரனிருக்க ராசிநாதனுக்கு நாலில் சுக்கிரனும் புதனும், குருவுமிருக்க அவருக்கு பத்தாமிடத்தில் அந்த சுபர்கள் பார்வை செலுத்தினாலும், லச்கினாதிபதி, சூரியன், சனி செவ்வாய் ராசிநாதனும் கோணமேறினால் வயது நூறு எ-று 19

திர்க்காயுள் காண்டம் முற்றிற்று

ஆகமொத்தம் 117

| | | | |
|---|---|---|---|
| விரய ஸ்தானம் | இலக்கினம் | குடும்ப ஸ்தானம் | சகோதர ஸ்தானம் |
| இலாப ஸ்தானம் | இவ்விதமே ஒவ்வொரு லக்கினத்திற்கும் அமையும் | | மாதுர் ஸ்தானம் |
| காரிய ஸ்தானம் | | | புத்திர ஸ்தானம் |
| பிதுர் ஸ்தானம் | ஆயுள் ஸ்தானம் | 1 ஸ்திர ஸ்தானம் | சத்ரு ஸ்தானம் |

## பிரதியோக காண்டம்

சத்தமவிடத்தான் றானுஞ் சதிரெதிர்பதியார் கூடி
உத்தமபாக்குயத்தி லுடையன் கூடச்சேர
அத்தமமில்லாதாகி யைந்துள்ளோன் சன்மஞ்சேர
உத்தமசிவனைந்தி லிறுந்திடில் ராஜயோகம்

(இ-ள்) ஏழாமிடத்தானும் லக்கினாதிபதியும் சேர்ந்துபாக்கியஸ்தானாதியுடனே கூடினாலும் ஐந்தாமிடத்தான் அஷ்தமயமில்லாமல் லக்கினத்தில்இருந்தால் பத்தாமிடத்தான் ஐந்தாமிடத்திலிருக்க சாதகன் ராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று.

ஏழிடமுறையமெட்டி லிறுக்கவே:யெட்டிற் பின்னே
வாழ்வுடன்னியாய் நிற்க வறுமந்த ராஜயோகம்
ஆழியின் தீவுமெல்ல மவளதாயா சாயாள்வான்
தோழினற்கமலமாதே சொல்லியத்தையவனியோற்கே

CC-0 Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) ஏழாமிடத்தானும் லக்கினத்திலாகிலும் அஷ்டமஸ்தானத்திலாகிலுமிருக்க சாதகன் ராசயோகத்தையனுபவிப்பதற்காகும்படியானதனதான்யசம் பந்துடன்சகா தேசத்திலும் அரசனைப்போல கீர்த்திசெலுத்திகொண்டிருக்கும் படியாயிருப்பதாகும் எ—று.

இராஜயோகம்

சதிர்ப்பஞ்சத்தானுங்கூடிச் சத்தமஞ்சேர்ந்திருக்க
அதற்கெதிர்பதியே சேர்வுற் றேழிரண்டதனிற்க
அதிர்நவத்திடத்திடத்த னூரி லன் றியேலக்ணஞ்சேர
மதுராமாய்ச் சீவலர்பஞ் சேர்ந்திடிலி ராஜயோகம்

[இ:ள்] பஞ்சமஸ்தானாதிபதி சப்தமஸ்தானத்திலிருக்க அவருக்கெதிரில் லக்கினாதிபதி பேர்ந்திருந்து இரண்டாமிடம் ஏழாமிடத்திலிருக்க பதக்கியசானாதிபதி லக்கினத்திலிருக்க, பாக்கியசாதனாகி ஜீனவஸ்தானத்திலாகிலும், லாபஸ்தானத்திலாகிலும்சேர்ந்திருந்தால் ராஜயோகம் எ-று

மதிபதியரசன் றானோர் யாக்கமாய்ச் சுங்கநிற்க
விறிபதியாட்தி நத்பு வேண்டியே நிற்குமாகில்
அதிபதியாசற்கேழி லவனிருந்திட நேர்நோக்கச்
சதுபதிமாதேகேளாய் தாழ்விலாதரசேயாள்வன்

[இ:ள்] சந்திரனின்ன ராசிநாதனும் குருவும் சுக்கிரனும் சேர்ந்திருக்க லக்கினாதிபதி ஆசி நட்பாயிருந்தாலும் குருவுக்கு ஏழாமிடத்திலும் பார்வை செலுத்தினாலும், அந்த சாதகன் ராஜயோகத்தை அனுபவிப்பான் பெண்ணே எ-று.

உதயமெய்னியவாளுமொன்றியே நடுவாய் நிற்கத்
கதிர்காரி செவவாய் நானுங் கனத்த வீராறிற்சேரக்
கதிரொளி யெங்ந்தீபங் கனமொக்க சேஷனாகி
மதிதவழ்கயிலை காத்த வண்மைபோ லிருப்பன்மாதே

[இ-ள்] லக்னாதிபதி இரண்டாமிடத்தானும்சேர்ந்துதுவாதஸ்தானத்தின் மத்தியிலிருக்க, சூரியன், செவ்வாய், சனியும் பனிரெண்டாமிடத்திலிருக்க அந்த சாதகன் சூரியப்பிரகாசம் போல, சுகபோக சவுக்கியமுடன் பலருக்கும் உபகாரியான ராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று.

அரவுடனிருந்த வீட்டானாறிரண்ட தனுவில்லாத்
திரதுடன் கிற்பத்திற் சேய்காரி யிரவியன்றிக்
கரமுடனரசன் சோமன் கடுவெள்ளியிருக்கக்கூட
உரமுடனி லக்கினத்தா னுடற்பதி சேர்ந்தால்யே கம்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) இராகுடன் சேர்ந்த ராசிநாதன் பனிரெண்டாவது ஸ்தானத்திலில்லாமல் நாலாமிடமும் பத்தாமிடத்திலிருக்க சனியும் சூரியனும் சேராமல் அவருடனே குருவும் சந்திரனும் யிருக்க லக்கினாதிபதியுடன் ராசிநாதனும் சேர்ந்திருந்தால் மிகவும் மேலான யோகத்தை யனுபவிப்பதற்காகும் 6

பறித்தலக்னாதியாகியப் பாக்கியவிடத்துக் கிப்பாற்
குறித்தைந்து நான்கு பேருங் குறையில்லாதணியாய்
நிற்க
நெறிந்து லோகாதியல்லா நிலையதாயரசேயாள்வன்
வெறித்து காமத்தினாலே விண்ணுளோர்க்குறைப்
பாய் மாதே

(இ-ள்) வக்கினாதிபதியானவர் பாக்கிய ஸ்தானத்திற் பின்புறமாயிருக்க ஐந்தாமிடத்தானும், நான்காமிடத்தானும், தனித்தனியேயிருக்க மிகவும் நீதிநெறி தவறாமல் சகலருக்கும் உத்தமனாயிருந்து உலகத்தையாளும் படியான சமர்த்துடையவனாயிருப்பதற்காகும் எ-று 7

பத்துடன் முன்னும் பின்னும் மருமதிச்சுங்கன் புந்தி
இத்துடனரவஞ்சேர்வற் றிருக்கவேயிரவியன்றி
ஒத்துடனுதையந்தன்னி லுதையா திருறவு நின்றார்
கத்துடன் பெறுமையாகிக்கனக்க வேயர சேயாள்வன்

(இ-ள்) பத்தாமிடத்ததிபதிக்கு முன்னும் பின்னும் சந்திரன் சுக்கிரன், புதனும் இராகு சேர்ந்து சூரியன் சேராமலிருக்க ஜனன லக்கினத்தில் லக்கினாதிபதி குருவும் சேர்ந்திருந்தால் மகா சமர்த்தால் ராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று- 8

நாலுகேந்திரத்தாராட்சி நல்லுச் சமாகி நிற்கக்
லோலெதிர் நமத்தார் கூடிக் கொடும்பகையாருமின்றி
மேலுகந்திடவே சோமன் கேருவினின்றானாகில்
ஆலுகந்தமர்த்தமாதே யரசரளுமிராஜயோகம்

(இ-ள்) லக்கினாதிபதி, நான்கு கேந்திரஸ்தானாதிபதிகளும் ஆக்ஷி உச்சமாயிருக்க கிரகங்கள் ஒருவர்கொருவர் பார்வை பெற்று பகையாயிருந்தாலும் வளர்பிறைச் சந்திரன் லக்கினத்திலிருந்தால் ஜாதகன் அறிவிற் சிறந்து கீர்த்திவந்தனாய் ராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 9

பத்துடன் பத்துவீட்டிற் பதினைந்து பேறுயற்க
ஒத்துட நான்கு பேறும் மூடுப்பதி சேர்ந்து நிற்க
எத்துடன் சிங்கம் போலபிறுப்பவனேயரசேயாண்டு
வித்துடன் கமலமாதே விளப்பிடாயுலகுள்ளோர்க்கே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்] லக்கினத்திலிருந்து பத்தாம் ஸ்தானம் வரையிலும் ஐந்து கிரகங்கள் தனித்தனியாயிருக்க மற்ற நான்கு கிரகங்களும் லக்கினத்திலேயே சேர்ந்திருக்கும் போது பிறந்த சாதகன் மகா சமர்த்தனாம் வீரசிங்கத்தைப் போல தாரணியோரை தன் வசப்படுத்தியாளும் ராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 10

**ஏழுடனேழுவிட்டானிருந்தைந்து பேறுநிற்க**
**தாழ்வுடனிறுந்த பேறுத் தனியாய்க் கூடி லாபம்**
**வாழ்வுடதிருடுதாராகில் வருமந்தராசயோகம்**
**விழிடரதரசேயாண்டு மேதினியிருப்பன் மாதே**

(இ-ள்) ஏழாமிடத்தானும் அவருக்கேழாமிடத்தானும் ஐந்தாமிடத்தாலும் சேர்ந்திருந்து பகை நீசமானாலும் சாதாரண யோகமாயிருப்பார்கள், நட்பு ஆச உச்சமாயிருந்தால் மேலான ராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று 11

**வாகத்திற்பதியு மூன்று பேருமாம் கூடி நிற்க**
**நாகந்திற்சேர்ந்து நான்கு பேருமாயுதையஞ்சேர**
**யோகத்திற்றாழ்வில்லாம லொளிகண்டதூரமெல்லாம்**
**போகத்திற்சமர்த்தனாகிப்பொருந்தியேயரயோன் வன்**

(இ-ள்] லக்கினாதிபதியுடன் மூன்று கிரகங்கள் சேர்ந்திருக்கராகுடனே நான்கு கிரகங்கள் சேர்ந்து இரண்டாமிடத்திலிருந்தால் இந்த சாதகனுக்கு யோகபாக்கியத்திற்கு யாதொரு குறைவில்லாமல் தனது மனதிற்கெட்டிய தூரமெல்லாம் சுகபோகபாங்கியத்தில் குறைவில்லாமலிருக்க ஜீவியாய் ராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 12

**நாகமன்னிடத்தார் சேர்ந்து நற்பதிலாபஞ்சேரக்**
**காக மன்னிரவிசேய்க்குக் கனத்த விராறினிற்க**
**வாகமன்னிடத்தான் சோமன் வந்தாள தனிநிற்க**
**யோகமன்சோமன்விட்டானுதையத்திலிருக்கில்ராசன்**

[இ-ள்] வாக்குஸ்தானாதிபதிகள் லக்கினாதினுடன் சேர்ந்து லாபஸ்தானத்திலிருக்க,சனியானவர் சூரியன் செவ்வாய்க்குபனிரெண்டாமிடத்திலிருக்க சந்திரனின்ற ராசிநாதன் சந்திரன் வீட்டிலிருந்தாலும்ராஜயோகத்தையனுபவிபதற்காகும் எறு 13

**அஞ்சுடனஞ்சிவிட்டி லதிபதி நான்கு பேரும்**
**கொஞ்சியகூடி நிற்கக் கோலமாய் மற்றோர் லாபம்**
**மிஞ்சியேயிருந்தாராகில் மிருகத்தின் மெடைமீதில்**
**வஞ்சியெயரசனாகி வையகமெங்கும்காப்பான்**

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சந்திரனிருந்த ராசிநாதன் சப்தமஸ்தானத்தி லிருக்க கேது நான்காமிடத்திலிருக்க, குரு நாங்பாய் லக்கினத்தி லிருக்கும் போது பிறந்த ஜாதகன் உலகத்தை அரசுபுரியும் ராஜயோகத்தை யனுபவிப்பதற்கும்.

சந்திர லக்கினாதி சரசமாயுச்சமாகி
வந்தெதிரேழில்ன்று வளர்பாம்பு நாலாய் நிற்க
தந்திரராஜனட்பாய்த் தனியதனுதைய நின்றாற்
கெந்தலர் குழலினாளே குவலயமெங்குமாள்வன்

(இ-ள்) சந்திரனிருந் ராசிநாதனும் லக்கினத்திலிருந்த லக்னாதிபனும், சந்திரனும் சேர்த்து பத்தாமிடத்திலிருக்க, அந்த ஸ்தானத்திற்கு குரு ஏழாமிடத்திலிருந்தால், ஜாதகன் உலகத்தை அரசு புரியும் ராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று 16

மதியிருந்துறும் விட்டானு மகுழ்துடனுயஞ் சேரப்
பதியவன் மதியுங்கூடிப் பத்தினினிற்கத்தானும்
அதிபதியரசனேழி லமர்ந்துடனுருந்தாராகிற்
பதிவிதமாதே கேளால் பாரளுமிராஜயோகம்

(இ-ள்) குருபகவான் ஆக்ஷி உச்சமாயிருக்க வளர்பிறைச் சந்திரன் சுக்கிரன், புதனுடன் சேர்ந்து ராகுடனே கூடினாலும் லக்கினாதிபதியும் ராசிநாதனும் நட்பாயிருப்பார்களானால் இந்த ஜாதகனுக்கு ராஜயோகம் தளர்ந்துக்கொண்டே இருக்கும் எ-று 17

அரசனார் பலத்து வம்புலி பெருமையாகிச்
சரசமாய்ச் சுங்கன் புந்தி சலிப்பிலாவரவங்கூட
அரசமாயிலக்கினாதி யாதிசென்மாதி நட்பாய்
உரத்திர் நின்றாராகி லோங்கிடுமிராஜயோகம்

(இ-ள்) குருபகவானும் புதனும், சுக்கிரனுமிருந்த வீட்டோ ராகு பார்வைபெற்று லக்கினாதிபதியுடனே சேர்ந்து ராசி நாதனும் நட்பு உச்சமாயிருந்தால் ஜாதகன் ராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 18

சுதந்திரவியாழம்புந்தி சுக்கிரதினிருக்கில் விட்டார்
வந்தெதிரரவத்தோடே வருமிலக்னாதிகூடங்
சந்திர விலக்கினாதி சதிரமாய் நின்றாராகில்
உந்தரசாளுமியோக முண்டென்று சொல்வாய்மாதே

(இ-ள்) லக்கினாதிபதிக்கு பகையாகிய கிரகங்கள் ஆக்ஷி நட்புஸ்தானத்திலிருக்க வளர்பிறைச் சந்திரனும்ராகுகேதுக்கள்


CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

கேந்திரஸ் தானத்தில் நட்பாயிருக்க, குரு, அவர்களுக்கேழி லிருந்து பார்வை செலுத்த சுக்கிரன் சந்திரனுக்கெதிரிலிருந்து பார்வை செலுத்தினால் சுபக்கிரகங்கள் வலம்புறமாக இருக்கும் எ-று.

பகையோராட்சி நட்பாகப் பருமதிறரவஞ்திராக்
மிகையோர்குரு புதற்கேழாக மீன் வெள்ளிமதிக்கே
யெதிராகப்
புகையோரிவர்க்கிங்கிடமாகப்புண்ணியரிதற்குவலமக
இதையோரிப்படி நலமாக விருந்தால் வருமேயரசாள

(இ-ள்) லக்கினாதிபதி சன்மராசி நாதனுடனே சேர்ந்தாலும் பார்த்தாலும் சந்திரனுக்கு முன்னாலும், பின்புறமும் சுபக்கிரகங்களிருந்தாலும் பனியை விலக்கி பிரகாசிக்கச் செய்யும் சூரியனைப் போல வறுமையையகற்றி பெருமையடையச் செய்யும் ராசயோகத்தை அனுபவிப்மதற்காகும். எ:று

செனித்தலக்கினாதி நல்ல சென்மாதி கூடபார்க்கப்
பனித்திடுமதிக்கு முன்பின் பாதியினின்றாராகிற்
பனிக்கெடுமிரவிபோலப் பாராளயோகமுண்டு
இனிப்பொருள் சகலயோக மேந்திழைமாதேயுண்டு

(இ-ள்) சனன லக்கினத்தில் சுபக்கிரகமொருவனிக்கத் மூன்றாமிடத்தில் ஒரு கிரகமிருக்க, தன்புறமாகிய தனஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் கூடியிருக்க பிறந்த சாதகன் உதகத்தை யாளும் சிங்கத்தைப்போல பல்லக்கின் மீதேறி பவனி வரும் ராசயோகத்தையனுபவிப்பார் எ-று 21

உதித்திடப்பின்னே நாலு கிரகமுங்காலவா நிற்கச்
உதித்திடப்பின்னே நாலு கிரகமுங்கலவா நிற்கச்
செனித்தவற்றுடனே சிங்கஞ்செகமெலாமாளும்யோக
விதித்திடமுண்டு பாக்கியம்வேண்டியசிவிகையேறும்

(இ-ள்) சுபக்கிரகங்கள் இருக்கும்படியான ஸ்தானத்திற்கு இடபுறமும் வலபுறமும் கிரகங்கள் பார்வை செலுத்தாமல் முன் பின்னுமாய் சூழ்ந்து நின்றால் இந்திர விமானம் போல சிவிகையோகமேற்படுமென்று சொல்லுவாயாக மலர்சூடுங் கூந்தலையுடையபெண்ணே எ:று.

சந்திரரிடுப்யிடற்துக்சூழ்கின்றோர்முன்னால்பின்னல்
வந்திவரெதிரிலொமல வலமிடஞ்சூழ்ந்து நின்றால்
இந்திரவிமானம்போலவிருக்குமே சிவிகையோகம்
கொந்தலர்குழனானே குறியிதுதப்பா மாதே

(இ-ள்) சந்திரனுக்கு முன்பின்னாகிய ஏழு ஸ்தானங்களிலும் வேறு எந்த கிரகமுமில்லாமல் தர்ம கர்மாதிபதிகளிருந்தாலும்,

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

ஆறாவது ஸ்தானத்தில் சனி ராகு கிரகங்கள் வலுத்து நட்பு, ஆக்ஷி, உச்சமாயிருந்தாலும் ராசயோகமுண்டு எ-று. 23

விதியுமேயாகிலாட்சி வேண்டியசிவிகையுண்டு
குதிகொளும்பரிமாவேறங் கொடிமன்னர்புடைய சூழ்வர்

(இ-ள்) சந்திரன் ஆக்ஷி பெற்றிருக்க லக்கினத்திற்கு நான் காவது ஸ்தானத்தில் சுக்கிரனும் ராகுமிருந்தால் லக்கினத்தில் குருவுமிருக்க அவருக்கு நான்காமிடத்தில் லக்கினாதிபதி ஆக்ஷி யாயிருக்க அந்த ஜாதனுக்கு அநேகவிதமான பல்லக்கு ஆனை சேனை குதிரையுடன்கொடிகுடையுடைய அரசர்கள்சூழ்ந்திருக் கும்படியான ராஜயோகமுண்டாவதற்கு எ-று. 117

உதையாதிபதியுமட்கி பொருமையாய் நாலைந்தேனும்
சிதையாமற்றனலாபத்திற் சேர்ந்துதயாதிகூட
இதமாகப்பத்தோனாட்சி யிருந்திடக்கூட்டமாக
மிதமிலாச்சிவிசைவரசன் முன்னிற்கச் செங்கோலான்

(இ-ள்) லக்கினாதிபதி ஆக்ஷியாயிருக்கும் நாலுக்குடையோ னும் ஐந்துக்குடையேனும், தனலாபஸ்தானத்தில்லக்கினாதிபதி

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

யுடனே சேர்ந்திருந்தாலும், பத்தாமிடத்ததிபதி அசுசியாயிருந்
தால் அந்த ஜாதகன் அநேகபல்லக்குடைய ராஜயோகத்தை
யனுபவிப்பதற்காகும் எ-று 118

குறியுண்டவிடத்திற்புந்தி கூடவேசுங்கனாரும்
அறிவுண்ட சோமன்மந்திரி யவருமேலாபமாகிற்
பறிவுண்டவிடத்தான் பாம்பும் பத்தினின் மதிவீட்ட்னும்
செறிவுண்டு நின்றாராகிற் செகமெலாமாள்வன் மாதே

(இ-ள்) லக்கினாதிபதியிருக்கும் ஸ்தானத்தில் புதனுடனே சுக்கிரனும் குரு சந்திரனும் சேர்ந்து லாபஸ்தானத்திலிருக்க லக்கினாதிபதியும் ராகும் சந்திரனும பத்தாமிடத்திலிருந்தாரானால் உலகெலாம் பிரசித்தமடைந்த ராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று. 119

அரவுநின்றிடத்துக்கைந் திலமர்ந்திடமந்தனாரும்
உரமதாயரவவீட்டானெரளிம திசுங்கனாக்கும்
பரவுறுமவேதனார்க்கும் பத்வனி நின்றால்யோகம்
துரகயபதர்திசேனை திரளனியுண்டாய்வாழ்வன்

(இ-ள்) ராகு நின்ற ஸ்தானத்திற் கைந்தாமிடத்தில்சனியும் ராகு இருந்த ஸ்தானாதிபதியும்வளர்பிறைச் சந்திரனும், சுக்கிரனும்பத்தாமிடத்திலிருந்தால், ஆனைசேனை குதிரைகள் நிறைந்த பிரபுத்தன்மையான ராசயோகத்தை யனுபவிப்பதற்காகும் எறு. 120

அரவமுமுயையோர்கூட வலது கேந்திரமாய் நிற்கப்
புரமதாயிருந்த விட்டார் கேந்திரமாகிலன்றி
அரசனுமதியுதித் தோரகிலுங்கேந்திர மாகிற
பரமதாயச் சொல்வாய்மாதே பாக்கியயோகமென்றே.

(இ ள்) ராகும் குருவும் சேர்ந்து கேந்திரஸ்தானத்திலிருக்க அவர்களிருந்த ஸ்தானாதிபதிகள் கேந்திரஸ்தானத்திலிருந்தாலும்குருவும்ராசிநாதனும் கேந்திரஸ்தானத்திலிருந்தால்அந்த ஜாதகன் பாக்கிய யோகத்தே அனுபவிப்பதற்காகும் எறு 121

மறையோர் கேந்திரகோணத்தார்கதியினிடத்தானுதிக்
தோனும்
குறையொன்றில்லாச்சுகப்படினுங்கொடுக்கும் யோகம்
பாம்பாகும்
அறையுற்றிருக்கும் பாபினுக்கு வவர்க்கேந்திரங்
கோணாமல்
இறையோத்திருக்குமாயோகம் பெலக்குஞ்சிவிகை
மாவுடனே

(இ-ள்) குருவுடன் ராகு சகிதம் பெறஅல்லது 1,7, 10எனும் கேந்திரங்களிருக்க அவர்களுக்கிருபுறமிருந்தகிரகங்கள்கேந்திரம்

CC-0T Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

பெற்றிருப்பாரேனும் அல்லது, குரு ஜெனன லக்கினாதிபதி இவர்கள கேந்திரம் பெற்றிருந்தாலும் அந்த ஜாதகனுக்கு நல்ல பாக்கியயோக்கிய சிலாக்கிய முதலியவைகளுண்டாகுமென்று அழகு பொருந்திய பெண்ணே நிச்சயமாய் சொல்லாயாக எ-று. 122

முடவனார் சீராரெட்டில் மூனிபிறை புதனிருக்க
விடையிருந்தல்விடத்துக் கதிர்சுன் சேயாரெட்டாகிற்
குடையுடன் செங்கோலுண்டு கொந்தளக்கரிமாநேகம்
புடைகண்டு சூழ்வரென்று புண்ணிய வியாழஞ்

(இ-ள்) சனிக்கு பனிரெண்டாமிடம் எட்டாமிடமாகிய ஸ்தானத்திற்கு சந்திரனும் புதனுமிருக்க அவரிந்த ஸ்தானத்திற்கு அஷ்டமத்தானத்தில் சூரியனும், சனியும் செவ்வாயுமிருந்தால் அந்த ஜாதகன் தொடியுடன் கரத்திற் செங்கோலேந்தி ஆனை சேனை குதிரைகளும் சூழ்ந்திருக்கும்படியான இராஜயோகத்தை யனுபவிப்பாரென வியாழ பகவான் சொன்னார் எ-று 123

உறைத்தது வியாழங்கொஞ்ச சந்திட்டமும் நேசமுண்டு
திருத்திழிலறிய வேண்டிச் சுகதமலாமுறைக்கு நீதி
உரைத்திடவல்லோர்க்கெல்லா முவப்பொருளல்ல மந்திரி
விரைத்ததுவினையுந்தப்பா திருக்குமேயோகதிட்டம்

(இ-ள்) வியாழபகவான் சுருக்கமாய் உரைத்தாலும் பலன் விசேஷமாயிருக்கும் இதை கவனிக்கவேண்டுமானால் உலகிலுள்ளோருறைக்கும் நீதியிலும் குரு சொன்ன வாக்கியமே விசேஷமாய் நடப்பது தவராதராஜயோகமாயிருக்குமெறு 124

மகமேருகிரியில்வாழு மலரவன்பதிக்குரைத்த
யுககலியதிலுதித்த வுபமதுதெறியா தாக்கும்
மிகயோக சுகபோகங்கள் மேதினியுள்ள போக்குச்
சுகமாகத்திதுங்காணச் சொன்ன சொற்கேளாய்மாதே

(இ-ள்) இமயமலையில் வசிக்கும் தர்மதேவனுக்குசொன்ன விதமே கலியுகத்தில் பிறந்தவர்களுக்கும் விபரந்தெரியாதவர்களுக்கும் சுகபோகங்களும் உலகத்திலுள்ளவர்களுக்கு சுகமாக தெரிவித்தோம் செண்ணே எ-று 125

அந்தொரு மொழியைக்கொண்டு வகஸ்தியர்தமிழாற் செய்து
விந்தியபருவதத்து மேலிடங்கீழ் தெற்கோர்க்கு
எந்தொருவருமேகாண வியம்பிய வசனப் பற்றி
இந்தொருகுறியைச் சொல்ல விடையூறுவருவதில்லை

(இ-ள்) அந்த வாக்கியங்களை அகஸ்திய முனிவர் தமிழில் செய்து விந்தியமலை பர்வதத்தின் மேற்கு கிழக்கு மேற்குதேசத்

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தினரும் கவனிப்பதற்காக சொன்ன வாக்கியத்தைப் பற்றி இதனை வெளிப்படையாகச் சொன்னோர் இதற்கு யாதொரு இடையூரும் வருவதில்லையென்று எ-று 126

செனித்ததுகிரககூட்டஞ் சேர்ந்ததே முகலாய்க்
அனைத்தவர்விரையமட்டி லவராவரிருப்பதரிந்து
இனித்திருந்தவரைக் கன்டு விடர்குறிசுகமுஞ்சொல்ல
இனிச்சுகஞ்கங்கனாரு மியப்பியசனந்தப்பா

(இ-ள்) ஜெனன காலத்தில் கிரக கூட்டஞ் சேர்ந்திருப்பதையே முதலாக கவனித்து லக்கினததிலிருந்து விரயஸ்தானம் வரையில் அந்தந்த கிரகமிருப்பதை கவனித்து இந்த கிரகங்களிருப்பதை கவனித்து சொல்லும் போது சுக்கிரபகவான் சொன்ன விதமாகவே நடக்கும் மேற்சொன்ன வாக்கிய தப்பாது எ-று 127

சந்திரனிருந்தவிட்டான் சுபமதரயரவஞ்சேர
மந்திரியுதயோனந்த மனைவயன் கூடி நிற்க
இந்திருமோர்க்குங்கோண கேந்திரமாய்லாபமாக்கச்
சந்திரனுதைமாகிற் சத்தியமரசேயாளவன்

(இ-ள்) லக்கினாதிபதிக்கு நான்கு கோந்திரத்திலும்கிரகங்களிருக்க மற்ற கிரகங்கள் ஆக்ஷீ உச்ச நட்பாக இருந்தால் சாதகனுக்கு ராசயோகமாகும்படியான தனதான்ய சம்பத்துடனே உலகிருப்பவர்கட்கெல்லாம் மேன்மை பொருந்தியவனாயிருப்பதற்காகும் எ-று 128

அரசனோரவனிற்க வதற்க்கினியோனுஞ்சுங்கன்
சரசமாய்ப்பத்தினி நிற்கச் சனிமேயைபதாறப்கிற்
சிரசின் மேற்கிரிடனாகச் செகமிளதாதிவல்லன்
நரகெஜனம்கரகொடி நடக்கு மேசிவிகையோகம்

(இ-ள்) சந்திரனிருந்த ராசிக்கு ஏழாமிடத்தில் நான்கு கிரகங்களுமிருக்க மற்றவர்கள் ஒரு பக்கம் சேர்ந்திருந்தால் அந்தக் சாதகனுக்கு குறையில்லாத ராசயோகத்தைவிசேஷமாக கொடுப்பார்கள் பெண்ணே எ-று

செனித்தவன் சுங்கன்கூடிச் சேரந்துணின்ரிடத்திற்பத்தில்
இனிக்குருசோமன் வீட்டானிருவருங்கூடி நிற்கத்
தனித்தரவத்துநாலிற் றணியனாய்ச்சோமணிற்கில்
மணிக்கெஜசிவிகையோடு மன்னவர்சூழ்வார் கோடி

(இ-ள்) சந்தினிருந்தராசி நாதனிருந்தஸ்தானத்திற்குஏழாமிடத்தில் இருக்க அதற்கு நாலில் ராகு நிற்க அதன் பக்கத்தில எந்த கிரகமிருந்தாலும் அந்த சாதகனுக்கு ராசயோகமாயிருக்கும் எ-று

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

குறுத்தவனரசன் கூடக் குருமதியிடத்தான் சுங்கன்
மருத்து மீரைந்தி நிற்ச மூளையனுதையமாகச்
செனித்தவனரசன் வீட்டான் சேர்ந்தவரவற்று நாலில்
எதிர்த்தவர் நின்றாகி ஈரேமு புவனமாள்வான்

(இ-ள்) லக்கினத்திற்கு சந்திரனின் ஸ்தானத்திற்கு ஏழாமிடத்திலிருந்தாலும் இரண்டு பக்கத்திலும் கிரகங்களிருக்கப் பிறந்த ஜாதகனுக்கு பாதாள யோகமுண்டாகும் அன்றியும் மேற்குறிப்பிட்ட கிரகங்களை எந்த கிரகங்களும் பாராமலிருந்தால் உலகாதிபனாகிய ராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று 131

பரிக்கிடஞ்சுங்க நிற்கப் பதியவன் மனையும் விட்டான்
இனித்துயர் குருவுங்கூட விவர்பத்தினின்றாராகிற்
குறித்துயர் சதிரஞ்சோம னொருவர்கூடாமனின்றாற்
செனித்த நாலாகத்நேச முழுதுமோர்குடைக்கிழாள்வான்

(இ-ள்) சந்திரனும் குருவும் ஆக்ஷி உச்சமாயிருக்க அவருக்கு ஏழாமிடத்தில் இரண்டு பக்கத்திலும் மற்ற கிரகதிகளிலிருந்தால் எங்குமில்லாத யோகபாக்கியம் ஜாதகனுக்குக் கொடுப்பார் பெண்ணே சகலதேசத்தையும் ஆளுமதன்மையான சமர்த்தனாயிருப்பதற்காகும் எ-று 132

மதியாட்சியாகி நிற்க மனைக்கு நாள் சுங்கன் பாம்பும்
பதியுதித்தனின் மந்திரி பதியறனவர்க்கே நாலாய்
விதியுமேயாகிலாட்சி வேண்டிய சிவிகைழண்டு
குதிகொளும் பரிமாவேறுங் கொடிமன்னர் புடையே சூழ்வர்

(இ-ள்) ராகுடனே ஒரு கிரகம் சேர்ந்திருக்க அவர்களுக்கு யிரண்டு பக்கத்திலும் மற்ற கிரகங்களிருந்தால் மகா சமர்தாக சகல தேசத்திலும் சமர்னென புகழ்ந்துரைக்கும் ராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 133

உதையாதிபதியுமாட்சி யொருமையாய் நாலைந்தேனும்
சிதையாமற்றனலாபத்திற் சேர்ந்துதயாதிகூட
இதமாகப் பத்தோனாட்சி யிர்ந்திட கூட்டமாக
மிதிமிலாச்சி விகைவாசன் முன்னிற்கச் செங்கோலாள்வன்

(இ-ள்) குரு இருக்கும் ஸ்தரனத்திற்கு ஏழாமிடத்திலும் புதனும் நிற்க மற்ற கிரசங்கள் யிருபுரமுமிருக்க, அந்த ஜாதகன் சகலரும் உத்தமனாயிர்ந்து சகல தேசத்தரசரும் புகழும்படியான ராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று 134

குறியுண்குவிடத்திற்புத்தி கூடவேசிங்கனாறும்
அறிவுண்டசோமன் மந்தி யவருமேலாபமாகிற்
பறியுண்டவிடத்தான் பாம்பும் பத்தினின் மதிவீட்டனும்
செறிவுண்டு நின்றாராகிற் செகமெலாமாள்வான் மாதே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சுக்கிரனிருந்த ஸ்தானாதிபதி புதனுக்கேழா மிடத்திலிருக்க மற்ற கிரகங்கள் இருபுறமுமிருப்பாராகில் ஆனைசேனை பரிவாரங்களுடனே சக்ரேஸ்வரனாக ராசயோ யோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று

அரவுநின்றிடத்துக்கைந்தி லமர்திடமந்தனாரும்
உரமதாயரவவிட்டா னொளிமதசுங்கனார்க்கும்
பரவுறும்வேதனாற்கும் பத்தினி நின்றால் யோகப்
துரகயபதாதிசேனை திரளணியுண்டாய் வாழ்வான்

(இ-ள்) குருவுடனே ராகு சேர்ந்திருக்கும் சதானத்திற்கு நான்கு ஏழு எட்டாமிடங்களில் இரண்டாதுடத்ததிபதி உச்சமாயிருந்தால் அந்த சாதகனுக்கு ஆனை குதிரை சேனைகளுடனே அரசாளும் ராசயோகமுண்டாகும் பெண்ணே எ-று

அரவமுமுறையோர்கூட வலது கேந்திரமாய் நிற்கப்
புரமாதாயிறுந்தவீட்டார் கேந்திரமாகிலன்றி
அரசனுமதியுதித்தோ ராகிலுங்கேந்திமாகிற்றீ
பரமதாய்ச் சொல்வாய்மாதே பாக்கியயோகமென்றே

(இ-ள்) சந்திரனின்ற சானத்திற்கு நான்கு ஏழு எட்டாமிடத்தில் மற்ற கிரகங்களிருந்தால் அந்த சாதகனுத்கு யோகமுண்டு தனதான் சம்பத்துப் ஆனை குதிரை முதலான பிரபுத்தன்மையான யோகமுண்டு புவனுக்கும் இவ்விதமாயிருந்தால் ராஜயோக முண்டு எ-று 137

மனறபோர்க்கேந்திர கோணத்தார் மதியிணிடத்தானு
தித்தோனும்
குறையொன்டுயலாச்கப்பனுங்கொடுக்கும் யோகம்
பாம்பாகும்
அறையுற்றிறுக்கும் பாம்பினுக்கு வளர்க்கேந்திரகே
பணாமாகில்
இறையோற்திருக்குமாயோகம் தபலக்குஞ்சிவிகை
மாவுடனே

(இ-ள்) லக்கினாதிபதி நாலு ஏழு எட்டாமிடத்தில் சேர்ந்திருந்தால் அந்த சாதகனுக்கு தனதான்ய சம்பத்துடன் ராசயோகத்தை யனுபவிட்பானென்று சொன்ன நீதிவாக்கியம் தவறாதென்றுணர்வீர் எ-று

முடவனாக்கீராறெட்டில் முணியிறைபுதணிருக்க
விடையிருந்தவிடப்துச் கதிர்சுனசேயாறெட்டாகிற்
குடையுடன் செங்கோலுண்டு கொத்தளக்கரிமாநேகம்
புடைகண் சூழ்வரென்று புண்ணியவியாழஞ்சென்னார்

(இ-ள்) ராகுவிருந்தஸ்தானத்திற்குஐந்தாமிடத்தில்கிரகங்கள் சேர்ந்திருதால் அந்த சாதகன் மகாசமர்த்துடன் அரசுபுரியும் சர்மாந்திற்கிணங்கராசயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

உரைத்தது வியாழங்கொஞ்சந் திட்டமும் நேசமுணடு
திரத்திருலறியவேண்டிச் செகமெலா முறைக்குநீதி
உரைத்திடவல் லோர்க்கெல்லா முவப்பொருளல்ல மந்திரி
விரைத்ததுவிளையுந்தப்பா திருக்குமேயோக திட்டம்

(இ-ள்) நான்கு கிரகங்கள் சுபகிரகங்களுடன் சேர்ந்திருக்க மற்ற கிரகங்கள் இவர்கட்கு நான்காமிடத்திலிருந்தால் அருமையான கடல் சூழ்ந்த உலகத்தை ஆளும் படியான பிரபுத்தன்மை பொருந்த ராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று 140

மகமேருகிரியில்வாழு மலரவன் பதிக்குரைத்த
யுககலியதிலுதித்த வுபமதுதெரியாதார்க்கும்
மிகயோகசுகபோகங்கள் மேதினியுள்ள பேர்க்குச்
சுகமாகத்தீதுங்காணச் சொன்னசொற்கேளாய்மாதே.

(இ-ள்) ஒரு ஸ்தானத்தில் மூன்று கிரகங்களும் நான்காமிடத்தில் இரண்டாமிடத்திபதியுமிருக்கஅவருக்குநான்காமிடத்தில் சுபகிரகங்கள் மூன்று பேரிருந்தால் சகல தேசத்தினரும் புகழுந்தன்மையான போக தேவேந்திரனைப் போல ராஜயோகத்தை யனுபவிக்கும்படியாயிருக்கும் பெண்ணே எ-று 141

அந்தொகிமொழியைக்கொண்டு வகஸ்தியர் தமிழாற்
விந்தியபகிவதத்து மேலிடங்கீழ் தெற்கோர்க்கு (செய்து
எந்தொருவருமேகாண வியம்பினவசம் பற்றி
இந்தொருகுறியைச் சொல்ல விடையூறுவருதில்லை

(இ-ள்) ஒவ்வொரு கிரகமாய் நான்கு நான்கான கேந்திரங்களிருந்தால் சீரான பதவி பெற்று செல்வம் பொருந்தியவனாய் ஜெகசக்ரவர்த்தியாயிருக்கும் யோகசாலியாயிருப்பதற்காகும் இரண்டிரண்டு கிரகங்கள் மேற்சொன்ன ஸ்தானங்களிலிருந்தால் உதமந்தார் புகழும் படியான செல்வமும் பாக்கிய சம்பத்தும் பொருந்திய ராஜயோகமாயிருக்கும் எ-று 142

செனித்ததுகிரககூட் டஞ் சேர்ந்ததே முதலாய்க்கொண்டு
அணைத்திவர் விரையமட்டி லவரவரிருப்பறிந்து
இனித்திருந்தவரைக்கண்டு விடர்குறி சுகமுஞ்சொல்ல

(இ-ள்) ஜனன லக்கினத்தில் ஆறுகிரகங்கள் கூடியிருக்க மற்ற கிரகங்கள் அதற்கு மேலிருந்தால் குறைவில்லா சூரியன் பிரகாசிக்கும் தேசமெல்லாம் அரசாளும் படியான செல்வமும் பொருந்தியவனாயிருப்பதற்காகும் எ-று 146



CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

உதயாதியதர்க்குமேருக் கொருபக்கநான்குபேரும்
சிதையாமல் மற்றோர் நான்கு பேருமோர்பக்கமாக
இதமாக விருந்தாராகிலிவனுக்கே ராஜயோகம்
மிதமிலாதிருப்பன் மேலாய் மேதினியுள்ளோர்கெல்லாம்

(இ-ள்) குருவிருந்த ஸ்தானத்திற்கு வலபுறமாக சுக்கிரன் சந்திரனிருந்த ஸ்தானாதிபதியரும் லக்கினாதிபதியும் சேர்ந்து இரண்டு பக்கதிலுமிருந்தால் தனதான்ய சம்பத்துடன் முரசு முழங்கும் ராஜயோகத்தையனுபவிப்பதற்காகும் எ-று 144

பிறைநின் றவிடத்துக்கேழுக் கொருபக்கநாலுபேரும்
நிறையன்றிநாலுபேர்மற் றொருபக்க நின்றாராகிற்
குறைவின் றிராஜயோகங் கொடுப்பரே மிதமில்லாமல்
அறையில்லை நிஜமேயுண்டா மம்புலிக்கனையமாதே

(இ-ள்) பஞ்சமஸ்தானாதிபதிக்கும் குருவுக்கும் மேற்குறிப்பித்த அடைவாயிருந்தால் விசேஷமான ராஜயோகமும் மிதமில்லாத சிவிகையும் உண்டாகும் பஞ்சமஸ்தானாதிபதிக்கு குரு ஏழிலிருந்து இவ்விதம் பொருந்தியிருந்தால் விஷமுண்ட கண்டனைப்போல் வையகமெலாம் ஆளும் ராஜயோகமாயிருக்கும் எ-று. 145

சந்திரனிருந்தவீட்டா னிருந்தவரதற்கேழ்மந்திரி
வந்தொருநாலிற்பம்பு வலமிடமற்றோர்நிற்க
இந்திரப்பதிபோல்வாழ்வ னிவனுக்கேராஜயோகம்
கொந்தலர் குழிலினாளே குவலலயமெங்குமாள்வன்.

(இ-ள்) அஞ்சாமிடத்தானுக்கு குரு நான்காமிடத்திலிருந்து மேற்குறிப்பித்த விதமாயிருந்தால் அந்த ஜாதகனுக்கு மிதமில்லாத ராஜயோகத்தை தரும் மூன்று, இரண்டு, ஐந்தாமிடத்திலுமிருந்தால் செழுமை தங்கி ஜடையையுடைய சிவபெருமானைப்போல ஜெகமெலாம் அரசு புரியும் ராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று 146

உதித்தவனிரும்பிடத்துக் கோர்மதியிடத்தனேழாய்க்
கதித்தவர் நின்றிடத்துக் கிருபக்கமற்றோராகப்
மதித்தவர்பாங்காய் நின்றால் யாராளயோகமுண்டு
மதித்தொருவரையும் பாராராயினுஞ் யெகமேயாள்வன்

(இ-ள்) ராகுடனே குரு சேர்ந்திருக்க அவர்கட்கு இந்த அடைவாயிருந்தால் விசேஷமான சுபபலனும், குறையில்லாத ராஜயோகத்தை யனுபவிப்பதுடன் ஆணை, சேனை குதிரை முதலான விசேஷத்தை தான்ய சம்பத்தும் பொருந்திய ராஜயோகமாயிருக்கும் எ-று 147

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சுங்கனாரா கின்மந்திரி யாகினுஞ்சுபமாய்நிற்க
அங்கவரிடத்துக்கேழுக் கிருபக்கமற்றோராகில்
எங்கனுமில்லையோக மிவனுக்கே கொடுப்பர்கண்டாய்
தெங்கரும்பனையமாதே செகமெலாமானவல்லன்

(இ-ள்) பஞ்மஸ்தானாதிபதி குரு, சந்திரன், ராசிநாதனுக்கும் மேலான ராகும் இந்த அலடவாகயிருந்தால் ஆனைசேனை பரிவாரங்களுடன் ராஜயோகமுண்டாகுமென்று சுக்கிரன் சொன்ன நீதி சரியாயிருக்கும் எ-று. 148

பாம்புடனொருவன்சேர விருபுந்மற்றோர் நிற்க
வீம்புனுலமெல்லாம் விண்ணதிராளும்யோகம்
சோம்பலில் கெஜங்கள் கோடி துரதகங்கோடி சூழும்
காம்பிளமூலையினாளே கண்டிடுமிதுதப்பாதே

(இ-ள்) குருவுக்கு இலக்தினாதிபதியும் சுக்கிரனும் சந்திரனுமிருந்த ஸ்தானாதிபதிகள் நான்குஇரண்டுமூம்மூன்று பேருமாய் கேந்திர கோணஸ்தானத்தில் சேர்ந்தும் பார்வை மெற்றுமிருந்தால்நாறதியைப்போலஆணை, சேனைகுதிரையுடன்நாடாளும் அரசனை போல ராஜயோகத்தை அனுபவிப்பதற்காகும் எ-று 149

அன்புள்ள வரசனிற்க வம்மனைக் கேழிற்புந்தி
நின்றிடமற்றோரெண்டு புறமதாய் நிற்கத்தானும்
பண்புளோனானாகிராஜர் பரிவுறவநேகங்கோடி
நன்றுளமன்னாகி நாடெலாமரசேயாள்வன்

(இ-ள்) பனிரெண்டாமிடத்தானுடனே ராகு சேர்ந்திருக்க மற்ற கிரகங்கலிருக்கும் அந்தஸ்தானத்திற்கு ஒவ்வொருவராய் இதன் கிரகங்கள் நின்றால் பலவித சமர்த்தில் செல்வமும்ஆனை சேனைகளும்பொருந்தியராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 150

சுக்கிரனிருந்தவீட்டான் சந்திரமகனுக்கேழில்
நிற்கவீகிவற்குமற்றோரிருபுரநின்றாராகில்
மெய்குறவாகிராஜ யோகமேயுளதாமேக
சக்கிரமாக வாழ்வன் சரசசங்கீதபோகி

(இ-ள்) எந்தஸ்தானமானாலும் அந்தஸ்தானத்தில் இரண்டிரண்டு பேராய் வரிசையாயிருந்தால் அந்த ஜாதகனுக்குபோகமாயிக்கும் இந்த அடைவாய் நின்ற கிரகங்கள் இவரிவருக்கு ஐந்துஇரண்டு, ஆறாமிடமாயிருந்தால் மகாலஷ்மிக்கொப்பான மாதே இந்த ஜாதகன் உலகப் பிரசித்திபெற்ற ராஜயோகம் யிருப்பதற்தாகும் எ-று. 151

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அரசனோடரவனிற்கவம் கணைநாலேமெட்டிற்
சரசமாயிரண்டுவீட்டிற் சரியதாய்நின்றாராகில்
பரிசையோடநேகங்கோடி பரியுடன் கரியுமுண்டு
அரசியல் மாதேகேளா யரசாளயோகமுண்டே

(இ-ள்) ஐந்து கிரகங்கள் ஒரே ஸ்தானத்தில் கூட்டாயிருந் ஸ்தானத்தில் பகையில்லாமல் ஐந்து ஆறாமிடத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு அமிதம்போல் நல்ல பலன் கொடுத்து தன வந்தனாருக்குப்படி செய்வார் எ-று 152

மனிதன்றவிடத்து நான்கே மெட்டினின் மற்றோர்நிற்க
விதப்போறதில்லையோகம் வேண்டிய சிவிகையுண்டு
சிதனுமந்தடைவானாகிற் செல்வமுங்கரிமா வுண்டு
புதனுகிப்படி யேயனாற் பொற்சிங்காதனந்தானுண்டே

(இ-ள்) ஐந்தாமிடத்தானும்நான்காமிடத்தானும்சேர்ந்தும் அவருக்கு பகையில்லா அந்தஸ்தானத்திலிருப்பார் ஐந்தாறாகி நின்றால் ஜாதகனுக்கு பகையில்லாமல் அமிர்த போலசுகபலன் கள் கொடுத்து ராஜயோகத்தைதருவார் பெண்ணே எ-று 153

இன்னம் ஒரு அடைவு

செனித்தவற்கேழ் நாலெட்டிற் சேர்ந்துமுன்னிடத்தினிற்க
தனித்தொரு நாளுநில்லான் றனக்கோடியமகோணத்தின்
தொனித்தனரசேயாள் வனேறோன்டுயமுகலாய் கொண்டு
முனித்தவர் சொன்னநீதி மொழிதப்பாதிருக்குமாதே

(இ-ள்) கேந்திர கோணத்தில்சுபகிரகங்களிருந்தால்வியாதி யனுகாமலிருக்குந் தன்மையான நன்மையும். கிரகதோஷமும் நேரிடாமல் ராகு உச்சம் பெற்றிருந்தால் உலகோர் புகழும் சமர்த்தனாய் ராஜயோகத்தை யனுவிப்பதற்காகும் எ-று. 154

பணைத்தொருவிடத்திலைந்து பேருமேகூடி நிற்க
இணைத்திருவில்லாமற்றோ ரெங்கணுமொருவராகில்
அணைத்தொருபரிதிசூழ்ந்த செகமெலாமாமாளும்யோகம்
கணக்கொரு பரிதிசூழ்ந்த செகமெலாமாளும்யோகம்

(இ-ள்) கிரகங்கள் கூட்டமால் கேந்திரகோணஸ்தானங் களிருந்தால் ஜாதகனுக்கு சதாகாலமும் குறையாத யோகமும் பொருந்திய கீர்த்தி மிகுந்த ராஜயோகத்தை யனுபவிப்பதா யிருக்கும் எ-று. 155

இருந்திடநாலுபேரு மினிபவர் கூடநிற்க
பொருந்திறமற்றபேர்களிவர்குநாலாகி நின்றால்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அருங்கடல் சூழுகின்ற வவனியேயாளவல்லன்
நெருங்கிடவநேகங்கோடி நிற்கவேயரசேயாள்வன்

(இ-ள்) ஐந்தாமிடத்தில் ஐந்து கிரகங்களாக குருவுக்கு லாபஸ்தானத்திலிருக்க குருவும் சூரியனுமிருந்தால் ராஜயோக மிண்டாகுமென்று சொல்வாய் பெண்ணே எ-று 156

ஒருவிடமூன்று பேருமொரு நான்கிலோரிரோரும்
இருந்திடவதற்குநாலி லினியவர் மூவர் நின்றாற்
பொருந்தியகுடைக் கீழாள்வன் போகதேவேந்திரனாகிக்
குருந்தடியிருந்தமாதே கொடுப்பதிப்படியாம் யோகம்

(இ-ள்) குருவும் சுக்கிரனும் சொன்னநீதி சந்தேகமில்லாம் ஜாதகர்களுக்கு ராசயோகத்தை யனுபவிப்பதற்காகும் இந்த விதமாய் பார்வை செலுத்திய கிரகங்களினால் புத்திவிசேஷித்து ராசயோகங்களையும் உண்டாகும் எ-று 157

ஒரொருகிரகமாகியொருநான்கி நின்றாராகிற்
சீர்பதம் பெற்று செல்வஞ் செகச்சக்கரவர்த்தியாவன்
ஈரிருகிரகமாக விந்தடைவாகி நின்றார்
பார்பெருஞ்செல்வமுண்டு மாக்கியராஜயோகம்

(இ-ள்) குருவும் சுக்கிரனுமிருந்த ராசிநாதரும் லக்கினாதிபதியும் ஒன்பதாமிடத்ததிபதியும் சதாகாலமும் சுகசவுக்கியோகமும் கொடுப்பார்கள் இவர்களல்லாத மற்ற கிரகங்களில் விகந்தரமாட்டார்கள் எ-று 158

ஆறுபேர்கூடி நிற்க வதற்கு மேன்மற்றோர் நிற்க
மீறுமட்டொன்றில்லாமல் வெயிலொளி தேசமெல்லாம்
பேருகொண்டுலக மெங்கும் பேருள்ளரசனாகி
நூறுமட்டுலகையண்டு நுண்யனாயிருப்பன்மாதே

(இ-ள்) சனி சூரியன் செவ்வாயும் சந்திரனுக்கு எட்டாமிடத்தான் இநத கிரகங்கள் ஜாதகனுக்கு பாக்கியங் கொடுக்க குறைன்பதாம் எ-று 159

அரசிடமாக நின்றவவ்விடம் வலத்தினல்ல
உரமுடன் சுங்கன் சோமனொளிமதி நின்றவிட்டான்
திரமுடனுதயத்தானுஞ் சேர்ந்திருபுறமாய் நின்தால்
முரசிடவநேகங்கோடி முன்னிற்கும் ராஜயோகம்

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சனி சூரியன் அங்காரகன் சந்திரநின்ற ராசிக்கு எட்டாம் ராசிக்குடையோன் ராகு கேது ஜெனனராசிக்கு எட்டாம் ராசிக்குடையோன் ஆகிய சஷ்டிக்கிரகங்களும் கொடியவராயாவர் அழகு பொருந்திய பெண்ணே அவர்கள் செய்யும் பலனென்னவெனில் ஜெனித்தவனை மரணமடையச் செய்யவும் பாக்கியத்தை விறயம் செய்யவுமே அதிகாரியாவார்களென்று கூறுவாயாக எ-று 160

அஞ்சனவனரசன்சேர வவர்ற்குமிந்தடைவேயாகில்
மிஞ்சிடும் ராசயோக மிதமலர்ச்சிவிகையுண்டு
பஞ்சவர்க்கரசனேழிற் பற்றியிந்தடைவேயானால்
நஞ்சுதின்றவரைப்போல் நாடெலாமாள்வன்மாதே

(இ-ள்) கூட்னமாயிருந்த கிரகங்கள் முன்பின்னாக சேர்ந்து ஒருவராய்த் தனித்திருப்பார்களானால் அந்த சாதகனுக்கு நாடு நகரத்திலும் விலகி சகலருக்கும் பகையாகி காண்பேரிகழுந்தன்மையாவான் எ-று 161

அஞ்சவற்கரசனாலா யவர்க்குமிந்தடைவேயாகில்
வஞ்சியேராஜயோகம் வருவது நிஜமாயுண்டு
விஞ்சியேமூவீரோரு மிகைத்தேழுமைந்தாய் நின்றாய்
சுகஞ்சடைச்சிவனேயாகிச் செகமெலாமரசேயாள்வன்

(இ-ள்) துவாதசலக்கினத்திற்குள்ளாக நான்கு கிரகங்கள் சேர்ந்திருந்து ஒருவருக்கொருவர் எதிரெதிராக இரண்டு கிரகங்களிருந்தால் பால்பாக்கியம் செல்வந்தன் தான்ய சம்பத்திருந்தாலும் பாக்கியம் சேராது எ-று 162

அரவுடனரசனிற்கவவர்க்கு மிந்தடைவேயாகில்
குறைவில்லாராஜயோகங் கொடுப்பரே மிதமில்லால்
திரளுடன் யானைக்கூட்டந் தேடருஞ்சிவிகையாவும்
அரசுடன் தேகங்கோடி யவனுக்கேயுண்டு மாதே

(இ-ள்) ஐந்தாமிடத்திலும், இரண்டாமிடத்திலும் பாபரிருக்க அவர் குருவுக்கு எட்டாமிடத்தில் சந்திரனிருக்க அந்த ஜாதகனுக்கு பலவித துன்பத்தால் யோகந்தவறிபோகும் எ-று 163

அஞ்சனவரசன்சோ னந்தனன்மதிவீட்டானும்
மிஞ்சிபேயாவம்வேறோன் மிகைத்துந்தடைவேயாகிற்
கொஞ்சியேராசயோகங் கொடுப்பிரிப்படியேகண்டாய்
வஞ்சியேயிந்தயோகம் வருமுயர்சுங்கனீதி

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) ஐந்தாமிடத்திற்கு நாளில் சனியும் குருவுக்கு ஏழில் செவ்வாயும் ராசிக்கு நாளில் சூரியனுமிருக்க சந்திரன் பகை நீசஸ்தானத்திலிருக்க ஐந்தாமிடத்தானுடனே சூரியனுமிருந்தால் அந்த சாதகனுடைய செல்வமெல்லாம் அக்கினியிலகப்பட்ட பஞ்சிபோல பஸ்பமாய்ப் பறந்து போகும் எ-று 164

அரசன்றானிலக்கினத்தா னல்வெள்ளிமதியும் வீட்டான்
முரசதிரிடத்தான்ரெண்டுமும்மூன்றுபேரு நல்லோர்
பரவிதானிருக்கிற்கேந்திர கோணமாய்க்கூடிம்பார்க்கி
நரபதியானைமாவு நாடாளயோகமுண்டே

(இ-ள்) சுக்கிரனும் சுபகிரகங்களும் சுற்றிலும் பகை கிரகங்களுமிருக்க ஐந்தாமிடத்திலிருந்த ஸ்தானத்திற்கு ஏழாமிடத்தில் சனியுமிருக்க குருவுக்கு ஏழில் சனி செவ்வாயிருக்க அந்த சாதகனுக்கு யோகமில்லாதிருப்பான் பொண்ணே எ-று 165

பனிரண்டுவிடத்தினல்லோ ரிடமதிற்பணைத்துகூடி
அனைவுண்டுமற்றோர்நிற்கு மம்மனைக்கொருவராக
இனிகண்டுகூடி ரெண்டு பேருமாய் நின்றாகிற்
குதிகொண்டசெல்வமுண்டு கொத்தனத்தானையுண்டே

(இ-ள்) ஐந்தாமிடத்திலிருந்தால் விருந்த விரயஸ்தானத்தில் குரு விருந்தால் லக்கினாதிபதியும் தனங்கேகியஸ்தானாதிபதிகள் பனிரெண்டிலிருந்தால் அந்த சாதகனுக்கு விசேஷ யோகமில்லை எ-று 166

எந்தவீடாகினாலு மிதமதிலிரண்டுபேராய்
அந்தமாய் நின்றாராகி வலனுக்கேயோகமுண்டு
இந்தடைவாகினின்றோ ரிவரிலற்கைந்தீராகிற்
செத்திருமாதேகேளாய் ஜெகத்துக்கேமன்னனாவன்

(இ-ள்) ஆறாமிடத்ததிபதியும் தேய்பிறை சந்திரன் ஆசிபெற்றிருந்து ஷெடி ஸ்தானத்திலிருக்க மற்ற கிரகங்கள் எட்டுக்கு எட்டாய் அவர்களைச் சேராமலிருக்கஉலகத்திரிடமும் துஷ்டன இருப்பதற்காகும் எ-று 167

கூட்டமரயைந்துபேருங் கூடியவ்விடத்தின்மற்றோர்
தேட்டாயெரருவராகத் திரண்டிரண்டாகிநிற்க
வாட்டமில்லாமல் மூன்றோனாகினும் வருமேயோகம்
சேட்டமாயுலகையாண்டு செங்கோலுக்கதிபனாவன்

(இ-ள்) ராகுஞ் சனியும் சேர்ந்தும், கிருவும் சூரியனும்கூடி சந்திரனும்செவ்வாயும்ஒருவருக்கொருவரெட்டாமிடத்திலிருக்க

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தேய்பிறை சந்திரனும் சேர்ந்து நின்றால் அந்த சாதகன் எவ்வளவு ஆஸ்தியுடையனனாயிருந்தாலும் எல்லாம் செலவாகி ஏழையாயிருப்பான் பெண்ணே எ-று

அஞ்சுநூால்பேருகூடவதற்குமேபகையுமில்லைக்
கொஞ்சியேயைந்தைந்தாகி லிவற்கொருவகையுமில்ப
வஞ்சியேயமிர்த்போலந் பலனது கொடுப்பார்க் கண்டாய்
வஞ்சியின் கொடி நாளே மாகாராசயோகமென்னே

(இ-ள்) சனியுடனே குருயிருக்க சந்திரனுடனேபுதனுஞ்சேர சூரியனும் செவ்வாயும் சூரியனுமிருக்க இந்த கிரகங்கள் நின்ற ஸ்தானத்திற்கு ஜனன லக்கினம் ஆறு எட்டு ஆசியிருந்தால் சகல சம்பத்தும் பந்துமித்ரரையுமிழந்து தனியாக வறுமையாளனா இருப்பதற்காகும் எ-று 169

அணியோட்டுங்கேந்திர கேந்திர கோணமமர்த்தாராகிந்
பிணியோட்டுங் கிரசதோசம் பிடிப்பதுமில்லை கண்டாய்
மணியோட்டுமரவம்மீறி மண்டலாதிபமே செய்யும்
எணியோட்ங்கிரகூதாஷமில்லையென்றுறைப்பாய் மாதே

(இ-ள்) சனியும் செவ்வாயும் சேர்ந்து சந்திரனுக்கு ஏழாமிடத்தில் நிற்க சூரியனும் ராகும் இவர்களுக்கு நாலாமிடத்தில் இருக்க சுக்கிரனும் குருவும் சந்திரனுக்கு ஆறு எட்டாமிடத்தில் இருந்தால் இந்த சாதகனுக்கு எந்த காலத்திலும் யோகமில்லை எ-று 170

நாட்டமாயோகஞ்செல்வ நரகெஜவசுவயோகம்
ஓட்டமாய்வருவதற்கிங் குபமதுசேளாய்மாதே
கூட்டமுமணியுங்கேத்திர கோணமாய் நின்றாராகிற்
சேட்கிமேயுடையோனாசிச் செகமெலாமாள் வன்றானே

(இ-ள்) சகல கிரகங்களும் கோண திரிகோண கேந்திரத்தினமைதிருக்கபடியான இந்த அடைவனால் அந்த சாதகன் பாக்கியவானல்ல அன்றியும் ஒன்றிரண்டிருந்தாலும் ஜீவனமே கிடையாது எ-று 171

அஞ்சுடிமண்சுபேரா யரசுக்கிலாபமாக
மிஞ்சினோர்நாலினிற்க வரசுடவரனின்றால்
வஞ்சியே ரச்ஜயோ நம் வறுவது நிஜமேகண்டாய்
தஞ்சபாயவேண் செல்வத் தழத்துடனிறுப்பன் மாதே

(இ-ள்) ஒரு ஸ்தானத்தில் ஒருகிரகமும்மற்றொருஸ்தானந்தில் இரண்டு கிரகமிருக்க பின்னால் ஒரு கிரகமிருக்க மூன்றுகிரகங்களும் அறுகிலிருக்க பின்னொறு கிரகமிருக்க அந்த சாதகனுக்கு யோகமே கிடையாது சுக்கிரன் மனித ங்குப்பினர் கவனிக்கும்படியாய் சொன்னார் எ-று 172

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

அத்தனன் வேதமூர்த்தி யவ்வெள்ளிசொன்ன நீதி
தேகமில்லை யோகத் தப்பாா துசெனித்தோற்கெல்லாம்
இத்துணர்வாகப்பர்த் தோ ரியப்பியவசனத்தப்பா
புந்திபற்றிருப்பர்மாதே பூமியிலநேககாலம்

(இ-ள்) சந்திரனிருந்த ராசிநாதன்சதுர்த்தகேந்திரகோணத்திலிருந்தாலும் சேர்ந்திருந்தாலும் வலப்புறமும் நாலாமிடம் ஐந்தாமிடத்திருந்தால் அந்த ஜாதகன் நூறு வயது வரையிலும் இந்திரனைப்போல் போகபாக்கிய யனுபவித்துக் கொண்டிருப்பதற்காகும் எ-று 173

அந்தணன் மந்திரிசோமனவ னிருந்திடிம்வீட்டானும்
உந்தொருவுதையத்தானு மோங்கியேயரவவீட்டார்
இந்தொருநவத்தோர் நன்மை யிவர்சுபங்கொடுப்பர்
சுந்தரரிவரேயல்லாற் சொல்லவும் வேறேயில்லை வேலாம்

(இ-ள்) நான்கு கிரகங்களுக்கு இடையூறில்லாமலும் குறைவில்லாமலுமிருந்து சந்திரன் மீனராசியில் குருவுடனே நில்லாமல் லக்கினத்திற்கு நாலாமிடத்தில் சந்திரன் உச்சமான அம்ஸ ராசியிருக்க செந்தூரமணிந்த புருவமுடையவனே மிகுதியான சிவிகை யோகமுண்டு எ-று 174

அவயோகம்

நீலனுமிரவிசேயு நிலைமதிக்கெட்டோன் பாம்பும்
மூலமாமுதையத்தெட்டோன் மூவிருவோரும் பொல்லார்
ஏலவார்குழலோகளா யிவர்செய்யும்வாலேதென்னிற்
பாலனேயுதித்திட்டாற்போல் பாக்கியங்கொடுக்க மாட்டார்

(இ-ள்) ஜெனன லக்கினத்திற்கு வளர்பிறைச் சந்திரன் நட்சாயிருக்க இவருக்கு ஏலக்கேழாய் தாண்டி நான்கு ஐந்தாமிடத்தில் குரு சுக்கிரனுக்கும் இது நிலையாயிருந்தால் அந்த ஜாதகனுக்குச் சிவிகையோகமுண்டாகும் எ-று 175

ஒருவிடநான்கு மூன்று பேருமாய்கூடினிற்க
அருகிடதப்பாலொன்று மிரண்டப்பாலாகிநின்றால்
திருகிடும்யோகந்தப்புஞ் செல்வமுநிலமைதப்பும்
குருவிடமான சுங்கன் கொஞ்சுயமொழிதப்பாதே



CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) குருவும், சுக்கிரனும் லக்கினத்திலிருக்க சந்திரனும் சேர்ந்து நிற்க, சூரியனுடனே சனியும் அவருடன் செவ்வாயும் ராகு இருந்தால் இந்த ஜாதகனுக்கு வேண்டிய யானைகளுண் டாகுமாதே 176

கூட்டமாய் நின்றோர் முன்பின் கூடிரண்டொருவராக
நாட்டமாநின்றாராகி னகர்விடுப்பதிபோநதீது
ஆட்டமாய்ச் செல்வங்குன்றுப் போமிதுயேரகந்தப்பும்
சேட்டமுஞ் செல்வமில்லைச் செகத்துக்கே கடினாவன்

(இ-ள்) ராகும் மற்றோர்களும் முன்போலக் குறியாயிருக்க ஐம்பத்தாறு தேசமும் புகழும் அகண்ட சாம்ராஜ்ய யோகபோக மும் சகல ராஜாக்களும் வணங்கும்படியான கௌரவமும் பொருந்திய யோகவனாயிருப்பானென்று சுக்கிரன் சொன்ன நீதியேயாகும் எ-று 177

நரலொருகிரகங்கூட நடுமனைக்குள்ளோனாக
ஏல்பிரியாமல் ரெண்டு பேருமாயெதிர் வொன்றாகிற்
பால்பெருஞ் செல்வங்குன்றிப் பாக்கியயோகந்தப்பும்
மால்பெரு கண்ணினாளே மயங்குவனவயோகத்தால்

(இ-ள்) சுக்கிரனுடனே ராகும் மற்ற கிரகங்களும் சூழ்ந் திருக்குமானால் இந்த ஜாதகனை எங்கிருக்கும் ராஜ கூட்டங் களும் சேர்ந்து புகழும் தன்மையான சுபபோக்கியங்களை அனு பவிக்கும் படியான ராஜயோகத்தை யனுபவிப்பதற்காகும் எ-று 178

அஞ்சினிலிரண்டிற்ப்பாப ராஜனுக்கேழின் மந்தன்
மிஞ்சியேசுங்கனின்ற ஞன்மனைபின் னேபாபர்
கொஞ்சியேயரசனின்ற வதற்கிளமதியெட்டாகில்
வஞ்சியே செல்வங்குன்றி வருத்தமாமயோகம்தப்பும்

(இ-ள்) ஜனன லச்கினத்ததிபதி லாபஸ்தானத்திலும் சந்திர னிருக்கும் ஸ்தானத்திற்கும் லாபஸ்தானமாயிருக்க ராகும் குரு வும் சுக்கிரனுமிருந்த ஸ்தானாதிபதிகள் இவருக்குலாபஸ்தானத் திலிருக்காவிட்டாலும் தனியாயிருந்தால் நூறு வயறுவரைய லும் தேவலோகம் புகழும் பிரபுவாயிருப்பதற்காகும் எ-று 179

அஞ்சுக்குநாலின்மைந்த னரசனுக்கேழிற்பூமன்
நஞ்சிஅக்கிரவிநாலி னன்மதியினமாக
இன்சொர்க்கஞ்சாணை சூழ விரவியுநின்றாராகிற்
பஞ்சுக்குளங்கிபோலப் பறந்துடன் போமேசெல்வம்

(இ-ள்) எந்த கிரகத்தின் ஆக்ஷி வீட்டிற்கு லாபஸ்தானத்தி லிருந்தால் காக்ஷிதரும் அருளாசைப்போல அதிக செல்வந்தரா

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

யிருப்பதற்காகும் அந்த கிரகங்களுக்கும் பெற்றிருந்தால் குறையில்லாத அநேகவிதமான செல்வமும் சிவிகையோகமுண்டாகும் எ-று 180

சுங்கனார் சுபம் இருக்கச் சுற்றியேபகையோராக
அங்கையோரைந்தோ நின்ற வம்மடைக்கேழின்மைந்தன்
சிங்கம் போலரசனின்ற சீர்மனைகேழிற் செவ்வாய்
பொங்கமாய் நின்றாராகும் போய்விடும் செல்வமெல்லாம்

(இ-ள்) ராகு நின்ற ஸ்தானத்திற்கு லாபஸ்தானத்தில் குரு சுக்கிரனும் பாபர்க்கு மூன்றிலிருக்க புதன் ராகுக்கு ஏழிலிருந்தால் ஆனை சேனை குதிரை வரகனமமைந்து போய்விடும் செல்வமெல்லாம் எ-று 181

அஞ்சவனின்றவீட்டுக் கல்விரையத்தில் ராஜன்
கொஞ்சமாமதிவீட்டாதுங் குறிகியே வினரயமாகத்
தஞ்சமேருதையத்தானும் தனபருச்சீறாகிவ
மிஞ்சவேயோகம் இல்லை மேலன்றி நிற்பன்மாதே.

(இ-ள்) வளர்பிறைச் சந்திரனுக்கு மற்ற கிரகங்கள் லாபமாக அந்தந்த கிரகங்கள் ஒருவருக்கொருவர் லாபஸ்தானத்திலிருக்க அந்த ஜாதகனுக்கு சதாகாலமும் ராஜயோகவாயிருக் எ-று 182

ஆறுளேசன் சூறைந்தோமூட்சி யம்மனைக்கிறாராக
வேறுபட்டவர்க்கு மந்திரி விரையமாய்நிற்கறோர்
கூறுகொண்டெட்டுக் கெட்டாக்கூடாமணின்றாராகில்
தூறிபட்டுலகமெல்லாந் துர்ச்சனயோகமாகும்.

(இ-ள்) கிரகங்கள் கேந்திரத்திலமர்ந்து திரிகோணத்தில் பாபக்கிரகங்களிருந்தால் சுகமே கிடையாது. ஆனால் ஆபரணமணிந்த இடையையுடைய பெண்ணே அதிக செல்வந்தராயிருப்பர் எ-று 183

அரவமுஞ்சனியுங்கூட வந்தணனிரவிசேர
உரமுடன் சுங்கன் செவ்வாயொவருக்கொருவரெட்
குறையுறிமயும் புந்தி கூடியேநிற்குமாகில்
முறையுடன் போமேசெல்வமொய் குழன்மனேகேளாய்

(இ-ள்) சந்திரனிருந்த ராசிக்கு இருபுறமும் பாபக்கிரகங்கள் முன்பின்னும் இருந்தாலும் ராகுடன் எட்டாமிடத்திலிர்ந்தாலும் இந்திரபதியைப் போன்றவனாலும் பாக்கியத்தை அனுபவிக்க முடியாத கண்டந்தோன்றும் எ-று 184

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சனியடனரசனிற்கச் சந்திரனுடனேபுந்தி
முனியுளன் பாம்புஞ்செவ்வாய் முழுகதிர்கூட நிற்க
இனியவர் நின்றிடத்துக் கிருப்பிடமாறெட்டாகில்
தனியனால் நிற்பவன் யோகத்தவிர்த்திடுந்தரித்திரயோக

(இ-ள்) உதயலக்கினம் அந்த அடைவாயிருக்கக் கண்ட முண்டாகும் லக்கினாதிபதி சந்திரனுடைய ஸ்தானாதிபதியாகில் எமகண்ட யோகமென்பதாம் முன்னோர்கள் சேகரித்து வைத்திருக்கும் பொருளெல்லாம் செலவாய் விடும் எ-று. 185

மந்தனுஞ் செவ்வாய் கூடி மதிக்கேழில்வந்து நிற்கத்
தொத்தமாயிரவி பாம்பு தொடுத்து நாலிவர்க்கேயாக
அந்தமாய் வெள்ளிபொன்னு மம்புலிக்காறெட்டாகில்
எந்தனாளாகிலுந்தா னிவனுக்கே யோகமில்லை.

(இ-ள்) சூரியனும், சனியும், ராகுவும் சேர்ந்திருக்க குரு, வெள்ளிபுதனும் அவர்களைச் சேராமலும் பாராமலும் ஆறு எட்டு என்னும் ஸ்தானங்களில் இருந்தால் அந்த ஜாதகனுக்கு யுத்த களத்தில் லுற்றதைப்போல் பந்து மித்திரரில்லாமல்போய் விடும் எ:று. 186

அணைத்திகுகோண கேந்திர மமர்ந்துநாலைந்து கூட்டம்
பணைத்துமிந்தடைவே நின்றார் பாக்கியவானேயல்ல
இணைத்திருவோன் றிரண்டு மிருந்திடில்யோகமில்லை
பிணைத்துமூன் றொன்றிரண்டு மிருந்திடிற் பிழைப்பேயில்லை.

(இ-ள்) சனியும் ராகும் சேர்ந்திருக்கலக்கினஸ்தானத்திற்கு நட்பாக சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருக்க சுபகிரகங்கள் ஆறாம் இடத்திலாகிலுங் அஷடமஸ்தானத்திலாகிலு இருக்கும் போது ஜனனமான ஜாதகனுக்கு இருப்பதற்கு இடம்இல்லாமலும் புசிப்பதற்கு பாக்கியம் இல்லாமலும் யுத்தகளத்தைப் போல ஜாதகனுடைய குடும்பத்தார் அழிந்து போவதுடன் ஜாதகனும் மரண மாவான் எ-று 187

ஒருவிடமொருவனாய்மற் றொருவிடஇருபேர் நிற்கத்
திருகில்பின்னொருவனாகத் திரும்பவே மூன்றுபேரும்
அருகில்பின்னொர்வனாகி லவனுக்கேயோகம் இல்லை
மர்வுகண்டுரைத்தார் சுங்கன் மானிடரறியவேண்டி

(இ-ள்) சந்திரனுடைய ஸ்தானமாகிய கடகந்தில்ராகுயிருக்கும்போது எந்த ஸ்தானமாகிலும் ஜனன லக்கினமாயிருந்தால் பலவித கொடுமையுண்டாகும் வலபுரத்திலாகிலும் இட புரத்தி

CC-0TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

லாகிலும் இருக்கும் கிரகங்களின் ஆக்ஷி உச்சமாயிருக்கும் நோக்கத்தைக் கண்டாலும் அந்த ஜாதகனுடைய பூர்வீக சொத்துகளெல்லாம் செலவாகி ஜாதகனுமிறப்பதாகும் எ-று 188

சிவிகை யோகம்

சந்திரவிலக்கினகதி சதிர்கோண முதித்திட்டாலும்
வந்தெதிர் கூடினாலும் வலமிடத்திரி நாலைந்தாய்
கொந்தலர்குழலினாலே குலவியே நின்றாராகில்
இந்திரப்பதிபோல் வாழ்த்திங் கிருப்பனே வயது நூறாய்

(இ-ள்) குருவும் சுபகிரகங்களும் சேர்ந்திருக்க சனியும் அங்காரகன் புதன் சுக்கிரனும் கூடினாலும் செவ்வாயும் ராகுவும் சந்திரனுக்கும் குருவும் சேர்ந்திருந்தாலும் ஜனனமான ஜாதகனுக்கு மரணமுண்டாகும் எ-று 189

இந்திர நால்வருக்கு மிடர்குறையிருக்கலாகா
அந்தவொரு ததியுமீள மமருமிருக்கலாகா
வந்தொருநான் கிற்சந்திரன் வளர்ந்துச்சவமிசையாகிற்
செந்துனுதனாளே மிகுதியாய்ச்சிவிகையுண்டே

(இ-ள்) ஆறாமிடத்திலாகிலும் பனிரெண்டாம் இடத்திலாகிலும் சனி சந்திரனும் இருக்க இரண்டாமிடத்திலாகிலும் ஆறாக்காறாம் இடத்திலாகிலும் மூன்றாமிடத்திலாகிலும் மற்ற கிரகங்களிலிருந்தால் ஜாதகன் மரணமாவான் எ-று 190

உதிமதலக்கினத்தான் விறவுயர்தியிடத்தானட்பாய்க்
கதித்தவரேமுக்கேமாய்க் கடந்துடனாலைந்தாகி
எதிர்த்துடன் குரு சுங்கற்கு முதுநிலையாகி நின்றால்
விதித்திடமுண்டுபின்பு வேண்டிய சிவிகையேறும்

(இ-ள்) எட்டாம் இடத்திற் கெட்டாம் இடத்தில் சனி தனியாயிருக்கும் ராகு பகவான் சேர்ந்திருந்தால் அஷ்டமஸ்தானத்திற்கெட்டாம் இடத்திற் குருவும் சூரியனும் புதனும் சேர்ந்திருப்பதுமுன் எட்டாம்இடத்திற் கஷ்டமஸ்தானத்தில் சந்திரன் செவ்வாய் சேர்ந்திருந்தால் நான்காம் இடம் எட்டாம் இடத்திலாகிலும் சுக்கிரன் இருக்க ஜாதகனுக்கு மரணமுண்டாகும் எ-று 191

அரசற்குஞ்சுங்கனாற்கு மதிகுறியாகிநிற்க
முரசொத்துமதியுங்கூடி முன்பவருடனே சேர
இரவியத்துடனேகாகாரி யிவருடன் சேய்ப்பார்ப்பின்றேல்
விரசமுற்றுடையமாதே வேண்டியகெசங்களுண்டே

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

(இ-ள்) சூரியனிருந்த ராசிக்கு எட்டாமிடத்திற்குடையவனுடைய ஸ்தானமே ஜனனலக்னமாயிருக்க குருவுக்கு அஷ்டமஸ்தானத்தோனிருந்த ஸ்தானத்தில் சூரியனிருக்க சந்திரனுக்கு அஷ்டமாதிபதியுடன் ஜனன லக்கினத்திற்கு அஷ்டமஸ்தானாதிபதியும் சந்திரனும் சேர்ந்திருந்தால் சாதகனுக்கு மரணமுண்டாகும் எ-று 192

ஆயுரியோகம்

முன்னோத்துவரமற்றோர் முன்போலக்குறியாய் நிற்க
அன்பதோடாறுதேச மகண்டசாம்பிராசயயோகம்
கொன்னொத்தராசராசர் கூர்த்துகைக்கூப்பினிற்பர்
மின்னொத்தவிடையினாளே மிகையோகஞ்சுங்கனீதி

(இ-ள்) இரண்டு கிரகங்கள் லக்கினத்தில் சேர்ந்திருக்காமல் தனியாயிருக்க அவருக்கு இரண்டு கிரகங்களிருக்க ஆனால் முன்னால் ஒரு கிரகமிருந்தால் நன்மையாகாது அந்த சாதகன் விளையாடுவதற்கு முன்னாலேயே குழந்தையிலேயே மரணமாகும் எ-று 193

சுங்கனோடாவமற்றோர் சூழ்கின்றகுற்போனிற்க
எங்கனுமரசர் கூட்ட மிவனையே தொடர்ந்துனிற்பர்
செங்கருவான் போற்கொடி செகயோகபோகபாக்கியம்
அங்குறுமரகர்சுழ்வுற் றவற்சிவன்மூர்த்தியாவன்

(இ-ள்) சந்திரனிருக்கும் ஸ்தானத்திற்கு முன்பும் பின்னாலும் பாபக்கிரகங்களிருக்க ஏழாமிடத்திற்கு நான்காமிடத்தில் சனியிருக்க சுபகிரகங்களும் மற்ற கிரகங்களுக்கு ஆறு எட்டு பனிரெண்டாமிடத்திலிருக்க அந்த சாதகனுடைய மாதுர்வம்சமும் குழந்தையும் மரணமாகும் எ-று 194

உதித்திடமிடத்தோன்லாப மதியீடனதற்கிலாபம்
பதித்திடவரவம்பொனனும் மருவெள்ளியிருந்த வீட்டார்
குதித்துணிவற்கிலாபங் கூடாமற்றன்னியராகில்
விதித்துடவயது நூறாம் விண்ணுலகெங்குமாள்வன்

(இ-ள்) சந்திரனுக்கேழில் செவ்வாயும் நான்காமிடத்திலும் இரண்டாமிடத்திலும் பாபரிருக்க சூரியனுடனே நாலாமிடத்தானும் சேர்ந்திருக்க சந்திரனுக்கு ஆறாமிடத்தில் குரு உதயமாகி ஆறாமிடத்திலாகிலும் எட்டாமிடத்திலாகிலுமிருந்தால் பிறந்த குழந்தைக்கு மரணமூண்டாகும் எ-று 195

ஆட்சிவீடதற்கிலாப மலரவர் நின்றாராகிற்
காட்சிதந்தரனார்போலக் கனசெல்வம் அதிகமுண்டு

CC-0.TOld Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

தாட்சியின்றதற்குளுச்சந் தானிருப்பாரேயாகிற்
சாட்சியாயநந்தஞ் செல்வந் தழைத்திடுஞ்சிவிகை யோகம்

(இ-ள்) நான்காம் இடத்திற்கு நாலில் செவ்வாய் இருக்க அந்த ஸ்தானங்களுக்கு மத்தியில் சந்திரனும் சனியும் இருக்க குருவும் சுக்கிரனும் அஸ்தமயமாயிருக்க லக்கினாதிபதியும் சூரியன் சந்திரனுடைய ஸ்தானாதிபதிகள் எட்டாமிடத்திலிருக்க ஜனனமான குழந்தையுடன் மரணமாகும் எ-று 196

அரவமே நின்றவீட்டுக்காகும் லாபத்தின் மந்திரி
உரமுள்ள சுங்கன் பாம்புக்கொரு மூன்றி நிற்கத்தானும்
சிரமதன் பாருபுக்கேழில் செல்வானாய் நின்றானாகில்
துரகதகெஜமாந்தொளி யோகமாய்ச் செல்வர்மாதே

(இ-ள்) லக்கினாதிபதியும், பூர்ணாயருரனிருந்த ஸ்தானத்திற்கு எட்டாம் இடத்திற்கு பின்புறமாக சனியிருந்தஸ்தானாதிபதியும் பலயீனமாயிருக்க சுபக்கிரகங்களும் பார்வை செலுத்தாமலிருந்தால் அந்த ஜாதகனுக்குசந்தேகமில்லாமல்மரணமாகுமென்றுணவீர் எ-று 197

நிறைமதியதற்கு மற்றோர் நிற்கவேலாபமாக
அறையதர்கூட நில்லா தவற்கவர்லாபமாகக்
குறைவின்றி நின்றாராகிற் கொடுப்பரேயமிர்தமேயாகும்
பிறையுயர்ந்ததுபோற்செல்வம்பெலக்குமென்பிருகுசொன்னார்

(இ-ள்) எந்த ஸ்தானதிபதியாகிலும் வக்ரம் அஸ்தமயமாயிருந்தால் அந்த ஸ்தானமும் தீது அந்த ஸ்தானத்தின் நவக்கிரகங்களுந் தீதாக நீசமடைந்திருந்தால் சரீரவேதனை யதிகமாயிருப்பதுடன் தாயும்பிள்ளை இருவருக்குமென்று சொல்ல வேண்டும் எ-று 198

## கொண்டயோகம்

அணியிருகூட்டகேந்திர மமர்திடிற்றிரி கோணத்தும்
துணித்திருந்தோர்கள் பாபராயினுஞ்சுகமேயில்லை
பணியணியிடைனாளே பற்றாத செல்வமுண்டு
மணியரவுள்ளேயாகின் மாண்டிடுங்குழவிதானே

(இ-ள்) கிரகங்கள் ஒருவருக்கொருவர் கேந்திரமாகிலும் கோணமாகிலும் சேராமலும்இருந்தாலும் இரண்டு கிரகங்களை சேர்ந்து கேந்திர கோண ஸ்தானத்திலிருந்தால் அந்த கிரகங்களுக்குப் பகை கிரகங்களும் கேந்திரகோணம் பெற்றிருந்தால் ஜாதகனுக்கு நன்மையும், துன்பமும் விபரமாய்ச் சொல்வோம் கவனிப்பீர்கள். எ-று

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

சந்திரனிரிப்பிடத்துச் சரியிருபுற மாய்ப்பாபார்
முந்திபின்னிருவர் கூடி முகந்தெட்டி லரவனின்றால்
இந்திரபல்யானாலு மிறந்திடும் பாக்கியனில்லாக்
கொங்தலர்குழலினாளே குழவியுமன்றேசாமே

(இ-ள்) நான்கு கிரகங்கள் சேர்ந்து கேந்திர கோணஸ் தானத்திலிருந்தாலும் சுக்கிரன் இவர்கட்கு கேந்திரமானாலும் கோணமாயிருந்தாலும், ஆனால் சந்திரனும் சேர்ந்து இந்த கிரகங்களுக்கு நான்கு ஐந்தாமிடங்களிலிருக்கலாகாது ஆனால் சப்த கிரகங்களும் ஒன்றாய் சேர்ந்திருந்தால் அடியிற் குறிபித்த யோக பலனுண்டாகும் எ-று. 200

உதையமிந்தடை வேயாகிற் சிதையுமேகுழவிதானும்
அதையதானுதையோனாகி யம்புலி விட்டனாகி
இதையுடனிருந்தராகிலெமகண்ட யோகமென்று
புதைபொருட்செல்வமுண்டாம் போய்விடுங்குழவிகூட

(இ-ள்) மேற்குறிப்பித்த விதமாய் கிரகங்களிலிருந்தால் அந்த சாதகன் தன் தாயை சம்பத்துடன் கீர்த்திப்ரகாசமாய் ஐஸ்வரின் வானாயிருப்பதுடன் குதிரை வாகனமும் பல்லாக்கு வாகன முடையவனாய் ராசயோகத்தையனுபவிக்கும் சிம்மாசனமும் பொருந்தியிருக்கும்படியான தனதான்ய சம்பத்துடன் நூறுவயது வரை பூமியில் ஜீவிப்பதற்காகும் எ:று. 201

அருக்கார் மந்தன்சேயு மவ்விடம் பாம்புநிற்க
குருநீலன் வெள்ளிபுந்தி கூடாரெட்டாகில்
இருக்கவேபாக்கிரமில்லையிவன் பிறந்தவ்விடத்திற்
செருகளம்போலேபிள்ளை சேர்ந்திடுமெம்புறக்தே

(இ-ள்) கேதுகோண கேந்திரமிரும்பதற்கில்லாமல் குரு வக்ரமாயிருந்த சாதகனுக்கு பலவிதமாகிய அவகேடாகியதுன்பங்கள் துயரங்களுண்டாகி நூறுவயதுவரையிலும்பலவிதஇடையூறுவருக்கே யல்லாமல் வாகனயோகமில்லை எ-று 202

மந்தனும்பாப்புங்கூட மனைக்கு நாடுரவிசேயும்
தொந்தமாய் நிற்கமற்றோர் சுபருமேயெட்டாகில்
கெநதிடத்ததுவும் பாக்கியஞ் செல்வமுநாசமாகும்
பொந்தடக்கிலேசனாகிப் போகுமன்திரவுனில்லா

(இ-ள்) கிரகங்கள் ஒன்று, இரண்டு மூன்றான ஸ்தானங்களிருந்தாலும் அவ்விதமின்வு அந்தந்த ஸ்தானங்களி மாறி மாறியிருந்தாலும் சாதகனுக்குப் பலவிதமாகிய கஷ்டநஷ்டமுந்துயரமுண்டாகும் எ:று. 230

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இந்திடவணியேயாக வெந்திவிடுகையமாகில்
வந்திடுந்திம்புண்டாகும் வலமிடமாகிலுந்தான்
நொந்திடுமாட்சியுச்ச மாகினுநோக்காடுண்டு
சிந்திடுஞ்செல்வமெல்லாஞ் செலவழிந்துயிரிழக்கும்

(இ-ள்) கிரகங்கள் ஜனனலக்கினத்திலும்இரண்டுமூன்றாவது ஸ்தானத்திலும் ஒவ்வொரு கிரகங்களாய் நிற்காமல் மறுபடியும் மூன்று,இரண்டுமாயிருக்கவும் மறுபடியும் மற்ற கிரக வீடுகளும் மூன்று, ஒன்று இரண்டாக சேர்ந்திருந்தால் அந்த ஜாதகனுக்கு வரவுக்கு தகுந்த லாபம் வருமேயல்லாமல் அதிகமான செல்வ மில்லையென்றுணர்வீர் எ-று.

பார்ப்பனும் றபர்கூடிப் பற்றியேயணியாய் நிற்கக்
கார்ப்புடனுதையமந்தன் கனல்புத்திசுங்கன் கூட
நேர்ப்புடன் செவ்வாய் பாம்பு நிலவுபொன்வணியேயாகில்
சீர்ப்பெறவுதித்தகானை செந்திடுமிரவுநில்லா

(இ-ள்) ஜனன லக்கினத்திற்கு இரண்டு பக்கம் மூன்று கிர கங்களிருக்க மற்ற கிரகங்கள் தனித்தனியாயிருக்க அதிகயோக மில்லாமலிருந்தாலும் ஆயுள் அதிகமாய் பூரணாயுசாயிருப்பதற் காகும் எ-று. 205

ஆறுமீராறுக்காறி லமபுலிசனிபுநிற்க
ஈறுமோராறுக்காறி லிருந்திடவிரவிபாம்பும்
ஒராறுக்காறுமூன்றி லொருவனாய்ப்பூ பணிற்கப்
போறுக்கேழ்மூண் மற்றோரிருந்திடிற்குய்விசாமே.

(இ-ள்) ஏதேனுமொருராசியில் நான்கு கிரகங்கள் கூட்டங் கூடி இருக்க அதற்க்குபக்கத்திலும் மூன்று கிரகங்களிருக்கமற்ற முள்ள கிரகங்கள் வேறு கிரகங்கள்சேர்க்கையின்றி ஒவ்வொருவ ராகவே இருப்பாரேயானால் அந்த சாதகன் புகழ்ச்சியடையந் தக்க செல்வமில்லையென்பதே என்றும் அவன் வயதுள்ளவரை யில்வறுமையுடையவனாய்பிரபலமடையயோகமில்லாதவனாய் கொண்டயோகத்தையேஅனுபவிப்பானென்றும்கூறுகஎறு 206

ஒரெட்டிற்காரி யொருமையால் பாவுபுஞ்சேர
எரெட்டிற்கெட்டில் ராச னிரவியுந்திட
சிரெட்டிற் கொட்டிற்சோமன் முடிகியேசெவ்வாய்கூட
நாலெட்டிற்செட்டிற்செட்டிற்சுங்க னாசபாய்க்குழவிசாமே

(இ-ள்) கிரகங்கள் ஒன்றிரண்டாக ஒவ்வொரு ஸ்தானத்தி லிருக்க மற்றகிரகங்கள் இரணடிரண்டாக சேர்ந்திருந்தாலும் ஒருவருக்கொருவர் பார்வைசெலுத்தாமல் ஆறுஎட்டுயென்னும் அஸ்டமஸ்தானத்திலிருந்தால் முன்னோர் சேர்ந்து வைத்திருந்த ஆஸ்தி பூஸ்திக்களெல்லாம் செலவழித்துண்பார்கள் எ-று 207


CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy

இரவிக்கேகரெட்டோனின்ற விம்மனையுதையமாக
அரவுக்கோரெட்டோனின்ற வ்ம்மனையிர வியாகப்
பரவியமதிக்கெட்டோனும் பண்புள்ளவுதையத்தெட்
உரமுடன் க்ோமன்கூடி லோரிரவுதனிற்சாககேடோன்

(இ ள்) ஆறாமிடத்தில் சந்திரனிருக்கஆறுகிரகங்கள் அணி யணியாய் சேர்ந்து நிற்காமலும் பார்வை சொலுத்தாமலும் ஒருவர்கொருவர் ஆறு எட்டாமிடமாகிய சஷ்டாஷ்மஸ்தானத் திலிருந்தால், பெரியோர் சேகரித்தது வறுமையாற்கலங்கி பர தேசி கோலமாய்த் திரிவதற்காகும் எ:று 208

கூடியவிருவர்முன்னே கூடாமலொருவனிற்கந்
தேடியவதற்குமுன்னே செப்புமோரிருவர்நிற்க
நாடிமூன்னொருவனின்ற னலமில்லைபிறந்தபிள்ளை
ஆடிடுமதற்கு முன்னே பறுதியமெமபிறந்தே

(இ-ள்) இரண்டாவது ஸ்தானாதிபனும் லக்கினாதிபதியும் மூன்றாமிடத்தானும் மற்ற கிரகங்களுக்குஇரண்டாமமிடத்திலி ருந்து தீதாக குறிப்பிடு நின்றால் அந்த சாதகனுக்கு அவயவ பங்கமாவதுடன் மனங்கலங்கி கைப்பொருள் சேதமாவதுடன் அண்டி பிழைக்கும் ஸ்தானத்திலும் பலவிதகஷ்டநஷ்டங்களேற் பட்டு அற்பாயுசாயிருப்பதாகும் எ:று

திங்கள் பின்முன்னிரண்டு பாபருந்திரண்டு நிற்க
மங்களவானேழந்த மனைக்கு நான் மந்தனாக
அங்குளசுபருமற்றோர்க் காறொர்க்காறெட்டுபனிகரண்டாகில்
எங்குளமாத்ருவம்ச பிறக்குமேர் கூவிட

(இ:ள்) கிரகங்கள் தானிருந்த ஸ்தானத்திற்குத் தவறாக மற்ற கிரகங்கள் தமதுஸ்தானத்திற்கு ஆறுஎட்டாமிடத்திலிருந் தாலும், அல்லது ஆசி உச்சமாயிருந்தாலும், அந்த சாதகன் சேகரித்த தனதான்ய சம்பத்தெல்லாம் பலவிதமாய் சிதறிபோவ துடன் இருக்கும் ஸ்தானமும் தவறு கலங்கி நிற்பதுடன் அற் பாயுசாயிருப்பார்கள் எ-று 220

சோமனுக்கேழிற்செவ்வாய் நாலிருபுறமும்பாபர்
ஆமெனுமலரிசோடேயந்தநாலோனுங்கூடக்
காமனுக்காரில் மன்னனுதையவானெட்டி நிற்றாற்
சாமெனுங்குழவிமாதா சரியன் றேயிரிவுமட்டில்

CC-0. Old Tamil Texts. Digitized by Sri Muthulakshmi Research Academy